விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: இருபது

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 05 ஞாயிற்றுக்கிழமை (21.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 337

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெ



வத்திக்கானில் நேற்று 24 கர்தினால்கள், பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பரினால் நியமிக்கப்பட்டனர். புதிய கர்தினாலாக நியமிக்கப்பட்ட இலங்கையைச் சேர்ந்த கலாநிதி மல்கம் ரஞ்சித் ஆண்டகை மற்றும் ஏனைய சில கர்தினால்களையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி கைதானால் எதுவுமே செய்ய முடியாது

## பிரிட்டன் கைவிரிப்பு

(லண்டன்)

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய போர்க் குற்ற அடிப்படையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைது செய்தால், அந்த விவகாரத்தில் தலையீடு செய்ய முடியாதென பிரிட்டன் வெளியுறவுச் செயலாளர் வில்லியம் ஹேக் தெரிவித்துள்ளார். எதிர்வரும் டிசம்பர் மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரிட்டனுக்கு விஜயம் செய்ய உள்ள நிலையில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் 18 பிறக்கும் குழந்தைகளுக்கு பரிசு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த நாளில் பிறக்கும் குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஆண்டுகளில் நவம்பர் மாதம் 18ஆம் திகதி பிறக்கும் குழந்தைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்ததிட்டத்திற்கு மிஹிமத் சுவதரு திலின பிரதானய எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு 7500 ரூபாய் பரிசு வழங்கப்படவுள்ளது. (ச-5)

☞ உள்ளே

பிரபல ஜோதிடர் சிவல்புரி சிங்காரம் எழுதும்

கார்த்திகை மாதப் பலன்கள்

உங்களுக்கு எப்படி?

## வடக்குக் கிழக்கில் காற்றுடன் கூடிய மழை

(கொழும்பு)

நாட்டில் தாக்கம் செலுத்துகின்ற பருவப் பெயர்ச்சி காரணமாக பல்வேறு பிரதேசங்களிலும் அதிக மழை பெய்யக்கூடும் என காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மாலை அல்லது இரவு வேளைகளில் அதிகளவான மழை பெய்யக்கூடும். குறிப்பாக வடக்கு கிழக்கு, ஊவா மற்றும் வடமத்திய மாகாணத்தில் அதிக காற்றுடன் கூடிய மழை வீழ்ச்சி ஏற்படும்.

இடி மின்னல் தொடர்பில் மக்களை எச்சரிகையாக இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

## அதிர்வால் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளில் நேற்றுப் பிற்பகல் வேளைகளில் பூமி அதிர்வு ஏற்பட்டதாக பரவிய தகவலால் பரபரப்பு ஏற்பட்டது.

சுமார் 5 நிமிட இடைவேளையில் இந்தப் பகுதியில் உள்ள வீடுகள் அதிர்ந்ததாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே குடாநாட்டில் மழை காலம் தொடர்கின்ற

(20ஆம் பக்கம் பார்க்க)

# அரசையோ புலிகளையோ குற்றம் சுமத்த முடியாது

## இறுதி யுத்தம் தொடர்பில் வைத்தியர் தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதி யுத்தம் தொடர்பில் அரசாங்கத்தையோ தமிழீழ விடுதலைபுலிகளையோ குற்றம் சுமத்தமுடியாது என டாக்டர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களைப் போன்று இலங்கையில் வேறுஎந்தமக்களும்துன்பங்களை அனுபவித்திருக்க முடியாது.

ஒரு வைத்தியசாலையில் ஆயிரக்கணக்காக காயமடைந்தவர்களும், இதைவிட உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் சாதாரண மக்களும் வைத்தியசாலையே தஞ்சம் என அடைக்கலம் புகுந்தனர்.

இவ்வாறான நிலையில் வைத்தியசாலைகள் பெரும் அசௌகரியங்களைஎதிர்நோக்

(20ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் துப்பாக்கிச் சூடு ஒருவர் பலி; மற்றொருவர் காயம்

(கொழும்பு)

கொழும்பின் பொரளையில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமாலை பொரளையின் சன நெரிசலான பகுதியில் பலர் கண் முன்னே நடைபெற்றுள்ளது.

காயமடைந்தவர் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

குறித்த நபர்கள் இருவரும் வான் வண்டி ஒன்றில் பயணித்துக் கொண்டிருக்கையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக ஆரம்பக் கட்ட விசாரணை

(20ஆம் பக்கம் பார்க்க)



2011ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் குறித்து நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தரவுடன் நிதியமைச்சரும் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்துவதை படத்தில் காணலாம்.

## உயர்தர பெறுபேறு அடுத்த மாதம்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த மாதம் முதல் வாரத்தில் வெளியாகும் என பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

க.பொ.த. உயர்தரப் பரீட்சை கடந்த ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகி செப்ரம்பர் மாதம் 3-ம் திகதி வரை நடைபெற்றது. இப்பரீட்சையில் 2 இலட்சத்து 70 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர். (ச-2)

## முன்னாள் போராளிகள் நூறு பேர் பூந்தோட்டம் முகாமிலிருந்து விடுதலை

(வவுனியா)

வவுனியா பூந்தோட்டம் தடுப்பு முகாமில் புனர்வாழ்வு வழங்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் நூறு போராளிகள் இன்று விடுதலை செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு நிகழ்வை முன்னிட்டே இவர்கள் விடுதலை செய்யப்பட உள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வவுனியா கலாசார மண்டபத்தில் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறும் நிகழ்வில் இந்த நூறு போராளிகளும் பெற்றோர் மற்றும் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக இவ்வமைச்சு கூறியுள்ளது.

அதேவேளை பொலநறுவை சேனபுர தடுப்பு முகாமில் புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலிகளின் நூறு போராளிகளே இன்று விடுதலை செய்யப்பட உள்ளதாக புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீர

(20ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகா மீண்டும் சிறையில்



(கொழும்பு)

சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த சரத் பொன்சேகா மீண்டும் சிறைக் கூடத்துக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் அவர் முன்பு அடைக்கப்பட்டிருந்த சிறைக் கூடத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

கடந்த 16ஆம் திகதி முதல் நேற்று வரை பொன்சேகா சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக்

(20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சகல அரச திணைக்களங்களிலும் நாளை தேசியக் கொடி ஏற்றவேண்டும்

## பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பை அடுத்து நாளை திங்கட்கிழமை சகல அரச திணைக்களங்களிலும் காலை 9.00 மணிக்கு தேசியக் கொடியேற்றி தேசிய கீதம் இசைக்கப்படல் வேண்டும்எனபொது நிர்வாகஉள்நாட்டுஅலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் காலை 9.05 மணிக்கு புதிதாக ஆரம்பமாகும் யுகத்தினைப் பற்றி பணித்தொகுதியை அறிவூட்டும் வகையில் நிறுவனத் தலைவர்கள் சுருக்கஉரை ஒன்றையும் நிகழ்த்த வேண்டும்.

இச் சுருக்கஉரையில் ஜனாதிபதியால் முன்வைக்கப்படும் மஹிந்த சிந்தனையின் வருங்கால தொலை நோக்கு வேலைத்திட்டம்மற்றும் இலங்கையை உன்னதமான நாடாக அமைக்கும் அரசாங்க நோக்குப் பற்றிய விடயங்கள் அவ் வேலைத்திட்டத்தில்உள்ளடக்க வேண்டும்எனஅரச நிர்வாகஉள்நாட்டு அலுவல்கள்அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க அறிவித்துள்ளார். (ச)

# ஜே.வி.பியின் லெபனான் தொடர்பு இரகசியப் பொலிஸ் விசாரணை

(கொழும்பு)

கொழும்பில் நடைபெற்ற ஜே.வி.பியின் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட லெபனான் நாட்டுத் தம்பதியர் கைதுசெய்யப்பட்டு நாடுகடத்தப்பட்ட பின்னர் ஜே.வி.பிக்கும் லெபனானிலுள்ள அதன் நேச அமைப்புக்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

லெபனான் நாட்டைச் சேர்ந்த முஹமட் ஹெட்டேயிட் என்பவரும் அவரது துணைவி சாரா என்பவரும்கண்டியில் வைத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமைகைதுசெய்யப்பட்டு நேற்று அதிகாலை கொழும்பு கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து புறப்பட்ட கட்டார் விமான சேவைகள் நிறுவனத்திற்கு சொந்தமான விமானமொன்றில் நாடு கடத்தப்பட்டனர்.

லெபனான் நாட்டுத் தம்பதியினர் ரகசியப் பொலிஸாரால் நேற்று முன்தினம் முழுவதும் தடுத்துவைக்கப்பட்டு கடுமையான விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிகிறது.

ஜே.வி.பியுடன் அவர்களுக்குள்ள தொடர்புகள் பற்றியதாகவே இந்த விசாரணைகள் அமைந்திருந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

லெபனானிலுள்ள இளைஞர் அமைப்பு ஒன்றின்தலைவராக முஹமட் ஹெட்டேயிட் உள்ளஅதேவேளை அவ்வமைப்பு ஜே.வி.பியின் அரச எதிர்ப்புப் பிரசாரங்களுக்கு நிதியுதவிகளை வழங்கிவருகின்றதா என்பதையிட்டும் இரகசியப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடுகடத்தப்பட்ட தம்பதியரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இது தொடர்பான விபரங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கவில்லை என குறிப்பிடும் பொலிஸார், இருந்தபோதிலும் வெளிநாடுகளில் அரச எதிர்ப்புப் பிரசாரங்களில் குறிப்பிட்ட லெபனான் அமைப்பு சம்பந்தப்பட்டுள்ளமைக்கான ஆதாரங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் கூறினார்.

2007 ஆம் ஆண்டு ஜே.வி.பியின் இளைஞர் அணி மகரகமவில் நடத்திய சர்வதேச மாநாடொன்றில் இவர்கள் கலந்துகொண்டிருந்தார்கள். இதன் மூலமாகவே ஜே.வி.பிக்கும் இவர்களுக்குமிடையில் உறவுகள் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# மேற்குலக நாடுகள் நிறுத்தியதால் சீனா உதவிகளை வழங்குகிறது

## மேர்வின் சில்வா தெரிவிப்பு

மேற்குலக நாடுகள் உதவிகளை நிறுத்தியதனால் சீனா உதவிகளை வழங்குவதாக பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைத் திட்டத்தை மேற்குலக நாடுகள் இரத்துச்செய்தபோது நாட்டின் ஆடைக் கைத்தொழிலை பாதுகாப்பதற்கு சீனா முன்வந்துள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைத்திட்ட இழப்பினால் எந்தவொரு ஆடைக் கைத்தொழிற்சாலையும் மூடப்படுவதனை அனுமதிக்கமுடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஆடைக்கைத்தொழில் துறைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் பாதுகாக்கப் போவதாக சீனா உறுதியளித்துள்ளது. ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்தின் மீது சீனா நன்மதிப்புடன் செயற்பட்டு வருகிறது.

கிரிபத் கொடப் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வுஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# பிள்ளைகளை பாதுகாக்கும் பொறுப்பு பெற்றோரிடம் மட்டுமே உள்ளது

## நீதிபதி ஸ்ரீநிதி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பெற்றோர்களாலும் பிள்ளைகள் வன்முறைக்குட்படுத்தபடும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன். தமது பிள்ளைகளை பாதுகாத்து அவர்கள் தவறான பாதைக்கு செல்லாதுதடுக்கவேண்டிய பொறுப்பு பெற்றோருக்கே உண்டு என பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் தெரிவித்தார்.

உயர் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றம் ஆகியவற்றின் அனுசரணையுடன் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட பாடசாலை அதிபர்களுக்கான மனித உரிமை தொடர்பான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும்உரையாற்றுகையில், சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் முற்றாக நிறுத்தப்படவேண்டும். பாடசாலைகளில் சிறுவர்களை அடித்து துன்பப் படுத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. பிறரை அடித்து துன்பப்படுத்துவது மனித உரிமை மீறலாகும். மாணவர்களின் தவறுகளுக்கே அவர்கள்தண்டிக்கப்படுகின்றனர். அவர்களின் எதிர்காலம் சிறப்புற அமையவேண்டும்என்பதற்காகவே அதிபர்கள், ஆசிரியர்கள் தண்டிக்கின்றனர்.

எனினும் பிறரை வன்முறைக்குப்படுத்துவது சட்டத்தின் படி ஏற்புடையது அல்ல என்ற காரணத்தால் அவர்கள் மீதான தண்டனைகளை நிறுத்தியே ஆகவேண்டும்.

உங்களை நான் இங்கு சந்தித்தது நீதிமன்றத்தில் உங்களை சந்திக்கக்கூடாது என்பதற்காகத்தான். நான்நீதிபதியாக இருப்பதனால் என்னிடம் பல வழக்குகள் வருவதுண்டு. சிறுவர்கள் தொடர்பான வழக்குகளை நான் இரகசிய அறையில் தான் நடத்துவேன். ஏனெனில் அவர்களின் எதிர்கால வாழ்க்கையினை நாம் சிந்திக்கவேண்டியுள்ளது.

சிறுவர்கள் பல்வேறுபட்டவர்களால் வன்முறைகளுக்குஉட்படுத்தப்படுகின்றனர். பாடசாலைகளில் ஆசிரியர்களால்பலமாணவர்கள்பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இத்தகைய நிலை சட்டவிரோதமாகும். மாணவர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியவர்கள் அதிபர்கள், ஆசிரியர்கள் தான். அவர்களால் பாதிக்கப்படுவது மனவேதனைக்குரியது.

பாடசாலை மாணவர்கள் சில காரணங்களுக்காக வெளியேற்றப்படும் சந்தர்ப்பத்தில் அவ் மாணவர்களை ஏனைய பாடசாலைகளை ஏற்றுக்கொள்வது இல்லை. அவ்வாறான நிலையில் அந்த மாணவனின் கல்வி உரிமை பறிக்கப்படுகிறது. இந்த நிலை மாறுபட வேண்டும்.

மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபடுத்தப்படுவதும் தடைசெய்யப்பட்டுள்ளது. எந்தவொரு காரணத்திற்காகவும் மாணவர்களைப் போராட்டத்திற்கு அனுமதிக்கக்கூடாது. பல சந்தர்ப்பத்தில் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பெற்றோர்கள் பாடசாலையில்தனது பிள்ளைகள் படிக்கிறார்கள் என நம்பியிருக்க அவர்களைப் போராட்டத்திற்கு அனுமதிப்பது பிழையானது.

இத்தகைய நிலையால்பல மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் பாலியல் உறவுகள் தூண்டும்வகையில் வாசகங்கள் எழுதுபவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இன்றைய காலகட்டத்தில் விதவைகள் மறுதிருமணம் செய்யும் சந்தர்ப்பத்தில் அவர்களின்பிள்ளைகள் தொழிலுக்குட்படுத்தப்படும் அதே சந்தர்ப்பத்தில் தகாத உறவுகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். அது மட்டுமன்றி வெளிநாட்டவர்களினால் சிறுவர்கள் வளர்ப்பதற்காக கொண்டு செல்லப்பட்டு விபச்சாரத்திலும் ஈடுபடுத்தப்படுகின்றனர். இவ்வாறு சிறுவர்கள் பல்வேறு தரப்பாலும் வன்முறைக்குட்படுத்தப்படுகின்றனர்.

எனவே சிறுவர் பாதுகாப்பிற்கும் அவர்களின் வளர்ச்சிக்கும் பெற்றோர்களின் பங்களிப்பும் அதிபர், ஆசிரியர் பங்களிப்பும் இன்றியமையாத ஒன்றாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)






மக்கள் வங்கியின் புதிய சேமிப்புப்பத்திரமான ஆஷ்சர்யய சேமிப்புப்பத்திரத்தை அறிமுகம் செய்வதற்கான பேரணியை படங்களில் காணலாம்.

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் மாட்டின் லேனில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பிற்கு :- 0770452612

(3103)

**சாப் (Sharp) போட்டோப்பிரதி இயந்திரங்கள் தேவை**

நல்ல நிலையிலுள்ள Sharp போட்டோப்பிரதி இயந்திரங்கள் மொடல் SharpAR 5316 SharpAR 5516 மற்றும் Sharp 1118 பழைய மெசின்களும் தேவை.

தொடர்பு:- 0770724800 0774012707

(2899)

**வீடு விற்பனைக்கு**

இல.59 சீனிவாசகம் வீதியில் அமைந்திருக்கும் 2 1/2 பரப்புக் காணியில் அமைந்தவீடு விற்பனைக்குண்டு.

(3101) தொடர்பு:- 0776146253

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடனடியாக உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தித் தருகிறோம்.

(Computer Repair)

அழையுங்கள்:- 0771329513

(2898)

செல்லா சினிமா(நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30

# பாலம் உடைந்ததில் லொறி தடம் புரண்டது

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த லொறி பாலம் உடைந்ததில் தடம்புரண்டது.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சுமார் 300 கொங்கிறீற் கற்களுடன் சென்று கொண்டிருந்த லொறியே இவ்வாறு தடம்புரண்டது குறிப்பிடத்தக்கது.

மேற்படி சம்பவம் இடம் பெற்ற பாலத்தில் விபத்து ஏற்படும் அபாயம் உள்ளதென பல தடவைகள் உரியவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சுட்டிக் காட்டப்பட்டது. (ச-51)

# மர்மப்பொருள் வெடித்து குடும்பஸ்தர் படுகாயம்

(சாவகச்சேரி)

கெற்பெலி கிழக்குப் பகுதியில் விறகு வெட்டச் சென்ற குடும்பஸ்தர் மர்மப் பொருளொன்று வெடித்ததில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சாமிஅப்பன் கனேஷராஜா (வயது 37) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

மேற்படி நபரின் உடம்பில் பல இடங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச-29)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கூட்டுறவு சங்கங்களுக்குமான கலந்துரையாடல் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு சகல பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் , பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் , கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் , கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் தலைவர் மற்றும் பொது முகாமையாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (2)

# இராசி பலன்

***21.11.2010***
***(கார்த்திகை 5, ஞாயிற்றுக்கிழமை)***
***பூரணை முன்னிரவு 11.59 மணிவரை***
***பரணி முற்பகல் 8.14 மணிவரை***
***இராகுகாலம் 4.40-6.10 மணிவரை***
***சுபநேரம் 9.10-10.40 மணிவரை***
***பூரணை விரதம்,*** திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம், சர்வாலய தீபம்.

**மேடம்** நினைத்ததை முடித்து நிம்மதி காண வேண்டிய நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்கள் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள், மனக்குழப்பம் அகல பிறர் உறுதுணை புரிவர்.

**இடபம்** குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், உடல் நலம் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், உடல் நலம் சீராகும்.

**மிதுனம்** உறவினர்கள் மூலம் அனுகூலம் கிடைக்கும், புகழ் கூடும், பணப் புழக்கம் அதிகரிக்கும், விஷ்ணு வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்ச்சி தேவை.

**கடகம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும், அந்தஸ்து உயரும் நாள், நீண்ட நாளைய திட்டமொன்று நிறைவேறலாம், பண வரவுண்டு.

**சிங்கம்** உற்ற நண்பர்கள் உறுதுணை புரிவர், துடிப்புடன் செயற்பட்டு பாராட்டுக்களைப் பெறுவீர்கள், அந்நிய தேச தொடர்பு அதிகரிக்கும்.

**கன்னி** வியாபார போட்டிகள் குறைவடையும், தந்தை வழி தனலாபமுண்டு, பற்றாக்குறை தீர்ந்து பண வரவு கிட்டும் நாள், பிரயாணத்தின் மூலம் நன்மையுண்டாகும்.

**துலாம்** கவனக் குறைவால் சில பொருட்கள் விரயமாகலாம், வாழ்க்கைத் துணை வழியே விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது, போசன சுகமுண்டு, பணக் குறைவுண்டு.

**விருச்சிகம்** உறவினர் வருகையால் உற்சாகமடையும் நாள், தொழில் வளர்ச்சிக்கு அந்நியர் ஒத்துழைப்பு வழங்குவர், உஷ்ண நிலையுண்டு, பொருளாதார நிலை உயரும்.

**தனுசு** ஆரோக்கியம் சீராகி ஆனந்தமடையும் நாள், அடுத்தவர் நலனில் கூடிய அக்கறை காட்டுவர், பெரியோர் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்

**மகரம்** பிறருக்காக பொறுப்புச் சொல்லி வாங்கிய தொகை வந்து சேரும், மறைமுகப் போட்டிகள் மாறும், தொழில் முன்னேற்றமுண்டு, பிள்ளைகளால் பெருமையான செய்திகள் வந்து சேரும்.

**கும்பம்** புண்ணிய காரியங்களுக்கு செலவிட்டு மகிழ்வீர்கள், பெற்றோர் வழியில் ஏற்பட்ட தகராறுகள் விலகும், தொலைபேசி வழித்தகவல் ஆச்சரியப்பட வைக்கும்.

**மீனம்** வரவு திருப்தி தரும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், நீண்ட நாளைய பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும், உடன் பிறப்புக்கள் உதவிகள் கிடைக்கும்.

**வளவன்**

# அழகியல் போட்டி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மாற்று வலுவுடையோர் தினத்தை முன்னிட்டு யாழ். கல்வி வலய பாடசாலைகளில் கல்விபயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான அழகியற்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலையில் நடை பெறவுள்ளது.

இப்போட்டிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (2)

# வீதியை செப்பனிட்டுத்தருமாறு மக்கள் கோரியுள்ளனர்

(புன்னாலைக்கட்டுவன்)

அச்செழு முகாம் ஊடாகச் செல்லும் நீர்வேலி புன்னாலைக்கட்டுவன் வீதி தற்போது மக்கள் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்டுள்ளதால் மேற்குறிப்பிட்ட வீதிக்குப் பதிலாக நாவோலை மற்றும் மயானவீதி மக்கள் பாவனைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இவ்வீதியானது மிகநீண்டகாலத்துக்குமுன்னர் தார் ஊற்றி செப்பனிடப்பட்ட போதும் தற்போது குன்றும் குழியுமாக காட்யளிக்கிறது. இப்பாதையூடாக அயற்கிராமமான ஈவினை, புன்னாலைக்கட்டுவன் மற்றும் நீர்வேலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், விவசாயிகள் எனப் பலர் பயணித்து வருகின்றனர்.

இதேவேளை பருவமழை காலம் நெருங்கியுள்ளதால் மழைநீர் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, காலம் தாழ்த்தாது இவ்வீதியை செப்பனிடும் பணியை மேற்கொண்டு சீரான பிரயாணத்துக்கு வழி செய்யுமாறு வலி. கிழக்கு பிரதேசசபைச் செயலாளரிடம் அச்செழு ப்குதி வாழ் மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (ஸ்ரீ-2-79)

# வாரம் ஒரு தகவல்

## சிறப்புப் பரிசு

"துப்பாக்கி சுடும் போட்டியில் உங்களுக்கு சிறப்புப் பரிசு கொடுத்தார்களாமே"

"ஆமாம்"

"நான் ஒரு பத்திரிகை நிருபர். உங்களைப் பேட்டிகான வந்திருக்கிறேன்"

"நன்றி"

"அதைப் பற்றிக் கொஞ்சம் விபரமாகச் சொல்ல முடியுமா?"

"துப்பாக்கி சுடுவதில் 3 விதம் உண்டு. அதாவது படுத்துக் கொண்டு சுடுவது, நின்று கொண்டே சுடுவது,மண்டி போட்டுக் கொண்டு சுடுவது போன்றவைதான். எனக்குக் கிடைத்தது ஸ்பெஷல் பரிசு. இது பறந்து போய்க் கொண்டிருந்த ஒரு பறவையை சுட்டதற்காக கிடைத்தது"

"இப்படியான போட்டியில் கலந்து கொண்டு பரிசு வாங்க வேண்டுமென்றால் எது மிகவும் அவசியமென்று நினைக்கிறீர்கள்?"

"தன்னம்பிக்கையும் மனவலிமையும் தான் மிகவும் அவசியம். வழக்கமான உடற் பயிற்சியுடன் மூச்சை நன்றாக இழுத்து விட்டுப் பயிற்சி செய்ய வேண்டும். கழுத்துக்குத் தனிப்பயிற்சி கொடுக்க வேண்டும். ஓட்டப்பயிற்சி, ஜாக்கிங் எல்லாம் செய்ய வேண்டும். கால்தசைகள்,முதுகுப்புற தசைகள் இவையெல்லாம் திடமாக இருக்க வேண்டும்"

"குறி பார்த்து சுடுவதற்கு மனம்சிதறாமல் இருக்க வேண்டுமல்லவா?"

"ஆமாம். மனத்தை ஒருமுகப்படுத்தத் தெரிய வேண்டும். யோகப் பயிற்சியெல்லாம் இதற்கு உபயோகமாக இருக்கும்"

"உங்களுக்குக் குருபக்தி உண்டா?"

"என்னுடைய குருநாதர் சொல்லிக் கொடுத்த இரகசியம் தான் எனக்கு சிறப்புப் பரிசு கிடைப்பதற்கே காரணம்"

"அது என்ன இரகசியம்?"

"மனதை ஒருமுகப்படுத்துவதற்குத் தியானம் மிகவும் அவசியமென்று சொல்லுவார்"

"சரி"

"அதனால் நான் எதிரிலுள்ள வட்டத்தின் மையப் புள்ளிக்கு நேராக குறிவைத்தேன். சுடும் போது கண்ணை மூடிக் கொண்டேன். விழித்துப் பார்க்கும் போது உயரே பறந்து போய்க் கொண்டிருந்த குருவியொன்று கீழே விழுந்து கிடந்தது?"

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# ஸ்ரீசத்தியசாயி பாபாவின் அவதார தினவிழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையம் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் 85 ஆவது அவதார தின விழாவை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடத்தவுள்ளது. (2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 70 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 50 | 80 | 60 |
| தக்காளி | 80 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 50 |
| கோவா | 50 | 60 | 70 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 130 | 140 | 110 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 90 |
| பாகற்காய் | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக்கிழங்கு | 40 | 50 | 60 |
| பயிற்றங்காய் | 80 | 120 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 70 | 120 |
| கறிமிளகாய் | 100 | 160 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 300 | 180 |
| போஞ்சி | 120 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 40 | 70 | 50 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

# கார்த்திகை மாத இராசிபலன்கள்

## 17.11.2010 முதல் 15.12.2010 வரை




(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம் வரை)

தொட்ட காரியங்கள் வெற்றி பெறும்!

*எண்ணிய காரியத்தை எளிதில் முடித்துக் காட்டும் மேட இராசி நேயர்களே!*

சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள் நீங்கள். இளமையிலேயே எதிர் நீச்சல் போட்டு முன்னேறியவர்களாக இருப்பீர்கள். உயர்ந்த இலட்சியங்கள் உங்கள் மனதில் குடிகொண்டிருக்கும். மற்றவர்களிடம் வேலை வாங்குவதில் வல்லவர்களாக இருப்பீர்கள். பெரும் பணம் ஈட்ட வேண்டுமென்ற எண்ணம் உங்கள் மனதின் அடித்தளத்தில் இருப்பதால் புதுப்புது திட்டங்களை தீட்டிக் கொண்டே இருப்பீர்கள்.

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது. மாதக்கடைசியில் நல்ல மாற்றங்கள் வரும் என்றாலும், மாத தொடக்க நாளில் விரய ஸ்தானத்தில் சந்திரன் சஞ்சரிப்பதால், பணப்பற்றாக்குறை அதிகரிக்கும்.

மூன்று, ஆறுக்கு அதிபதியான புதனும், பஞ்சமாதிபதி சூரியனும், இராசிநாதன் செவ்வாயும் ஒன்றாக இணைந்து சஞ்சரிப்பதால், மாமன் , மைத்துனர் மற்றும் மகன், மகள் வழியில் செலவுகள் கூடலாம். எனவே, பிள்ளைகளுக்கான ஆபரணங்களை வாங்குவதில் கவனம் செலுத்துவது நல்லது.

சுக்ரபலன் நன்றாக இருப்பதால், கடைசி நேரத்தில் காரியங்கள் முடியும். செவ்வாய் விரதமும், துர்க்கை வழிபாடும் உங்கள் செல்வ நிலையை உயர்த்துவதற்கான வாய்ப்புகளை கூட்டும்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு!**

இந்த முறை குருப்பெயர்ச்சி வக்ர கதியில் முன்னும், பின்னும் செல்கிறது. சென்ற மாதத்தில் மீனத்தில் இருந்த குரு இம்மாத தொடக்கத்தில் கும்ப இராசியில் சஞ்சரிக்கிறார். அப்பொழுது அதன் பார்வை, உங்கள் இராசிக்கு மூன்று, ஐந்து, ஏழு ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே சகோதர வழியில் ஏற்பட்ட சஞ்சலங்கள் அகலும். உடன் பிறப்புக்களிடம் ஒப்படைத்த பொறுப்புகளை அவர்கள் உங்களுக்கு திருப்தி தரும் விதத்தில் முடித்து கொடுப்பர். பூர்வீக சொத்துக்களில் தங்கள் பங்கு அதிகம் வேண்டுமென்று கேட்டவர்கள் இனி மனம் மாறி உங்கள் சொற்படி கேட்க தொடங்குவர்.

பிள்ளைகளாலும் மேன்மை உண்டாகும். வரன்களும் எதிர்பார்த்த படி வந்து சேரும். நவம்பர் 21 ஆம் திகதி மீனத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் இராசிக்கு 4,6,8 ஆகிய இடங்களைப் பார்க்கப் போகிறார். எனவே, சுகஸ்தானத்தைப் பார்க்கும் குருவால், சுகங்களும், சந்தோஷங்களும் கூடும். பயணங்கள் அதிகரிக்கும். பாசத்தோடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும்.

**தனுசு –செவ்வாயின் ஆதிக்கம்!**

இராசிநாதன் செவ்வாய், மாதக் கடைசியில் அதாவது, நவம்பர் 28 ஆம் திகதி தனுசு இராசியில் சஞ்சரிக்கப் போகிறார். இது நற்பலன்களை உங்களுக்கு வழங்கும். பொதுவாக, தந்தை வழி உறவுகளில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். நீண்டதூர பயணங்களை எதிர்பார்த்து காத்திருப்பவர்கள் அது கைகூடும் வாய்ப்பு கண்டு ஆச்சரியப்படுவர். திடீர் தனலாபங்கள் திக்குமுக்காட வைக்கும்.

புத– ஆதித்ய யோகம் செயல்பட விஷ்ணு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். நின்ற கோலத்து பெருமாள் வழிபாடு, என்றும் உறு துணையாக இருக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் முற் பகுதியில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. பிற்பாதியில் எந்தக் காரியமும் எளிதாக முடிந்து விடும். தாய் வழி ஆதரவு தக்க சமயத்தில் கிடைக்கும். பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். வீடு மாற்றம், உத்தியோக மாற்றம் போன்றவைகளை ஒருசிலர் சந்திக்க நேரிடும். விலை உயர்ந்த பொருட்களை மாதத்தின் மையப் பகுதியில் வாங்குவீர்கள் .செவ்வாய்க்கிழமை அம்பிகை வழிபாட்டை முறையாக மேற்கொண்டால் நம்பிக்கைகள் நடைபெறும்.




(கார்த்திகை 2,3,4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 பாதங்கள் வரை)

நினைத்தது நிறைவேறும்!

*நல்ல காரியங்களை முன் நின்று நடத்தி உள்ளம் மகிழும் ரிஷப இராசி நேயர்களே!*

நீங்கள் திடீர் முன்னேற்றத்தைக் காண்பவர்கள். மனம் செல்லும் வேகத்திற்கு உடலும் செயல்பட வேண்டும் என்று சொல்வீர்கள். தகுதிக்கு மீறிய வரன்கள் உங்களுக்கு வாய்க்கும். நடை, உடை, பாவனைகள் இரசிக்கும் படியாக உங்களுக்கு அமைவதால், பலரும் உங்களுடன்பழகப்பிரியப்படுவர். நண்பர்களை அதிகம் பெற்றிருப்பீர்கள். நட்பால் சாதிக்க முடியாதது ஏதுமில்லை என்று சொல்வீர்கள்.

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சுக்ரன் ஆறாமிடத்தில் பலம் பெற்று சஞ்சரிக்கிறார். வாக்கு ஸ்தானத்தில் கேதுவும்,அஷ்டமத்தில் இராகுவும் சஞ்சரிக்கிறார்கள். எனவே, திடீர் திடீரென திட்டங்களை மாற்றுவீர்கள். மாதத் தொடக்கத்தில் பத்தில் குருவும், பதினொன்றில் சந்திரனும் சஞ்சரிக்கிறார்கள்.

சகோதர ஸ்தானதிபதி இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், சகோதர வழி ஒத்துழைப்புகள் கிடைக்கும். சந்திர பலம் கூடும் இந்த நேரத்தில் தாய்வழி ஒத்துழைப்பும் அதிகரிக்கும். ஒரு சில நாட்கள் மட்டும் பத்தாமிடத்தில் குரு இருப்பதால்,அந்த நாட்களில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்தும் செய்வது நல்லது.

சப்தம ஸ்தானத்தில் சூரியன், புதன், செவ்வாய் சஞ்சரிப்பது யோகம் தான். இடம், பூமியால் இலாபம் கிடைக்கும். கட்டிடப் பணி தொடரும். வாங்கிய சொத்துக்களைப் பதிவு செய்வதில் இருந்த வில்லங்கங்கள் விலகும்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு**

இந்த மாதத் தொடக்கத்தில் கும்பத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் இன்று மீனத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இந்த மீன குருவின் பார்வை பலம் உங்களுக்கு நல்ல வாய்ப்புக்களை அள்ளிக் கொடுக்கப் போகிறது.

குறிப்பாக குருவின் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதியப் போகிறது. 11 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் குரு மதிப்பையும், மரியாதையையும் உயர்த்தும். பணப்புழக்கத்தை அதிகரிக்க வைக்கும். விலகிச்சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர்.வேலைப்பளு கூடினாலும், உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்கும்.

பிள்ளைகள் உங்கள் சொற்படி நடந்து கொள்வது கண்டு உங்கள் பிரியம் கூடும். முன்னோருடைய சொத்துக்கள் முறையாகக் கைக்கு வந்து சேரவில்லையே என்ற கவலை அகலும். கல்யாணக் கனவுகள் நனவாகும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறிகள் தோன்றும். வெளிநாட்டில் இருந்து அனுகூலமான செய்தி வந்து சேரும். வாழ்க்கைத் துணை வழியே உதிரி வருமானங்கள் பெருகும்.

**தனுசு –செவ்வாயின் ஆதிக்கம்!**

மாதக்கடைசியில் தனுசு இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் சிறுசிறு பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். இருப் பினும், செவ்வாய் தோறும் வடக்குப் பார்த்த துர்க்கையை வழிபட்டு வந்தால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வந்து சேரும். இந்த செவ்வாய் பெயர்ச்சியால் விபரீத ராஜ யோகமும் செயற்படப் போகிறது. விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். அரசியல் ஈடுபாடு கொண்ட வர்களுக்குப் புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம். இம்மாதம் அனுமனை வழிபட்டு ஆனந்தம் காணலாம்.

**சிவல்புரி சிங்காரம்**

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம், உறவினர்கள் வருகை அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் ஏற்பட்ட குறைபாடுகள் மாற்று மருத்துவத்தால் குணமாகும். யாருக்கும் வாக்குறுதி கொடுக்கும் முன் இரண்டில் உள்ள கேது ஒரு கணம் யோசிக்க வைக்கும். மற்றவர்களை விமர்சிப்பதைத் தவிர்ப்பது நல்லது. மாதக்கடைசியில் அஞ்சல் வழியில் ஆச்சரியப்படத்தக்க செய்திவந்துசேரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. சர்ப்பசாந்தி செய்வது சந்தோஷத்தை வரவழைத்து தரும்.

(தொடரும்)

## ஈழ வலையமைப்பை தகர்க்க இலங்கையில் புதிய தளம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஈழ வலையமைப்பை தகர்த்தெறிவதற்காக இலங்கையில் விசேட வலையமைப்பொன்று உருவாக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் சர்வதேச வலையமைப்பின் நடவடிக்கைகளை முடக்கும் வகையில் இந்த புதிய வலையமைப்பு செயற்படும் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. வெளிநாடுகளில் உள்ள உயர் இராணுவ அதிகாரிகள் மற்றும் சிவில் மக்களை இணைத்து இந்த வலையமைப்பு உருவாக்கப்படவுள்ளதாகவும் குறிப்பாக புலிகளின் பிரசார வலையமைப்பை தகர்த்தெறிவதனை இலக்காகக் கொண்டு இப் புதிய வலையமைப்பை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

அதேவேளை அரசாங்கப் படையினருக்கு எதிராக சுமத்தப்படும் காழ்ப்புணர்ச்சி மிக்க குற்றச்சாட்டுக்களுக்கு அவ்வப் போது உரிய பதிலளிக்கப்பட வேண்டுமெனவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ச-5-2)

## ரணில் திருப்பதிக்கு விஜயம்


எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க திருப்பதி ஏழுமலையானை தரிசிப்பதற்காக நேற்று திருமலைக்கு சென்றார். அவரை தேவஸ்தான அதிகாரிகள் மலர்ச்செண்டு கொடுத்து வரவேற்றனர். அவர் வி.ஐ.பி. தரிசனம் மூலம் ஏழுமலையானை தரிசனம் செய்தார்.

பின்னர் அவருக்கு தேவஸ்தானம் சார்பில் சிறப்பு பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

கோயிலுக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய ரணில் விக்ரமசிங்க,

இந்தியா –இலங்கைக்கு இடையேயான நல்லுறவு மேலும் வலுப்பட வேண்டிய அவசியம் உள்ளது. தமிழ் அகதிகளுக்கு இலங்கை அரசு எதிர்பார்த்த அளவுக்கு உதவிகள் செய்யவில்லை. முழுவீச்சில் உதவிகள் செய்ய முன் வரவேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மக்கள் பிரதிநிதிகளுடன் இணைந்து அரசு பல்வேறு நலத்திட்டங்களை வழங்க வேண்டும் என பலமுறை வலியுறுத்தியுள்ளேன். இதுவரை அரசு செவி சாய்க்கவில்லைஎன்று கூறினார். (ச-5)



இளவாலை சீந்திப்பந்தல் குடியிருப்பு மக்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி நேற்று முன்தினம் நேரில் சந்தித்து கலந்துரையாடினார். இதில் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி, சீந்திப்பந்தல் றோமன் கத்தோலிக்க பாடசாலை அதிபர் என்.உதய பாலன் ஆகியோர் உரை யாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மக்களில் ஒருவர் தமது குறைகளைக் பாராளுமன்ற உறுப்பினரிடம் கூறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# பிரபாவுக்கும் திகாம்பரத்துக்கும் அமைச்சுப் பதவிகள் கிடையாது !

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் நிறைவேற்றியுள்ள 18ஆவது அரசியல் யாப்பிற்கு சார்பாக வாக்களித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனின் சகோதரர் பிரபா கணேசன் மற்றும் நுவரெலிய நாடாளுமன்ற உறுப்பினர் பீ.திகாம்பரம் ஆகியோருக்கு அமைச்சுப் பொறுப்புக்களோ அல்லது பிரதி அமைச்சுப் பொறுப்புக்களோ கிடைக்காது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நாளை திங்கட்கிழமை அன்று அரசாங்க அமைச்சரவை மாற்றியமைக்கப்படவுள் ளது.

இந்நிலையில், தமது சுயநலத்திற்காக ஐக்கிய தேசியக் கட்சியின் மூலம் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றம் சென்ற பின்னர் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டவர்களுக்கு சிறந்ததொரு பாடத்தை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவுக்கும் அமைச்சு அல்லது பிரதிஅமைச்சு வாய்ப்புகள் உள்ளனவா ? என்பது குறித்து தகவல்கள் வெளியாகவில்லை. (ச-2)

# சிறைச்சாலைகளில் போதைப்பொருள் விநியோகம்

சிறைச்சாலைகள் போதைப்பொருள் மத்திய நிலையங்களாக மாறி வருவதாக புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மீளமைப்பு பிரதியமைச்சர் விஜித் விஜித முனி சொய்சா தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாக சிறைச்சாலைகள் பொலிஸ் அலுவலகங்களை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருப்பதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் இடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை சிறைச்சாலைகளினுள் போதைப்பொருட்களை விநியோகத்தலில் ஈடுபடுவோருக்கு பிரதியமைச்சர் விஜித் விஜித முனி சொய்சா கடும் எச்சரிக்கையை இதன் போது விடுத்துள்ளார். (ச-5-2)

# இலங்கையர் ஒருவர் கட்டாரில் படுகொலை

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடான போகா கட்டாரில் நேற்று முன்தினம் படுகொலை சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான 40 வயதுடைய சந்திரன் என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடந்த நான்கு மாதங்களுக்கு முன் கட்டார் நாட்டுக்கு வேலை பார்ப்பதற்காக சென்றிருந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இறந்தவர் உட்பட நான்கு பேர் மது அருந்திக் கொண்டு இருந்தவேளை, இவர்களுக்கிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாக மட்டக்களப்பு நீலாவணையை சொந்த இடமாகக் கொண்ட ஒருவராலே அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

முதலில் மது போத்தலால் தலையில் அடித்தவுடன் போத்தல் உடைந்ததும் மறுபடியும் வயிற்றில் போத்தலால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தற்பொழுது இறந்தவரின் உடல் அகமட் மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்தவர் உட்பட மது அருந்திய 2 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவம் இடம்பெற்ற இடம் உம் சலால் அலி. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இதுபோன்ற சம்பவம் கட்டாரில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (எ-2)

# 'சுதேச வைத்திய அமைச்சு' விருதுக்கு விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச செயலக பிரிவு ஆயுர்வேத பாதுகாப்புச் சபையானது ஆயுர்வேத வைத்திய சபையில் 25 வருடங்களிற்கு முன் பதிவுசெய்த 50 வயதிற்கு மேற்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியர்களிற்கு சுகாதார 'சுதேச வைத்திய அமைச்சு' விருது வழங்கவுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கப் பெறாத யாழ். பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஆயுர்வேத சித்த வைத்தியர்கள், பிரதேச செயலக ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் அல்லது யாழ். மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை கொட்டடி , யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பெற்று படிவத்தை பூர்த்தி செய்து மீள ஒப்படைக்குமாறு யாழ்.பிரதேச செயலக ஆயுர்வேத பாதுகாப்புச் சபை செயலாளர் டாக்டர் திருமதி ஏ.கிருஷ்ணானந்தம் அறிவித்துள்ளார். (ச-2)

# உடற்பயிற்சி இயந்திரம் பொன்சேகாவுக்கு கிடைக்கவில்லை

(கொழும்பு)

முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவிற்கு உடற்பயிற்சி கருவிகளை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தும் இது வரையிலும் வழங்கப்படவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

சரத் பொன்சேகாவின் நிலைமை திருப்தி அடையும் வகையில் அமையப்பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிறைச்சாலை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சரத் பொன்சேகாவை ரவி கருணாநாயக்க நேற்றைய தினம் சென்று பார்வையிட்டார். சரத் பொன்சேகாவிற்கு உடற்பயிற்சி இயந்திரங்களை வழங்குமாறு மூன்றாவது தடவையும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5-2)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராஜதுரை மகேஸ்வரி



காரைநகர், கோவளத்தை பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜதுரை மகேஸ்வரி (ராணி) நேற்று முன்தினம் (19.11.2010) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை இராஜதுரையின் (ஆசிரியர்) அன்பு மனைவியும் காரைநகர், கோவளத்தை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (மலேயன் பென்சனியர்) -பொன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காரைநகர் சந்தம் புளியடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை(மலேயன் பென்சனியர்)-சிவகாமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் விஷாலாட்சி (யாழ்ப்பாணம்), தங்கம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இரவீந்திரன் (பொறியியலாளர் -கனடா), சுரேந்திரன் (பொறியியலாளர்- Metro Construction (Pvt) Ltd- Colombo) , விஜிதா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவதர்ஷினி (கனடா), திருமகள் (கொழும்பு), லோகநாதன் (உதவி சுங்க அத்தியட்சர், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியும் வைஷ்ணவி, விதுஷா, மதுரா, சேயோன், சயன், சகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இலக்கம் 52A, வஜிரா வீதி, பம்பலப்பிட்டி, கொழும்பு -4 இல் உள்ள அவரின் இல்லத்தில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெற்று தகனக் கிரியைகள் முற்பகல் 10 மணிக்கு கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 52 A, வஜிரா வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு-04,
தொ.பே: 0112553325

தகவல்
இ.இரவீந்திரன் (மகன்)
0014168178479 (கனடா) ,0772252255 (கொழும்பு)
இ.சுரேந்திரன் (மகன்)
0777306304 (கொழும்பு)

(C-1067)

## திருமதி சின்னம்மா செல்லையா

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா செல்லையா நேற்றுமுன்தினம் (19.11.2010) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அ.செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் நல்லையா செல்வநாயகி, காலஞ்சென்ற திருமதி சிரோன்மணி மற்றும் செல்வமணி, ரஞ்சிதமலர், கமலாவதி, செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயும் சோமசுந்தரம், காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் மைக்கல் சூரசங்கரன் காலஞ்சென்ற சறோஜினி மற்றும் செல்வநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் ரவீந்திரன், அம்பிகா, குகரூபன், மிருணாளினி, ரோசி காலஞ்சென்ற அன்ரனி மற்றும் ஆன் வெரோனிக்கா, சில்வெஸ்டர், பிரேம்நாத், பார்த்தீபன்,செந்தூரன், பிரியா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.11.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு 70/4, ஈச்சமோட்டையில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

70/4, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
செ.செல்வநாயகி,
க.செல்லையா (ஆசிரியை)
தொ.பே. 0779113014

(C-1068)

## திருமதி வேலாயுதம் புஸ்பவதி



அல்வாய் மேற்கு, அல்வாய் திக்கத்தை பிறப்பிடமாகவும் 125, கட்சன் வீதி, வட்டக்கச்சியை நிரந்தர வதிவிடமாகவும், 26/1 ஈச்சமோட்டை வீதியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் புஸ்பவதி (18.11.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், இராமநாதர் வேலாயுதத்தின் அன்பு மனைவியும் , காலஞ்சென்ற பரராசசிங்கம்(பரா) மற்றும் இந்திரகுமாரி(இந்திரா), சாந்தகுமாரி(சாந்தா), கலாநாயகி (மீனா), மதுரகுணசிங்கம் (மதுரா) ஆகியோரின் அன்புத்தாயாரும் சிவபாதம், ரஞ்சன், வசீகரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் துஷானி, துச்பன், கஜீபன், டோண்சோபியா, றேகன், சசிந்தன், அபிணாஸ் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (20.11.2010) முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

26/1, ஈச்சமோட்டைவீதி,
யாழ்ப்பாணம்.
021 4904918,0771676359

தகவல்
வேலாயுதம் (கணவர்)

(C-1065)

# ஜனாதிபதியின் பதவியேற்பு நிகழ்வில் சீனாவுக்கு அதிக முக்கியத்துவம்!

## அதிருப்தியில் இந்திய அரசு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தமது இரண்டாவது ஆட்சிக் காலத்துக்காக பதவி ஏற்கும் நிகழ்வில் சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கியத்துவம் இந்தியாவுக்குப் பெரும் அதிருப்தியை கொடுத்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி பதவி ஏற்பு விழாவில் கலந்து கொள்வதற்காக சீன ஜனாதிபதியின் விசேட பிரதிநிதி ஒருவர் தலைமையில் பத்து உறுப்பினர்களைக் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்று கொழும்பு வந்துள்ள போதிலும் இந்த நிகழ்வில் இந்தியாவின் விசேட பிரதிநிதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

ஜனாதிபதியின் விசேட அழைப்பின் பேரிலேயே சீன ஜனாதிபதியின் பிரதிநிதியாக சென் கூ ஓவே உயர் மட்டக்குழு ஒன்றுடன் கொழும்பு வந்துள்ளார்.

சீனத்தேசிய காங்கிரஸின் உப தலைவராக செயற்படும் சென் கூ ஓவே ,ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சிறப்பு விருந்தினராக இலங்கையில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.


நேற்று முன்தினம் நடைபெற்ற அம்பாந்தோட்டை துறைமுகத்தின் திறப்பு விழாவிலும் சீனப் பிரதிநிதி முக்கிய விருந்தினராக பங்கேற்றுக் கொண்டார்.

அம்பாந்தோட்டை துறைமுகக் கட்டுமாணத்தை பொறுத்தவரையில் அதற்கான செலவீனத்தில் 85 வீதத்தை பொறுப்பேற்ற சீனா அதனை நிர்மாணிக்கும் பணியையும் ஏற்றிருந்தது. அந்த வகையில் சீனப் பிரதிநிதி ஒருவர் அதற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தாலும் பதவியேற்பு வைபத்தில் சீனாவுக்கு கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் இந்தியாவுக்கு அதிருப்தியை கொடுத்திருப்பதாக தெரிகின்றது.

கடந்த மாதம் புதுடில்லியில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிக்கு சிறப்பு விருந்தினராக மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவினால் அழைக்கப்பட்டிருந்தார். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய இந்தியா குறிப்பிட்ட சில விடயங்களில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் செயற்பட்டதாக கூறப்படுகின்றது.

இந்த பின்னணியில் தன்னுடைய பதவிப் பிரமான நிகழ்வில் இந்தியாவை புறக்கணித்து சீனாவுக்கு கொடுக்கப்பட்டுள்ள அதிகளவிலான முக்கியத்துவத்தின் மூலமாக புதுடில்லிக்கு முக்கியமானதொரு செய்தியைச் சொல்வதற்கு மஹிந்த முற்பட்டிருப்பதை புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் இந்தியப் புலனாய்வுச்



சேவையான *றோ* அமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாக மிகவும் அவதானத்துடன் இருக்கும் காலம் எழுந்துள்ளதாகவும் முக்கியமாக தனது மற்றும் தனக்கு நெருங்கிய அரசாங்கத்தின் உயர் மட்டத்தினர் சிலரின் பாதுகாப்பு குறித்து கவனமாக இருக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் தனக்கு நெருங்கிய அரசியல் ஆலோச்கர்கள் சிலரிடம் கூறியுள்ளதாக சிங்கள இணையத்தளம் ஒன்றும் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

*றோ* அமைப்பின் சில நடவடிக்கைகள் குறித்து சந்தேகங்கள் எழுந்துள்ளதாக கூறிய ஜனாதிபதி முக்கியமாக வடக்கு- கிழக்கை அடிப்படையாகக் கொண்டு றோ அமைப்பு மேற்கொண்டுள்ள சில அரசியல் நடவடிக்கைகள் காரணமாக இந்தச் சந்தேகம் தீவிரமடைந்திருப்பதாக கூறியுள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டுமென இந்திய அரசாங்கம் கொடுத்து வரும் அழுத்தங்கள் குறித்து தனது அரசியல் ஆலோசகர்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் தாளத்திற்கு தான் ஆடாதன் காரணமாகவும் சீனாவுடன் மேற்கொண்டு வரும் இராஜதந்திர தொடர்புகள் குறித்தும் இந்தியா அதிருப்தி அடைந்திருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இது குறித்த உத்தியோக பூர்வமற்ற வகையில் இலங்கைக்குள் செயற்படும் இந்தியாவின் *றோ* அமைப்பு தொடர்பாக தமக்கு பலத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார். (ச-5-2)

## தமிழ் மக்களிடம் கப்பம் பெற்ற ஆறுபேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் புலனாய்வுப் விரிவினர் என்றபோார்வையில் தமிழ் வர்த்தகர்களிடம் கப்பம் பெற்றுக் கெண்ட ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் செல்வந்த தமிழ் வர்த்தகர்களை அச்சுறுத்தி கோடிக் கணக்கில் கப்பம் பெற்றுக்கொண்டுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கப்பக் குழுவைச் சேர்ந்த இரண்டு தலைவர்கள் உள்ளிட்ட ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரண்டு கைத்துப்பாக்கிகள், ஒரு கிளைமோர் குண்டு இராணுவத்தினர் பயன்படுத்தும் வாகனமொன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இக் குழுக்களை வழி நடாத்திய யகா சம்பத் மற்றும் சமிந்த சம்பத் ஆகிய இருவரும் சூரியவெள மற்றும் பரத்முல்ல பிரதேசங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் இராணுவ கொமாண்டோக்களாக கடமையாற்றி பின்னர் விலகியவர்கள் எனவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஏனையவர்களும் சூரியவெள, கிரிபத்கொட மற்றும் காலி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் இச் சம்பவங்களுடன் தெடர்புடைய மேலும் சிலரை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகிறது.

(எ-5-2)

## இலங்கைக்கு வர முயன்ற 3 இலங்கையர்கள் கைது

இலங்கை வர முயன்றதாக அகதிகள் 3 பேர் மற்றும் முகவர் உட்பட 4 பேரை தமிழக க்யூ பிரிவு பொலிஸார் கைது செய்தனர்.

இலங்கை அகதிகள் சிலர் படகு மூலம் இராமேஸ்வரம், தனுஷ்கோடி, மண்டபம் கடற்கரையில் இருந்து இலங்கைக்குத் தப்பிச் செல்வதாக தமிழக க்யூ பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்நிலையில் சங்குமால் கடற்கரையில் இருந்து இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ராஜு என்பவருக்குச் சொந்தமான நாட்டுப் படகில் இலங்கை செல்வதற்காக அகதிகள் 3 பேர் படகில் ஏற முயன்ற போது க்யூ பிரிவு பொலிஸார் அவர்களைப் பிடித்து விசாரித்தனர்.

விசாரணையில் தனுசன் (25) , பிரசன்னா (26) , அழகர் (எ) கமல் (33) ஆகிய 3 பேரும் கடந்த 2007 ஆம் ஆண்டு அகதிகளாக வந்து சென்னையில் தங்கியிருந்து படகு மூலம் இலங்கை செல்ல முயன்ற போது பிடிபட்டனர். இவர்களுடன் படகு உரிமையாளரும் முகவராக செயற்பட்டவருமான ராஜு வையும் க்யூ பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ச-5)

## இடம் பெயர்ந்தோர் முகாம்களை இரண்டாக குறைக்க நடவடிக்கை

(வவுனியா)

போரினால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறுவதற்காக தடுப்பு முகாம்களில் காத்திருப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதால் தற்பொழுது ஐந்தாக செயற்படும் முகாம்களில் மூன்று முகாம்களை மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது.

இதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் தெரிவித்தது. இதன்படி மெனிக் பாம் வலயம் நான்கிலிருந்த மக்கள் கதிர்காமர் முகாமுடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

வன்னிப்போரின் போது இடம் பெயர்ந்த மக்களுடைய கடுமையான ஆட்சேபனைக்கு மத்தியில் பலவந்தமாகவே இந்த இமாற்றம் இடம் பெற்றது. அதே போன்று வலயம் 2 ,3 ஆகியவற்றில் தங்கியுள்ள மக்கள் வலயம் ஒன்றில் தங்க வைக்கப்படுவார்கள். சுமார் 18 ஆயிரம் பேர் வரை மட்டுமே இன்னமும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் நிர்வாக செயற்பாடுகளில் வசதி கருதி இரண்டு முகாம்களை மட்டும் செயற்படுத்த முடிபு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட செயலகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா மற்றும் செட்டிக்குளம் ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் 518 புதிய வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கற்குளம், நேரியகுளம் பகுதிகளில் ஓர் அரச சார்பற்ற நிறுவனம் இந்த வீடுகளை நிர்மாணித்துள்ளதாகவும் இவ் வீடுகள் விரைவில் பயனாளிகளுக்குப் ஒப்படைக்கப்படும் என அவர் கூறினார். (ச-5)

## புதுக்குடியிருப்பில் அடுத்த வாரம் 250 குடும்பங்கள் மீள்குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்த 250 குடும்பங்களைச் சேர்ந்த 855 பேர் அடுத்த வாரமளவில் புதுக்குடியிருப்பு தேராவில் பிரதேசத்தில் மீள்குடியேற்றப்பட உள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட செயலகம் அறிவித்திருக்கின்றது.

இறுதிக் கட்டப்போரின் போது இடம் பெயர்ந்து மெனிக்பாம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களே இவ்வாறு மீள்குடியேற்றப்படவுள்ளனர்.

கடந்த காலப் போரின் போது புதுக்குடியிருப்பு பிரதேசத்திலே கூடுதலான மிதிவெடிகள் புதைக்கப்பட்டதால் இங்கு மீள் குடியேற்ற நடவடிக்கை தாமதமடைந்தது.

ஆனால் இராணுவத்தினரே மிதிவெடிகளை அகற்றி வரும் நிலையில் புதுக் குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள 19 கிராம சேவகர் பிரிவுகளில் 5 கிராம சேவகர் பிரிவுகளில் மீள்குடியேற்றம் நிறைவடைந்துள்ளன.

மேற்படி 250 குடும்பங்களும் எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை விசேட பேருந்துகளில் அழைத்துச் செல்லப்பட்டு சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்படுவர் என முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

ஏனைய பகுதிகளில் மிதிவெடிகள் அகற்றப்படுவதற்குஏற்பமீள்குடியேற்றம் முன்னெடுக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்ட செயலக வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5-2)

# தேவையற்ற பழைய கட்டடங்களை இடித்து அகற்ற மாநகரசபை உதவி

## யாழ். மாநகர முதல்வர் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் காணப்படும் தேவையற்ற பழைய கட்டடங்களை இலவசமாக இடித்து அகற்றுவதற்கு மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற நிதிக் குழுக்கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோ.பற்குணராசா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு,

யுத்தம் முடிவடைந்து அமைதிச் சூழ்நிலை உருவாகியுள்ள நிலையில் 30 வருடகால யுத்தத்தின் பயனாக யாழ். நகரமும் யாழ். நகர மக்களும் அபிவிருத்தியைப் பொறுத்தவரையில் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர்.

நீண்ட காலத்தின் பின்னர் அரச ஆதரவுடனான எமது சபை மாநகர சபையினது நிர்வாகத்தை பொறுப்பேற்றுள்ள நிலையில் யாழ். நகரை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்வதற்கான அரிய சந்தர்ப்பம் தற்போது கைக்கெட்டியுள்ளது.

நீண்ட காலமாக எவ்வித திருத்தமோ , பராமரிப்போ இல்லாது மிகவும் மோசமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள வீதிகளை புனரமைப்பதற்கு முன்னோடியாக அவற்றில் காணப்படும் பள்ளங்கள் மற்றும் குழிகளை இடிபாடுகளைக்கொண்டு நிரப்பிய பின்னரே கல்லிட்டு தாரிட வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

மேலும் பல்வேறு விதமான பொதுத் தேவைகளுக்காக மாநாகர சபைக்கும் பொது அமைப்புக்களுக்கும் பெரிய அளவிலான நிலங்கள் தேவைப்படுகின்றன. இதற்கேற்ற சதுப்பு நிலங்கள் பல சபை எல்லைக்குள் காணப்படுகின்ற போதிலும் அவற்றினுள் அன்றாடம் சேரும் கழிவுகள் மற்றும் குப்பைகளை கொட்டி நிரப்புவதால் சூழல் மாசடையவும் சுகாதார சீர்கேடு தொடர்ந்து இடம்பெறவும் வாய்ப்பு அதிகரிக்கும் என மத்திய சுற்றாடல் அதிகார சபை எமக்கு ஆலோசனை வழங்கியுள்ளதால் கழிவுப்பொருட்களுக்குப் பதிலாக கட்டட இடிபாடுகளை சதுப்பு நிலங்களின் மேல் கொட்டி அவற்றை பாவனைக்கு ஏற்றதாக்கிக்கொள்ள முடியும்.

மேற்படி இரண்டு விதமான தேவைகளுக்காகவும் பெருமளவு கட்டட இடிபாடுகள் சபைக்கு அவசியமாகத்தேவைப்படுகிறது. பழைய கட்டடங்களை அகற்றி புதிய கட்டடங்களை அவ்விடத்தில் அமைக்க விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளும் இடத்து எவ்வித கட்டணமும் இன்றி பழைய கட்டடங்களை சபைத் தொழிலாளர்கள் மூலமாக இடித்து அகற்றி சபையினது தேவைகளுக்காக அவ் இடிபாடுகளை பயன்படுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ச)

## நகர அபிவிருத்தி ஆலோசனைக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடலும் நகர அபிவிருத்தி ஆலோசனைக்கூட்டமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முறையே பிற்பகல் 2 மணிக்கும் 2.30 மணிக்கும் நடைபெறவுள்ளது என நகர சபைச் செயலாளர் செல்வி. வி.சிவக்கொழுந்து அறிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் பிரதேசத்தின் திணைக்களத் தலைவர்கள், வட்டார அங்கத்தவர்கள், நிறுவன பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ச-29)




சிறுவர் தினத்தை முன்னிட்டு திருநெல்வேலி ஹற்றன் நஷ்னல் வங்கி கிளையில் சிறுவர் சேமிப்புக்கணக்கில் வைப்பிலிட்ட சிறுவர்களுக்கான தங்கப் பென்ரன்கள் மற்றும் பரிசில்களை ஹற்றன் நஷ்னல் வங்கியின் சிரேஷ்ட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் தி.ஜெயராஜசிங்கம் வழங்கினார். பதக்கம் பெற்ற சிறுவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கிளை முகாமையாளர், உத்தி யோகத்தர்கள் மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படத்தில் காணலாம்.

# பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசு -2010

## உழைப்பே மிகப் பெரிய மூலதனம்

பொருளாதார அறிவியலுக்கான இந்த ஆண்டின் நோபல் பரிசு, இரண்டு அமெரிக்கர்கள் மற்றும் பிரிட்டனில் பணியாற்றும் சைப்ரஸ் பொருளாதார நிபுணருக்கு கூட்டாக வழங்கப்படுகிறது.

அமெரிக்காவின் மசாசூட்ஸ் தொழில்நுட்ப கழகத்தின் பேராசிரியர் பீட்டர் ஏ டைமண்ட், வடமேற்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் டேல் டி மார்டன்சென், பிரிட்டனில் உள்ள லண்டன் ஸ்கூல் ஒப் எக்கனமிக்ஸ் மையத்தின் பேராசிரியர் கிறிஸ்டோபர் ஏ பிஸாரைட்ஸ் ஆகிய மூன்று பேரும் நோபல் பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தொழிலாளர் சந்தை நிபுணர்களான இவர்கள், பொருளாதார கொள்கைகள் எந்த அளவிற்கு வேலைவாய்ப்பின்மையை உருவாக்குகிறது என்பது குறித்தும், அதற்குத் தீர்வு காணும் வகையிலும் வெளியிட்ட ஆய்வு முடிவுகளுக்காக இந்த நோபல் பரிசு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### பீட்டர் ஏ டைமண்ட்யேல்

பல்கலைக்கழகத்தில் கணிதம் பயின்ற டைமண்ட், மசாசூட்ஸ் பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி பட்டம் பெற்றார். அதன்பின் பல்வேறு பல்கலைக்கழகங்களில் கல்விச் சேவையாற்றிய அவர் இப்போது மசாசூட்ஸ் பல்கலைக்கழகத்தில் மூத்த பேராசிரியராக பணியாற்றி வருகிறார்.

அமெரிக்காவின் சமூகப் பாதுகாப்பு கொள்கை குறித்து அவர் வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகள் அவருக்கு நோபல் பரிசு பெற்றுத் தந்துள்ளன. "சமூக பாதுகாப்பை காப்போம்" என்ற தலைப்பில் 2004 இல் அவர் வெளியிட்ட கட்டுரை பெரும் வரவேற்பைப் பெற்றது. அமெரிக்காவின் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் "பெடரல் ரிசர்வ் போர்ட்" தலைவர் பதவிக்கு பரிசீலிக்கப்பட்ட மூன்று பேரில் டைமண்டும் ஒருவர். இறுதியில் பென் பெர்னன்கி என்பவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் டைமண்டின் முன்னாள் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.



டேல் டி மார்டன்சென்



பீட்டர் ஏ டைமண்ட்யேல்



கிறிஸ்டோபர் ஏபிஸாரைட்ஸ்

### டேல் டி மார்டன்சென்

வில்லாமெட்டி பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் பி.ஏ.பட்டம் பெற்ற மார்டன்சென், மார்னஜி மெல்லான் பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி ஆய்வுப் படிப்பை முடித்தார். 1965 முதல் வடமேற்கு பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். தொழிலாளர் சந்தைப் பொருளாதாரம், பேரியல் பொருளாதாரத்துறை நிபுணரான அவர் வேலைவாய்ப்பின்மை குறித்து பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். "ஒரே பணியில் வேறுபட்ட சம்பள விகிதம் ஏன்?", "வேலை தேடுதலும், தொழிலாளர் சந்தை நிலவரமும்" ஆகியவை அவரது கட்டுரைகளில் குறிப்பிடத்தக்கவை.

### கிறிஸ்டோபர் ஏபிஸாரைட்ஸ்

சைப்ரஸ் நாட்டைச் சேர்ந்த கிரேக்க வம்சாவளியினரான பிஸாரைட்ஸ், பிரிட்டனில் குடியேறி "லண்டன் ஸ்கூல் ஒப் எக்கனமிக்ஸ்" மையத்தில். பி.எச்.டி ஆய்வுப் படிப்பை முடித்தார். அதே சமயத்தில் பேராசிரியராகப் பணியாற்றிவரும் அவர் நார்மன் சாஸ்னோ ஒப் எக்கனமிக்ஸ் அமைப்பின் பேரியல் பொருளாதார ஆய்வு மைய இயக்குநராகவும் உள்ளார். தொழிலாளர் சந்தை - பேரியல் பொருளாதாரம் குறித்து பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ள அவர், வேலைவாய்ப்பின்மையில் இருந்து வேலை வாய்ப்பை உருவாக்குவது குறித்து புதிய கொள்கையை வெளியிட்டு உலகின் கவனத்தை ஈர்த்தார். மார்டன்செனுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டு அவர் சமர்ப்பித்த "வேலை உருவாக்கல், அழிப்பு" என்ற தலைப்பிலான கட்டுரை, பொருளாதார நிபுணர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.



# மகிழ்ச்சி

பிரபல எழுத்தாளர் நீல பத்மநாபனின் உயிரோட்டமான கதைதான் மகிழ்ச்சி என்ற பெயரில் சினிமா ஆகியிருக்கிறது. வ.கௌதமனின் திரைக்கதை, வசனம், இயக்கம் நடிப்பில் த.மணிவண்ணனின் தயாரிப்பில் கலைப்புலி எஸ்.தாணு வழங்கும் மகிழச்சி திரைப்படம் ரசிகர்கள் மனதில் இடம்பெறும் என்று உறுதி அளிக்கலாம். நீண்ட நாட்களுக்குப் பின்னர் அக்கா -தம்பி இடையே நெருக்கமான பாசத்தை அழகாக சித்திரித்திருக்கிறார்கள்.

இரணியல் என்ற சிற்றூரில் படமாக்கப்பட்டிருக்கிறது. இரண்டு அக்காக்கள் ,தங்கை, பெற்றோர் ,பாட்டி, மாமா என்று பெரிய கூட்டுக் குடும்பத்தில் இருப்பவர் கதாநாயகன் வ.கௌதமன் .படத்தின் இயக்குநரும் இவரே. பாத்திரத்தின் பெயர் திரவியம். எல்லோரும் அவரை திரவி என்று அழைக்கிறார்கள். அவரது முறைப் பெண் குழலி (அஞ்சலி). திரவியும், குழலியும் காதலிக்கிறார்கள். தன் அக்காவிற்கு திருமணம் ஆன பின்னரே தனக்கு திருமணம் என்பதில் திரவி திடமாக இருக்கிறார். ஊரில் பெரிய பணக்காரரும், சொந்தத்தில் கடை நடத்துபவருமான செவத்த பெருமாளுக்கும் (நடிகர் சம்பத்), திரவியத்தின் அக்கா நாகம்மைக்கும் (நடிகை கார்த்திகா) திருமணம் நடக்கிறது.

ஆனால் அவருக்கு திருமண வாழ்க்கை புயலாகிறது. புகுந்த வீட்டில் கணவர், மாமியார் கொடுமை காரணமாக தற்கொலைக்கு முயலுகிறார். கோபமடைந்த கணவர் நாகம்மையை பிறந்த வீட்டுக்கு நிரந்தரமாக திருப்பி அனுப்பிவிடுகிறார்.

தீராத நாகம்மை பிரச்சினைக்காக காலவரம்பின்றி காத்திருக்கமுடியாது என்று கூறி குழலியின் பெற்றோர் அவரை கட்டாயப்படுத்தி வேறு இடத்தில் திருமணம் செய்து விடுகின்றனர்.

பிள்ளை பெற்றுத்தரவில்லை என்று நாகம்மையை ஒதுக்கிய தன் அத்தானுடன் (அக்காவின் கணவர்), திரவி சமரசம் செய்யும் முயற்சிகள் தோற்கின்றன. தான் பணிபுரியும் அரசாங்கப் பாடசாலையில் தலைமை ஆசிரியர் மோசஸ் (பிரகாஷ் ராஜ்) உதவியுடன் தன் அக்காவை மெடிக்கல் செக்-அப்பிற்கு அழைத்துச் செல்கிறார் திரவி. அதில் நாகம்மையிடம் எந்த குறைபாடும் இல்லை. தாயாக எல்லாத் தகுதியும் இருக்கிறது எனத் தெரியவருகிறது.

குழந்தை பிறக்காததற்கு அக்காவின் கணவர்தான் காரணம் என அறியும் திரவி, அவரை எதிர்த்துக் கேட்கிறார். தன் இயலாமையால் வெறுப்படையும் சம்பத், பழிவாங்க முடிவு செய்கிறார்.

இதற்கிடையில் திரவியின் நீண்ட நாள் நண்பரும், எதற்கும் அவருக்கு தோள்கொடுக்கும் நண்பரான குற்றாலம் (சீமான்), திரவியின் அக்காவுக்கு வாழ்வு கொடுக்க முன்வருகிறார். நாகம்மையின் திருமணம் நடக்கக்கூடாது என்பதற்காக சம்பத், அவரை கடத்தி காட்டுப்பகுதியில் உயிரோடு புதைக்கிறார்.


சரியான நேரத்தில் தகவல் தெரிந்து, அங்கு வரும் திரவி, குற்றாலம் மற்றும் மோசஸ் ஆகியோர் நாகம்மையைக் காப்பாற்றுகிறார்கள். நாகம்மை -குற்றாலம் திருமணம் நடக்கிறது.

வ.கௌதமன், சீமான் இருவரும் பாத்திரத்திற்கு ஏற்ப சிறப்பாக நடித்திருக்கிறார்கள். கௌதமன் சண்டைக்காட்சிகளில் விஜயகாந்தை நினைவூட்டுகிறார். காதல் காட்சிகளிலும் ஓ.கே. சேலை கட்டிய எனத் தொடங்கும் பாடலுக்கு அஞ்சலி நிறைய கிளாமராக ஆடியிருக்கிறார்.

திரவியின் முதுகில் அஞ்சலி உப்புமூட்டை ஏறி ஓடையை கடக்கும் போதும், திரவி குடும்பத்தினரோடு உரிமையுடன் பழகும் காட்சிகளும் ரசிக்கக் கூடியவை.

அக்காவாக வரும் கார்த்திகா, தம்பி மீது பாசத்தை பொழிகிறார். எரியும் அடுப்பில் இருந்து தம்பிக்காக வெறும் கையால் வடையை எடுத்துவிட்டு வலியால் துடிப்பதும், அக்காவின் வலி பொறுக்க முடியாமல் தம்பி துடிப்பதும் பாச வெளிப்பாடுகள். கார்த்திகாவின் தோற்றம் ஹீரோவின் அக்கா என்பதை ஒப்புக்கொள்ள நெருடலாக இருக்கிறது.

கஞ்சா கருப்பின் காமெடி நன்றாக பொருந்தியிருக்கிறது. பாட்டன் வி.எஸ்.ராகவனின் முதல் மனைவி, பாசமாக கஞ்சா கருப்பிற்கு விருந்து வைக்கும் காட்சி குறிப்பிடத்தக்கது தான். சாப்பிடும் இலையில் ஏற்கனவே மூன்று பேர் சாப்பிட்டது, அதைக் கழுவி அதிலே தனக்கு விருந்து கொடுக்கிறார்கள் என்று அறிந்து கஞ்சா கருப்பு படும் அவஸ்தை செம காமெடி.



இந்த அளவுக்கு கொடுமைக்காரராக ஒருவர் இருக்கமுடியுமா? என்று கேட்கும் அளவுக்கு சம்பத் நடித்திருக்கிறார். தன் தந்தையின் கெட்ட நடத்தை காரணமாக அவரை வெறுக்கும் சீமான், பின்னர் அவருக்கு வாதநோய் வரும்போது பாசத்தோடு பணிவிடை செய்யும்போதும், நண்பரின் பிரச்சினையைத் தீர்க்க உதவும் போதும் சீமான் பண்பட்ட நடிகர் என்பதை நிரூபிக்கிறார்.

படத்தின் கடைசிக் காட்சியில், பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் நிறையப் பரிசுகள் பெறும் பிரபாகரன் என்ற இமானார், எளிய குடும்பத்தில் பிறந்த தன்னை இந்த அளவுக்கு உயரச் செய்த தன் தாய்மாமன், தாய், தந்தையரை விழா மேடைக்கு அழைக்க அனுமதி கேட்கிறார். கௌதமன், சீமான், கார்த்திகா ஆகியோர் வயதானவர்களாக மேடையேறுகிறார்கள்.

ஜாதி, ஜாதி என்று எதற்கும் ஜாதியை பிரச்சினை ஆக்காமல், ஜாதியை மறந்து எப்படி வாழ்வில் சாதிக்கமுடியும் என்றே இளைஞர்கள் செயற்பட வேண்டும் என்று சீமான் கேட்டுக்கொள்வதுடன் நச்சென்று படம் முடிகிறது.

சீரான கதையோட்டம் கொண்ட படத்தில் கூரப்பட்டு சேலைக்காரி என்ற கடைசிப் பாட்டை குத்துப்பாட்டு குரூப் நடனம் ஏன் தான் சேர்த்தார்களோ? வித்யாசகரின் இசை, செழியனின் ஒளிப்பதிவு, சுப்பர் சுப்பராயனின் சண்டைப் பயிற்சி ஆகியவை படத்திற்கு மெருகூட்டுகின்றன.

# இல்லவே இல்லை -பிரபுதேவா பளிச்!

நயன்தாரா விவகாரத்தில் என்ன நடக்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருக்க, லதா என் மனைவியே இல்லை. அவருக்கும் எனக்கும் நடந்த திருமணம் பதிவு செய்யப்படவில்லை என்று பிரபுதேவா பளிச் என பேசியிருக்கிறார். இப்படி அவர் "தபாய்ப்பார்" என்பது எல்லோரும் எதிர்பார்த்ததுதான்.

அதனால் தான் லதா, ரேஷன் கார்ட், மகனின் இறப்புச் சான்றிதழ் என அனைத்து ஆதாரங்களையும் திரட்டிவைத்திருக்கிறார். அதைச் சமாளிக்க மும்பையில் தன் நண்பர்களுடன் ஆலோசனை நடத்தி வருகிறார் பிரபுதேவா.

லதா என் மனைவியா? இல்லவே இல்லை! என்று சொல்லிவரும் பிரபுதேவா, தன் மகன் இறந்தபோது பாசக் கண்ணீர் விட்டாரே? அது வெறும் வேஷமா? என கேள்விகள் எழுந்துள்ளன. இவ்வளவு சர்ச்சைகளுக்கு இடையிலும் தன் சினிமாப் பணிகளில் முழுக் கவனம் செலுத்தி வருகிறார் இயக்குநர் பிரபுதேவா.

பிரபுதேவாவின் இயக்கத்தில் விரைவில் வெளிவர இருக்கும் படம் "எங்கேயும் காதல்" படத்தில் ஜெயம் ரவி, ஹன்சிகா நடித்திருக்கிறார்கள். இதன் இசை வெளியீட்டு விழாவை இரகசியமாய் நடத்தி முடித்திருக்கிறார்கள்.

பத்திரிகையாளர்களை பிரபுதேவா சந்திக்க விரும்பவில்லை என்பதே இந்த ரகசிய விழாவிற்குக் காரணம். படத்திற்கு இசை ஹரிஸ் ஜெயராஜ். இந்தப் படத்தை பற்றிய செய்தியை பத்திரிகைகளுக்கு எழுத்துமூலம் அனுப்பியிருக்கிறார் பிரபுதேவா.



இதுவரை தமிழில் போக்கிரி, வில்லு என அதிரடி மாஸ் படங்களை இயக்கினேன். ஆனால் ''எங்கேயும் காதல்'' முழுக்க முழுக்க காதல் கதை. படம் பார்கையில் தென்றல் உங்களைத் தழுவும்போது ஏற்படும் பரவசத்தை உணர்வீர்கள். இது காதலைக் கொண்டாடுகிற ஒரு உணர்ச்சி மயமான படம். எம்.ஜி.ஆர். நடித்த 'அன்பே வா' படத்தை போன்ற படமாய் இது அமையும் என்று அந்த செய்தியில் குறிப்பிட்டுள்ளார் பிரபுதேவா.

# கருணாஸின் ஆனைமலை கந்தன்!

அம்பா சமுத்திரம் அம்பானி படத்தை தொடர்ந்து கருணாஸ் நாயகனாக நடிக்கவிருக்கும் புதிய படம் ஆனைமலை கந்தன். மலையாளத்தில் பல வருடங்களுக்கு முன் வந்த ஒரு நகைச்சுவை படத்தின் தமிழ் ரீ- மேக்தான் இந்தப் படம். அம்பானிக்கு எப்படி ஒரு புதுமுக இயக்குநர் கிடைத்தாரோ, அதே மாதிரி இந்தப் படத்திலும் ஒருபுதுமுக இயக்குநரை அறிமுகப்படுத்தப் போகிறாராம் கருணாஸ்.

முந்தைய படத்தில் கருணாஸுக்கு ஜோடியாக நடிக்க நடிகைகள் வேட்டை நடத்திய போது, பலமுன்னணி நடிகைகளும் அலறி அடித்து ஓட்டம் பிடித்த சங்கதியை கருணாஸே சொல்லி வருத்தப்பட்டிருந்தார். இப்போது மட்டும் கூப் பிட்ட உடனே வந்திடுவார்களா என்ன? மறுபடியும் முயற்சி செய்து சோர்ந்து போவதை விட ,புது முகமாக தேடினால் நல்லது என்ற முடிவுக்கு வந்த கருணாஸ், அந்தப் பொறுப்பை தனது மனைவி கிரேஸிடம் விட்டு விட்டாராம்.



கிரேஸும் பெங்களூர் கோல் சென்டரில் வேலை பார்க்கும் தனக்கு தெரிந்த ஒரு அழகான பெண்ணை நேரில் வரவழைத்து, இவதான் உங்களுக்கு ஜோடி என்று கூறிவிட்டாராம். புதுமுகத்துடன் டூயட் பாட தயாராகிக் கொண்டிருக்கிறார் கருணாஸ்.




# விவேக்கிற்கு கலாம் அட்வைஸ்


இந்திய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் சிந்தனைகளால் பலரும் ஈர்க்கப்பட்டனர். அதில் ஒருவர் நடிகர் விவேக். அத்தோடு நின்றுவிடாமல் கலாமை சந்தித்து பல விடயங்களை பரிமாறிக் கொள்பவர் விவேக். அப்துல் கலாமின் பிறந்த நாளை மாண்வர்கள் தினமாய் கொண்டாட வேண்டும் என்பது விவேக்கின் வேண்டுகோள்.

அதை நிறைவேற்ற பல வழிகளில் முயற்சி செய்து வருகிறார் விவேக். அப்துல் கலாமின் பிறந்த நாளை சமீபமாக பள்ளி மாணவர்களுடன் கொண்டாடி மகிழ்ந்தார் விவேக். அண்மையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள சென்னை வந்திருந்தார் அப்துல் கலாம்.

அப்போது விவேக் அவரை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது அப்துல் கலாம், "விவேக்கிடம் நீங்கள் நடிக்கும் படங்களில் தாய்மை உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்பதே என் விருப்பம். உங்கள் காமெடிக்காட்சிகளில் பல கருத்துக்களை சொல்லி வருகிறீர்கள். அதனுடன் சேர்த்து இதையும் வலியுறுத்த வேண்டும்'' என தெரிவித்துக் கொண்டார்.

''ஏற்கனவே அதைப் பற்றிய கருத்துக்களை என் காமெடிக் காட்சிகளில் சொல்லி வருகிறேன், இருந்தாலும் அதை இன்னும் அதிகமாய் செய்வேன்'' என கலாமிடம் வாக்குக் கொடுத்தார் விவேக்.

தன் மீதும், இளைய தலைமுறை மீதும் அக்கறைக் கொண்டு, அப்படி சொன்னதற்கு தன் நன்றிகளையும் கலாமுக்கு தெரிவித்துக் கொண்டார் விவேக். இப்போது உள்ள இளைய தலைமுறைக்கு தாய்மை உணர்வு தான் தேவைப்படுகிறது. நீங்கள் செய்வது காமெடியாக இருந்தாலும் அது சமூக அக்கறையுடன் இருக்கிறது. அதற்காக என் வாழ்த்துக்கள் என்று விவேக்கைப் பாராட்டினார் கலாம்.



# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### உனக்காகவே

காத்திருப்புக் கூட
இப்போது சுகமாகிறது
உன் நினைவுகளோ
என்னைச் சுற்றிச் சுற்றி
வருவதனால்
நான் காத்திருப்பது
உனக்காக மட்டுமல்ல
கவலைகளை மறந்து
வாழ முயலும்
எனக்காகவும் தான்
உன் வருகைக்காகவேதான்
உன்னை வலம் வருகின்றேன்
ஆனால் நீயோ அப்படியே
நிலையாய் எப்பொழுதுமே
எப்படித்தான் உன்னால்
மட்டும் முடிகிறது

ஆஷா
யாழ்ப்பாணம்.



### தோழமைத்துயர்

அம்மாவோ முள்ளிவாய்க்கால்
மண்ணுக்குள்
தந்தையோ தடுப்பு முகாமில்
தம்பியோ தாயின் கருவறைக்குள்
இவன் இன்று ஊன்றுகோலுடன்
உடலில் துயர வடுக்கள்
மனதில் ஆயிரம் ஏக்கங்களுடன்
தறப்பாள் கொட்டகைக்குள்
பள்ளி விட நண்பன் வளவுத் தென்னை
எங்கள் தாகம் தீர்க்கும்
இப்போ நின்ற தடம் கூட
தெரியவில்லை
மாலைப் பொழுதில் பந்தடிக்கும் திடல்
பேச்சொலியால் கலகலக்கும்
இன்று திடலில்...
அதன் வானத்தில்
ஆட்காட்டிக் குருவிகள் ஏதோ
சப்திக்கின்றன
என்தோழனைப்போல்
எத்தனை உயிர்கள்
எம்மண்ணில்....

ஆ.முல்லைதிவ்யன்
பொலிகண்டி

### காணாமல் போனவள்

எனது உயரம் இருப்பாள்
கொலுசு கூச்சப்பட நடப்பாள்
கன்னத்தில் குழி விழச்சிரிப்பாள்
பேர் ஊர் தெரியாது - ஆனால்
தமிழ் பேசுவாள்
பஸ்ஸில் யன்னல் ஓரத்தில் தான்
உட்கார்ந்து பயணிப்பாள்
தாவணி அணிந்திருப்பாள் - அடிக்கடி
துப்பட்டாவை சரிபார்ப்பாள்
கீழ் உதட்டின் ஓரத்தில் - ஒரு
மச்சமும் இருக்கிறது
உள்ளங்கையில் மருதாணி
பூசி இருப்பாள்
கைக்குட்டையை கசக்கிப்பிடித்திருப்பாள்
கடைசியாய் மஞ்சள் தாவணியில்தான்
காணாமல்போனாள்
தகவல் தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்
கேட்கும் சன்மானம் வழங்கப்படும்
என் உயிர் என்றாலும் பரவாய் இல்லை...

நெடுந்தீவு
முகிலன்



### இமயம் தொட...



பணம் பணம் என
அலைகின்றாயே
உன் இறுதிவரை - அது
உன்னுடனே வந்திடுமா?
உன்னுயிர் பிரியும்வேளை
உன்னருகே நிற்க
காடுவரை கொண்டு செல்ல
நல் உறவைத் தேடு...
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு......

மாவை. நா.கஜேந்திரா


### வலி

உன் இதயம் என்னும் கல்லறையில்
என்னை ஜடமாக்கித் தூங்கவைத்து
ஏன் என்னை ரணமாக்கின்றாய்
அதன் காரணம் தான் என்னவோ?
உன் இதயம் என்னும் கல்லறையில்
நான் இருந்தும் கூட!
உன் முகம் தினம் காண தவிக்கின்றேன்



R.ராஜி
உரும்பிராய்

# மௌனத்தின் தேடல் - 45



### மகிழ்ச்சி

எத்தனை துன்பம் வந்தாலும்
ஏழ்மை எம்மைத் தொடர்ந்தாலும்
மெத்தென்ற உன் கை ஸ்பரிசத்து
மெய்யான மகிழ்ச்சி கண்ணே!

சா.வினித்தா
கொழும்புத்துறை

### வரம்வேண்டும்

வறுமையின் கோரப்பிடிக்குள்
அகப்பட்ட போதும்
சின்னச் சின்ன
சந்தோஷங்களுக்குள்
அவ்வப்போது நாம்
திளைக்கத் தவறவில்லை
எத்தனை ஜென்மங்களானாலும்
நான் உனக்கு சேயாகவும்
நீ எனக்குத் தாயாகவும்
வரம்வேண்டும்

செ.ரவிசாந்
குப்பிளான்

### இறுதி முத்தம்

நேற்று இல்லாத முத்தம்
இன்று மட்டும் ஏன் தாயே?
ஓ!! இயந்திரப் பறவையில்
காலன் வருவது தெரிந்தா
இந்த இறுதி முத்தம்

B.ஆரபி
திருநெல்வேலி

நம்பி நம்பி
ஏமாந்த நம்பிக்கையான
தமிழர்கள் நாம்!
ஆதலால்...
நம் துயரை
யாரிடமும் சொல்லாதே - என
பிஞ்சு மகள் அன்னை
வாயை அடைக்கிறாள்...!

மு.ஆ.சுமன்
வல்லை

### புதுவாழ்வு

அழுத வாழ்வு முடிந்ததென
எழுத வருகிறது பிள்ளை
விழுந்த கண்ணீர் துளிகளுக்கு
விடை கொடுக்கிறார் அன்னை

கேமா
சாந்தை

### பிஞ்சு மொழி...

பஞ்சம்... பசி...
வஞ்சகயுத்தம் தந்த
வெஞ்சினம்...!
பஞ்சில் நெருப்பாய்...
வஞ்சரவர் தம்
அஞ்சுதல் தரும்
வஞ்சகமிவை பல...
விஞ்சியேயிங்கு
கஞ்சமுக மழலையர் தம்
பிஞ்சு மொழியுனது
நெஞ்சமதை நிறைத்ததுவோ!

க.பாத்திமாறிஸ்லியா
பலாலி ஆசிரியர்
கலாசாலை

### வழிகாட்டுமா?

இழந்தது போதும் சேயே!
வஞ்சகமற்ற உன்
பிஞ்சுக்கரம் பிடித்து
நெஞ்சத்தில் குடியேறி
கஞ்சியாவது ஊட்ட
காலம் வழிகாட்டுமா?

பொ.கிருசாந்
சங்கானை

பெண்ணே.....
உன்பிள்ளைகளோ உன்னருகே
அன்பினைப் பொழிந்திட
உன் சிந்தை எல்லாம்
காணாமல் போயுள்ள - உன்
கணவனிடமே!

சி.ஜீவன்
அருவிஊரான்

### யுத்தம்

யுத்தத்தால் பட்டினி கிடந்து
உடல் பசியால் மெலிந்தாலும்
தன் பாசத்தைக் கைவிடாத
அன்னை மடியில்
குழந்தைச் செல்வங்கள்

கி.ரம்மியா
தாவடி

### பாசம்

யுத்தத்தால் அழிந்தது
உனது வீடு
பாதிக்கப்பட்டது
உனது மனது
நீ ஒன்றை இழக்கவில்லை
அதுதான் பாசம்

சி.டனுசன்
வட்டக்கச்சி

யுத்தத்தின் கோரத்தால்
தலைவனை இழந்த குடும்பம்
வறுமையின் பிடிக்குள்
சிக்கித் தவித்தாலும் - இங்கே
மழலைகள் மகிழ்ச்சிக்கு குறைவில்லை
கவலைகள் சற்றுமறந்தவளாய் - தன்
பிள்ளைகளைக் கட்டியணைத்து
முத்தமிடுகிறாள் இத்தாய்.

கு.விஜிதன்
குமுளமுனை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 46





அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றும் கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 26.11.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

- ஆசிரியர் -

# சைவத் தமிழ்ப் பண்பாட்டின் இமயம்
# சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி



வ.ஸ்ரீகாந்தன்

**சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திருமதி அ.வேலுப்பிள்ளை அவர்களுக்கு சேவைநலன் பாராட்டு விழாவும் புதிய அதிபரான வ.ஸ்ரீகாந்தனுக்கு வரவேற்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது. (ஆ-ர்)**

யாழ். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, இற்றைக்கு 135 வருடங்களுக்கு மேலாக சைவ பாரம்பரியத்தினைக் கட்டிக்காத்து பேணி வருகின்ற பழம்பெரும் கிராமப் பாடசாலை. நிற்சிங்கம் கனகரத்தினம் முதலியார் எனும் பெருமகனாரால் 1876 ஆம் ஆண்டு தனது இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டதே இப் பாடசாலை.


அன்றோ இன்றோ எமது யாழ்ப்பாண சமூகம் அரச உத்தியோகத்திலும் தொழில் பாதுகாப்பிலுமே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றது.

அந்தவகையில், அப்போதைய காலகட்டத்தில் (ஆயிரத்து எண்ணூறுகளில்) அரச தொழில் களிற்கு ஆங்கிலக்கல்வி அத்தியாவசியமானதாகவிருந்தது. இதனை ஒரு துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தி அன்றைய ஆட்சியாளர்களான வெள்ளையர்கள் தமது நோக்கமான தமது மதத்தைப் பரப்பும் கைங்கரியத்தினை மேற்கொண்டனர். ஆங்கிலக் கல்வியினைக்கற்று அரசதொழில் புரிய வேண்டுமெனில் ஒன்றில் பெரும் பணம் படைத்த தனவந்தராக இருக்க வேண்டும் அல்லது மதம் மாற வேண்டும். இதனைக் கண்டு பொறுக்காது பொங்கியெழுந்தவரே யாழ்ப்பாணத் தவப்புதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப் பெருமானார்.

சைவத்தமிழ் உணர்வாளர்களின் உதவியுடன் பல பாடசாலைகளை நிறுவும் பெரும்பணியை மேற்கொண்டு வந்தார். அவரின் உணர்வு மிக்க கருத்துக்களால் கவரப்பட்டவரே எமது பாடசாலை நிறுவுனர் நிற்சிங்கம் கனகரத்தினம் முதலியார். அவரின் சற்று வித்தியாசமான நடைமுறைச்சாத்தியமான சிந்தனையின் விளைவே இப்பாடசாலை. சுழிபுரம் மற்றும் அயற் கிராமங்களிலுள்ள ஏழை மக்கள் மதம் மாறாது ஆங்கிலக் கல்வியினைக் கற்று நற்றொழில் பெறவேண்டும். அதேவேளை, எமது சைவத்தமிழ் கலாசார விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே அவரது சிந்தனையாகவிருந்தது. இதன் காரணமாக தனது இல்லத்திலேயே ஒரு பாடசாலையை நிறுவி காலையும் மாலையும் இலவசமாகவே கற்பித்து வந்ததோடு பல மாணவர்கள் இவரது இல்லத்திலேயே தங்கி கற்க ஏற்பாடும் செய்தார்.

படிப்படியாக வளர்ச்சியடைந்த இப் பாடசாலையின் முதல் அதிபராக விளங்கிய ஆங்கிலேயரான பேராசிரியர் விலேபி ஸ்மோல் என்பவரினது கையெழுத்தைக் கண்டாலே சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் வேலைவாய்ப்புக்கள் மிகச் சுலபமாக கிடைத்தமையின் விளைவாக மாணவர் தொகை பெருகியது. அதனை ஈடு செய்யும் முகமாக 1887 இல் கனகரத்தினம் முதலியாரின் மகன் கனகரத்தினம் செல்லப்பா தனது சொந்த நிலத்தில் இப் புகழ்பூத்த பாடசாலையை அமைத்தார்.

பல்வேறு நிதி நெருக்கடிகள் ஏற்பட்ட போது தமது சொத்துக்களை விற்றும் குறிப்பாக மனைவியின் நகைககளை விற்றும் கொண்ட கொள்கையில் உறுதியாக இப் பாடசாலையை நடாத்தி வந்தமை எம்மையெல்லாம் உருக வைக்கின்ற வரலாறு. இவ் வரலாறு ஒவ்வொரு தமிழனுக்கும் ஒரு பாடம். இப்படி ஒவ்வொரு ஊரிலும் பல மனிதத் தெய்வங்கள் வாழ்ந்திருப்பார்கள். இவர்கள் செய்தவற்றில் ஒரு துளியேனும் நாம் செய்திருப்போமா? அல்லது எம்மால் செய்ய முடியவில்லையாயினும் செய்பவரிற்கு உறுதுணையாக இருந்திருக்கிறோமா?



ஆகக்குறைந்தது நல்ல முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடாது இருந்திருக்கிறோமா? இது எமக்கும் ஆண்டவனுக்குமே வெளிச்சம். சமூகத்துடன் பின்னிப் பிணைந்துள்ள இப் பாடசாலையினது வளர்ச்சியில் ஆசிரியர்களுடன் இதுவரை 29 அதிபர்கள் கடமையாற்றியுள்ளனர். 30 ஆவது அதிபராக அதே கிராமத்தைச் சேர்ந்தவரும், இப் பாடசாலையின் பழைய மாணவரும் முன்னைநாள் ஆசிரியருமான வ.சிறிகாந்தன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். பாடசாலை சமூகமும் சுழிபுரம் கிராமமும் புதிய அதிபரிடம் அதிகம் எதிர்பார்ப்பது இயல்பே.

இந்த வேளையிலேயே தாவரவியல் ஆசிரியையாக, பிரதி அதிபராக, முதல் பெண் அதிபராக பல்வேறு பொறுப்புக்களில் திகழ்ந்து ஓய்வுபெறும் எமது பெரு மதிப்பிற்குரிய,செல்வி ரீச்சர் என செல்லமாக அழைக்கப்படும் திருமதி அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளையின் காலகட்டத்தினூடாக பாடசாலையின் பரிணாம வளர்ச்சியினை நோக்குதல் பொருத்தப்பாடாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில், அண்மைக்காலத்தில் பெண்களின் அதிகாரம் அதிகளவிலே காணப்படுகின்ற போதிலும், இற்றைக்கு 12 வருடங்களுக்கு முன்பு எத்தனையோ போட்டிகளின் மத்தியில் தனது தனித்துவமான திறமை காரணமாக அதிபராகப் பதவியேற்றுக் கொண்டவர். இவர் கடந்துவந்த காலப் பகுதி எமது தமிழ் இனத்தால் மறக்க முயல்கின்ற, மறக்க முடியாத காலப் பகுதியாகும். ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியேலே பயம், பீதி மற்றும் நம்பிக்கையீனம் காணப்பட்ட காலப் பகுதி. பெண்ணாக இருந்து கொண்டு பல சவால்களை சமாளித்து பாடசாலையை முன்னேற்றப் பாதையில் நகர்த்திய பெருமை இவருக்குண்டு.

அன்பினால் எதனையும் சாதிக்க முடியும் எனத் திடமாக நம்புபவர். இவரது நிர்வாகத்திலே ஆசிரியர்களும் மாணவர்களும் அன்பிற்கு கட்டுண்டவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

இவர் பதவியில் இருந்த காலப் பகுதி அழுத்தங்களும் நெருக்கடிகளும் நிறைந்ததாகவும் வளங்கல் மிகவும் குறைந்ததாகவும் காணப்பட்டன. இருந்த போதிலும் இவரது அன்பும் அரவணைப்பும் கொண்ட நிர்வாகத் திறமை சாதனைகள் பல படைத்துள்ளன.

பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். குறிப்பாக மருத்துவம், பொறியியல், கலை மற்றும் முகாமைத்துவ பீடங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் தமிழ்த்தினப் போட்டிகளிலே வலய, மாவட்ட மற்றும் மாகாண மட்டப்போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளனர். தனி நடனம் பிரிவு 5 அகில இலங்கை ரீதியில் முதல் இடம் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.



திருமதி
அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளை

மேலும் ஆங்கில தனி நடிப்பில் மாகாண மட்டத்தில் முதலிடம் பெற்றதும் சாதனையே.

விளையாட்டுகளிலும் மாணவர்கள் பல்வேறு சாதனைகள் படைத்துள்ளனர். தேசிய மட்டம் வரை பல மாணவர்கள் பங்குபற்றியுள்ளனர். கல்விக்குரிய வளத் தேவைகள் அதிகரிக்கும் போது அரச நிதி ஒதுக்கீடு போதாமலேயே உள்ளது. இதனை ஈடு செய்யும் முகமாக பழைய மாணவர் சங்கத்துடன் நட்புறவினைப் பேணி குறிப்பாக கனடாக்கிளை, அவுஸ்திரேலியா கிளைகள் ஊடாக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தமை இவரின் சாதனை எனலாம்.

இத்தகைய அன்பும், பண்பும், ஆளுமையும் கொண்ட ஓய்வுபெறும் அதிபரை நீண்டகாலம் நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழ வாழ்த்துவதோடு எமது புதிய அதிபரை வரவேற்பதில் பாடசாலைச் சமூகம் பெருமிதமடைகிறது.

ஓய்வுபெறும் அதிபர் பல கனவுகளுடன் காத்திருந்தவர். பாடசாலையை நல்லதோர் அதிபரி டம் கையளித்துச் செல்ல வேண்டும் என நிதமும் பிரார்த்திருந்தவர். அவரின் எதிர்பார்ப்புக்கு மேலாகவே மிகவும் திறமை படைத்த ஒரு அதிபரிடம் கையளிப்பதை இட்டு மகிழச்சி அடைபவர் அவரை விட வேறு யாராக இருக்க முடியும்.

டாக்டர் எஸ். கண்ணதாசன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

புதிய அதிபரின் நிர்வாகத்திறமை, பாடசாலை மீதான ஈடுபாடு மற்றும் அர்ப்பணிப்பில் பாடசாலை சமூகம், பழைய மாணவர் சங்கம் மற்றும் நலன்விரும்பிகள் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். அவரது வருகையை ஓர் அதிர்ஷ்டமாகக் கருதுகின்றனர்.

கப்பலிற்கு நல்ல தலைவன் கிடைப்பது அதன் பயண இலக்கை உறுதிப்படுத்தும். அந்த வகையில் " விஞ்ஞான தொழில்நுட்ப அறிவு கொண்ட, கலாசார விழுமியங்களைப் பேணும் நற்பிரஜைகளை உருவாக்கும்" பாடசாலையின் இலக்கினை புதிய அதிபரின் வரவு மெரு கூட்டும் என நம்புவோமாக.






பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் விளையாட்டுத்துறையில் சாதனை நிகழ்த்திய வீராங்கனைகளை பாராட்டும் விழா பாடசாலை கனடா பழைய மாணவர் சங்க அனுசரணையுடன் நடைபெற்றது. இவ் விழாவின் போது விருந்தினர்கள் மற்றும் வீராங்கனைகள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை அபிவிருத்தி செயலாளர் எஸ்.சிறிபவன் வீராங்கனை ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் யாழ். மேல திக மாகாண கல்விப்பணிப்பாளர் பி.ரி.செல்வரத்தினம்,பாடசாலை அதிபர் திருமதி சுந்தரேசனுக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதி சலுகை அதிகரிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதி தொடர்பான சுற்று நிருபத்தை திறைசேரி மாற்றியுள்ளது.

இதன் படி அதிக எண்ணிக்கையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரிச்சலுகைகைய பயன்படுத்தி தமது சொந்த பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும்.

இவ்வருட முற்பகுதியில் வெளியிப் பட்ட சுற்று நிருபத்தின் படி கடந்த 5 வருட காலத்தில் வாகன இறக்குமதிக்கான வரிச்சலு கையை பயன்படுத்தாதவர்கள் மாத்திரமே மீண்டும் இச்சலுகையைப் பெற முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

5 வருட காலம் என்பது இறுதியாக வரிச்சலுகையைப் பயன்படுத்தி,வாகனங்களை இறக்குமதி செய்த தினத்தில் இருந்து கணிக்கப்பட்டதால் 69 பேர் மாத்திரமே இச் சலுகையைப் பெற தகுதி உடையவர்களாக இருந்தனர்.

எனினும் கடந்த 17ஆம் திகதி திருத்தப்பட்ட சுற்று நிருபத்தின் படி 5 வருட காலம் என்பது வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரம் பெற்ற தினத்தில் இருந்து கணிப்பிடப்படும்.

பெரும்பாலான எம்.பிக்கள் அனுமதி பத்திரம் பெற்று ஒரு வருடத்தின் பின்னரே வாகனங்களை இறக்குமதி செய்தனர்.

மேற்படி 5 வருட காலம் கடந்த செப்ரெம்பர் 23ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது.

இந்நிலையில் மீண்டும் எம்.பிக்களாக தெரிவு செய்யப்பட்டவர்கள் சலுகை அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் இச்சலுகையின் படி 50 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனம் ஒன்றை இறக்குமதி செய்ய முடியும். இதற்கு 18 சதவீத இறக்குமதி வரி மாத்திரமே அறவிடப்படும். இதற்காக இலங்கை வங்கிக்கூடாக 50 இலட்சம் ரூபா கடனும் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (5-2)

## ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகைத் திட்ட இழப்பு இரு தரப்பு உறவுகளை பாதிக்கவில்லை

### ஐரோ. தூதுவர் விளக்கம்

(கொழும்பு)

ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகை திட்ட இழப்பானது இரு தரப்பு உறவுகளை பெரிதாக ப்ாதிக்கவில்லை என ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கைப் பிரதிநிதி ரிவன்த ஆரியசிங்க தெரிவித்துள்ளார். இவ் வரிச் சலுகைத் திட்டம் இழக்கப்பட்ட போதிலும் வேறு வழிகளில் உறவுகள் நீடிக்கப்பட்டு வருகின்றன. அண்மையில் பெல்ஜிய வர்த்தகப் பிரமுகர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தமை இதனைக் கூறுகின்றது.

ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகைத் திட்டம் இல்லாமலேயே பல நாட்டு நிறுவனங்கள் இலங்கையுடனான வர்த்தக உறவினை நீடித்து வருகின்றது.

இலங்கைப் பண்டங்கள் தொடர்பான நன்மதிப்பினால் தொடர்ச்சியாக வர்த்தக உறவுகள் பேணப்பட்டு வருகின்றன. வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள உசிதமான இலங்கையை ஐரோப்பிய நாடுகள் கருதுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (5-2)

## போலி விசாவில் பிரான்ஸ் செல்ல முற்பட்ட ஒருவருக்கு 2 வருட சிறை

போலி விசா ஒன்றைப் பயன்ப டுத்தி பிரான்ஸிற்கு செல்ல முற்பட்ட தமிழர் ஒருவருக்கு நீதிமன்றம் ஒத்தி வைக்கப்பட்ட இரண்டாண்டு கால கடூழிய சிறைத்தண்டனையும் 50 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

வவுனியாவைச் சேர்ந்தவரே இவ்வாறு போலியான ஆவணங்க ளைப் பயன்படுத்தி பிரான்ஸ் நாட்டிற்கு செல்ல முற்பட்டதாக ஒப்புக் கொண்டதையடுத்தே மேற்படி தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாத்திலும் குறித்த நபர் போலி விசாவைப் பயன்படுத்தி பிரான்ஸிற்கு செல்ல முற்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. இரகசியப் பொலிஸாரின் தகவல்களின் அடிப்படையில் குறித்த நபரை விமான நிலைய பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் படுத்தியதாகக் குறிப்பிடப்படுகிறது. (5-2)


2010.11
21

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1272-மூன்றாம் ஹென்றி நவம்பர் 16இல் இறந்ததையடுத்து அவனது மகன் எட்வேர்ட் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.
- 1739-வட கரொலைனா ஐக்கிய அமெரிக்காவின் 12ஆவது மாநிலமாக இணைக்கப்பட்டது.
- 1791-நெப்போலியன் பொனபார்ட் பிரஞ்சு இராணுவத்தின் தளபதியானான்.
- 1894-சீனாவின் மஞ்சூரியாவில் ஆர்தர் துறைமுகத்தை ஜப்பான் கைப்பற்றியது.
- 1905 -ஆற்றலுக்கும் திணிவுக்கும் இடையேயான தொடர்பை விளக்கும் ஆய்வுக் கட்டுரையை அல்பேர்ட் ஜன்ஸ்டைன் வெளியிட்டார்.
- 1916-பிரித்தானியக் கப்பலான எச்.எம்.எச்.எஸ்.பிரித்தானிக் கிரேக்கத்தில் ஏஜியன் கடலில் வெடித்து மூழ்கியதில் 30 பேர் கொல்லப்பட்டனர்.
- 1920-டப்ளினில் காற்பந்துப் போட்டி நிகழ்வொன்றில் பிரித்தானியப் படையினர் சுட்டதில் 14 ஐரிஷ் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.
- 1942- அலாஸ்கா நெடுஞ்சாலை திறக்கப்பட்டது.
- 1947-இந்தியா விடுதலை அடைந்த பின்னர் முதன்முறையாக அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. ஜெய்ஹிந்த் என்ற வார்த்தையுடன் வெளியிடப்பட்ட முதல் அஞ்சல் தலையின் விலை மூன்றரை அணா.
- 1962-சீன மக்கள் விடுதலை இராணுவம் இந்தோனேசியா-சீனப் போரில் போர் நிறுத்தம் செய்வதாக ஒரு தலைப்பட்சமாக அறிவித்தது.
- 1963-பாரதத்தின் முதலாவது ஈரடுக்கு உளவு ஏவுகணை நைக்-அபாச்சி ஏவப்பட்டது.
- 1969-முதலாவது ஆர்ப்பநெட் (ARPANET) தொடர்பு ஏற்பட்டது.
- 1969-ஒக்கினாவா தீவை 1972 இல் ஜப்பானியரிடம் ஒப்படைப்பதற்கான ஒப்பந்தம் அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சனுக்கும் ஜப்பான் பிரதமர் ஐசாக்கு சாட்டோவுக்கும் இடையில் வோஷிங்டனில் கையெழுத்திடப்பட்டது.
- 1971-வங்காள தீவிரவாதக் குழுவான முக்தி பாஹினியின் உதவியுடன் இந்திய படைகள் கரிப்பூர் என்ற இடத்தில் பாகிஸ்தான் படைகளைத் தோற் கடித்தன.
- 1974-பேர்மிங்ஹாமில் ஐரிஷ்குடியரசு இராணுவத்தினரின் குண்டுவெடிப்பில் 21 பேர் கொல்லப்பட்டனர்.
- 1980-நெவாடாவில் விடுதி ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் 87 பேர் கொல்லப்பட்டு 650 பேர் காயமடைந்தனர்.
- 1990-புலிகளின் குரல் வானொலி ஆரம்பிக்கப்பட்டது.
- 1996- புவேர்ட்டோ ரிக்கோவில் சான் ஜுவான் நகரில் கடைத்தொகுதி ஒன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 33 பேர் கொல்லப்பட்டனர்.
- 2004-டொமினிக்காத் தீவில் இடம் பெற்ற நிலநடுக்கம் போர்ட்ஸ்மவுத் நகரில் பலத்த சேதத்தை விளைவித்தது.

### இறப்புக்கள்

- 1970-சி.வி. இராமன்,இந்திய பௌதிகவியலாளரும் நோபல் பரிசு பெற்றவரும் (பி.1888)
- 1996-அப்துல் சலாம், நோபல் பரிசு பெற்ற பாகிஸ்தானியர் (பி.1926)



**1877-ஒலியைப் பதியவும் கேட்கவும் உதவக்கூடிய போனோகிராஃப் என்ற கருவியைத் தாம் கண்டுபிடித்ததாக தோமஸ் எடிசன் அறிவித்தார்.**

# அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் வீழ்ச்சி

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கையின் ஆடை ஏற்றுமதி ஜி.எஸ்.பி. வரிச்சலுகை நீக்கப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்து வருவதாக சிறிலங்கா காமன்ற் பையிங் ஒபிசர்ஸ் அசோசியேசன் என்ற அமைப்பின் பொதுச் செயலாளர் ஹரின் பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,


ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி.வரிச்சலுகை நிறுத்தப்பட்ட பின்னர் அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.இது உளவியல் ரீதியான பாதிப்பு.ஐரோப்பிய ஒன்றியமும் அமெரிக்காவுமே இலங்கையின் பிரதான ஆடை ஏற்றுமதி சந்தைகளாக இருந்து வருகின்றன.

இலங்கையின் ஆடை ஏற்றுமதியில் 94.5 வீதம் இந்த நாடுகளுக்கே இடம்பெறுகிறது.அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதி இந்த ஆண்டின் ஓகஸ்ட் மாதம் வரையான காலத்தில் 4.6 வீதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

கடந்த ஆண்டு முதல் 8 மாதங்களில் அமெரிக்காவுக்கான ஆடை ஏற்றுமதி 873 மில்லியன் டொலராக இருந்தது.ஆனால் இந்த ஆண்டு அது 833 மில்லியன் டொலராகக் குறைந்துள்ளது.

ஐரோப்பியத்துக்கு ஆடை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இலங்கை எட்டாவது இடத்தைப் பெற்றிருந்தது.ஆனால் ஜி.எஸ்.பி.பிளஸ் இழப்பால் பின் தள்ளப்படும் நிலையிலுள்ளது.

ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை நிறுத்தப்பட்டதானது ஆடை தயாரிப்புத் தொழிலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.மில்லியன் கணக்கான டொலர் ஆடை ஏற்றுமதி பாதிக்கப்படுவதுடன் இந்தத்துறையில் பல்லாயிரக் கணக்கானோரின் வேலை வாய்ப்பும் விரைவில் பறிபோகவுள்ளது எனத் தெரிவித்தார்.



இலங்கையின் சிறந்த வங்கியாக தொடர்ந்து 12–வது வருடமாக கொமர்ஷல் வங்கி,குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.இதற்கான விருதை வாஷிங்டனில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அமித குணவர்த்தன,குளோபல் பினான்ஸ் பணிப்பாளார் ஜோசப் ஹிரபுடோவிடமிருந்து பெறுவதைப் படத்தில் காணலாம்.




# அடுத்த வருடம் ஐ.பி.ஓ.; 3 கம்பனிகள் தயார்நிலை

எக்ஸ்போலங்கா,யூனியன்வங்கி மற்றும் பிறீ லங்கா ரேடிங் ஆகிய

## எப்.சி.சி.ஐ.எஸ்.எல். தலைவராக திஸ்ஸ ஜெயவீர

இலங்கை கைத்தொழில் வர்த்தக சம்மேளனத்தின் (FCCISL) 16–வது தலைவராக அண்மையில் நடைபெற்ற 36–வது வருடாந்த பொதுக் கூட்டத்தில் திஸ்ஸ ஜெயவீர தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஜெயவீர தற்போது ஏ.ஐ.எம். எஸ்.(பிரைவட்)லிமிட்டட்,குளோபல் போக்கஸ் பிரைவட் லிமிட்டட்,ரி.ஜே. அசோசியேட்,அலெக்ஷாண்டர் பொலிகிளினிக் ஆகிய நிறுவனங்களின் தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரியாகவும்,ஜப்பான் ஏசியா முதலீட்டு நிறுவனம் மற்றும் லயன்வெற் ஹோல்டிங் இங் ஆகியவற்றின் ஆலோசகராகவும் ,இலங்கை –பங்களாதேஷ் வர்த்தக சங்க தலைவராகவும் உள்ளார்.

நிறுவனங்கள் அடுத்த ஆண்டு ஆரம்ப பொது வழங்கல் மூலம் பங்குகளை பொது மக்களுக்கு வழங்கும் நடவடிக்கைக்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. குறிப்பிட்ட சந்தை வட்டாரத் தகவல் படி,


3 நிறுவனங்களும் 2011இன் முதல் பாதியில் தங்கள் ஆரம்ப பொது வழங்கலை (IPO) ஆரம்பிக்கவுள்ளன.

எக்ஸ்போ லங்கா குறூப், ஏற்றுமதி,இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஒரு நிறுவனம்.யூனியன் வங்கி நிதித்துறையிலும்,

பிறீ லங்கா ரேடிங் கம்பனி இயந்திர உற்பத்திகள்,பெருந்தோட்டத் துறை,பொறியியற்துறையிலும் ஈடுபட்டுள்ளன.

ஆரம்ப பங்கு வழங்கல் மூலம் இந்நிறுவனங்கள் செயற்பாட்டு மூலதனத்தை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளன.

# 2011-ல் பரீட்சார்த்த எண்ணெய் தோண்டும் பணிக்கு 'சிக்யு' கப்பல்



(கொழும்பு)

மன்னார் கடற்கரையில் பரீட்சார்த்தமாக 3 எண்ணெய்க் கிணறு தோண்டும் பணியை சிக்யு (Chikyu) என்ற ஆழ்கடல் எண்ணெய் தோண்டும் கப்பல் மேற்கொள்ளவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கெய்ன் லங்கா லிமிட்டடினால்,ஜப்பான் டிறிலிங் கம்பனி லிமிட்டட்டுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கெய்ன் லங்காவின் தாய் நிறுவனமான கெய்ன் இந்தியா நிறுவனம் மன்னார் கடற்பரப்பில் 3ஆயிரத்து 400 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் எண்ணெய் தோண்டும் பணிக்கு 110 மில்லியன் அமெரிக்க டொலரை முதலிட எதிர்பார்க்கிறது.

குறித்த தரப்புக்களின் தகவல் படி,சிக்யு கப்பல் அடுத்த ஆண்டு இலங்கைக்கு வந்து தனது பணிகளை ஆரம்பிக்கும். இந்நிலையில், கெய்ன் லங்கா லிமிட்டட் இதற்கான சட்ட ஆயத்தப்பாடுகள், தோண்டும் பணியின் செயல் ஒழுங்குகளை வடிவமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

3 கட்டங்களில் செயற்படுத்தப் படவுள்ள இத் திட்டப்படி,முதற்கட்டம் 3 ஆண்டுகளில் நிறைவு செய்யப்பட வேண்டும்.

இரண்டாம் கட்டம் இரண்டு முதல்மூன்று ஆண்டுகளில் நிறைவு செய்யப்படவேண்டும்.

கடந்த ஓகஸ்ட் கெய்ன் லங்கா லிமிட்ட் இதற்கான கேள்வி கோரலை சர்வதேச ரீதியாக மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூ |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110.91 | 112.58 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 177.07 | 181.19 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 150.12 | 154.56 |
| சுவிஸ் பிராங் | 110.33 | 113.99 |
| கனேடிய டொலர் | 107.75 | 111.44 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.67 | 112.19 |
| சிங்கப்பூர் டொலர் | 84.92 | 87.46 |
| ஜப்பான் யென் | 1.32 | 1.35 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.47 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.41 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# அரச வங்கிகள் தமது சேமிப்பை ரூ.10 பில்லியனாக அதிகரிக்க திட்டம்




இலங்கை வங்கியும் மற்றைய இரண்டு அரச வங்கிகளான மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பன அடுத்த 2 வார காலப் பகுதிக்குள் தங்கள் சேமிப்பை 10 பில்லியன் ரூபாயால் அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளன என இலங்கை வங்கியின் தலைவர் கலாநிதி காமினி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.இலங்கை வங்கி 2012 முடிபில் தனது வங்கி/ஐந்தொகை மீதியை ஒரு டிரில்லியன் ரூபாயாக அதிகரிக்க இலக்கு நிர்ணயித்துள்ளது என Unity Premium Bond ஆரம்ப நிகழ்வில் பேசும்போது தெரிவித்தார்.

வங்கி ரூ.1,000,ரூ.5,000, ரூ. 50,000,ரூ.100,000,ரூ.500,000 பெறுமதியான சான்றிதழ்களை அறிமுகப்படுத்தியுள்ளது.இதற்கு நவம்பர் 30 வரை ஒரு விசேட வட்டியான 8%கிடைக்கும்.இதன் முதிர்வு காலம் 24 மாதங்களாகும் எனத் தெரிவித்தார்.இதேவேளை இச்சேமிப்புகள், இலங்கையின் 2016–ல் தனிநபர் வருமானத்தை இரட்டிப்பாக்கும் எதிர்பார்ப்புக்கு உதவும் என்றார்.

## 24 மணிநேரமும் இலங்கை வங்கி

முன்னணி அரச வங்கியான இலங்கை வங்கியின் சில தெரிவு செய்யப்பட்ட கிளைகள் 24 மணி நேரமும் செயற்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை வங்கியின் தலைவர் Dr. காமினி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சில கிளைகளை வருடத்தின் 365 நாட்களும் 24 மணிநேரமும் செயற்படுத்த திட்டமிட்டு வருகிறோம். தனிநபர் நிதிச்சேவைகள், விமான பயணச்சீட்டு பதிவுகள்,பிரயாணக் காசோலை வசதிகள், நாணயமாற்று விடயங்களை இந்த 24/7 கிளைகளில் மேற்கொள்ள முடியும் என்றார்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6600.06 | 6565.00 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 7157.95 | 7115.43 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 5463.52 |

*உயர்வடைந்த பங்குகள்(ரூ.):* எஸ்.எம்.பி.லீசிங் (X) (0.90), எம்.ஈ.ஆர்.சி. சிப்பிங் (212.50), ஹபுஹஸ்ரி (57.00), எஸ்.எம்.பி.லீசிங் (1.20), சிங்கர் (130.00).

*சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):* ஈ.பி.கிரேஸி (931.30), விடுலங்கா (6.00), ஹ்ஜே(45.00),புளூ டைமன்ட்ஸ்(X) (1.80), ஹெஸ்னர் (104.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# புதிய லோகோவுடன் ஏர்டெல் புதுப்பொலிவு பெற்றது

airtel

சர்வதேச அளவில் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமாக விளங்கும் பார்தி ஏர்டெல் நிறுவனம், 20 கோடி வாடிக்கையாளர் என்ற மைல் கல்லை எட்டியுள்ள நிலையில்,புதிய லோகோவை வெளியிட்டுள்ளது.இது குறித்து பார்தி ஏர்டெல் நிறுவன தலைவரும், நிர்வாக இயக்குநருமான சுனில் பார்தி மிட்டல் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆசிய மற்றும் ஆபிரிக்க கண்டங்களில் 19க்கும் மேற்பட்ட நாடுகளில் வெற்றிக்கொடி நாட்டியுள்ள ஏர்டெல் நிறுவனம் ,15 ஆண்டு காலத்தை பூர்த்தி செய்துள்ளதாகவும் ,200 மில்லியன் வாடிக்கையாளர்கள் தற்போது தங்கள் வசம் உள்ளதாகவும்,இதன்மூலம் சர்வதேச அளவில் தொலைத்தொடர்பு துறையில் முன்னணி இடத்தைப் பெற்றிருப்பதாகவும்,இதனைக் கொண்டாடும்பொருட்டும்,இளைய தலைமுறையினரை கவரும் விதமாக புதிய லோகோ வடிவடைத்து தற்போது வெளியிடப்பட்டுள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானால் உருவாக்கப்பட்டு,சர்வதேச அளவில் 150 மில்லியனுக்கும் அதிகமானோரால் பதிவிறக்கம் செய்யப்பட்ட சிக்னேச்சர் டியூனும் புதுப்பொலிவு பெறுகிறது. இந்த ஆண்டின் இறுதிக்குள் ஏர்டெல் நிறுவனம்,3ஜி சேவையை துவங்கஉள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# எங்கள் சுதந்திர தாகம் வெளியேறும் அகதிகளின் குரல்

இலங்கையிலிருந்து போரினால் குண்டடி,ஷெல்லடிபட்டு சொந்தங்களையும் இழந்து,இறந்த உறவுகளை தூக்கி புதைக்கக்கூட முடியாமல் வதை முகாம்களில் சிக்கி மீண்டும் உயிரை பணயமாக வைத்து வதை முகாம்களில் இருந்து தப்பி...இருந்த பொருளையெல்லாம் படகோட்டிக ளிடம் கொடுத்து,கட்டிய துணியும்,கையில் குழந்தையுமாக நடுக்கடலில் மணல் திட்டில் “என் சொந்த இனமே,இரத்த உறவே என்னையும் கூட்டிப்போ” என்று கையேந்தி நின்று... அகதிகளாக இந்தியா வந்திருக்கும் ஈழத்தமிழர்கள் சுமார் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பேரை பல்வேறு இடங்களில் முகாம்கள் அமைத்து தங்க வைத்து அவர்களின் அடிப்படை தேவைகளான உணவு,உடை, உறைவிடம் கொடுத்து பணக்கொடை என்ற பெயரில் சிறு பண உதவியும் செய்து வருகிறது தமிழக அரசு.

இந்நிலையில்,ஈழத்தமிழர்கள் வெளிநாடு செல்ல முயன்ற போது கேரளாவில்,ஆந்திராவில் பிடிபட்டனர் என்றும் இப்போது நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் 14 பேர் பிடி பட்டனர் என்றும் இவர்களுடன் போலி முகவர்களும் பிடிபட்டனர் என்றும் தினம் தினம் செய்திகள் வருகின்றன. ஏன் இந்த நிலை?

ஈழத்தமிழர்களிடமே பேசினோம். மனம் திறந்து பேசினார்கள். தங்களை மட்டும் அடையாளம் காட்டிக் கொள்ளாமல்... “அண்ணா எங்கட சொந்த நாட்டில் அகதிகளை விடவும் மோசமாகத்தான் வாழ்ந்தோம். சில ஆண்டுகள் கூட ஒரே இடத்தில் நிம்மதியாக வாழ்ந்ததில்லை. எங்கட காணிகள் கிடந்தும் வெள்ளாமை செய்ய முடியவில்லை. எங்கட பிள்ளையளை பாடசாலைக்கு அனுப்ப இயலவில்லை. பாடசாலையிலும் குண்டு போடுகிறான். செல் அடிக்கிறான் இராணுவம். எப்படியாவது வெளியே பிள்ளையளை படிக்க வைக்க வேண்டும். அவர்கள் படிச்சாவது எங்கட நாட்டுக்கு சுதந்திரம் வாங்கித் தரட்டும் எண்டு தான் இருந்த பொருளையெல்லாம் படகோட்டிக்குக் கொடுத்து,சில பொருட்களுடன் பிள்ளையளைக் கூட்டிக்கொண்டு படகேறி பயணமானோம்.

அந்தப் படகு இந்திய கடல் எல்லை மணல் திட்டில் இறக்கி விட்டு சென்று விடும்.அதன் பின்னர் தான் நாங்கள் இந்திய நேவியிடமோ மீனவர்களிடமோ உதவி கேட்டு இந்திய முகாம்களில் தங்க வைக்கப்படுகிறோம்.

1990ஆம் ஆண்டு வாக்கில் வந்த எங்கட உறவுகள் இந்திய முகாம்களில் உள்ள வசதிகள் போதும் என்று பேசாமல் தங்கி விட்டனர். உணவு,உடை,உறைவிடம்



கொடுத்து பணக்கொடையும் அரசு கொடுப்பது போதுமென்று பிள்ளைகளையும் இங்கேபடிக்க வைக்கின்றனர். தினக்கூலி வேலைக்கும் போறாங்கள். உழைக்கும் பணத்தில் மதுவுக்கும் அடிமையாகிப்போனார்கள். அவர்கள் வெளியே செல்ல நினைக்கவில்லை. அவர்கள் இங்கிருக்கும் சுதந்திரம் போதும் என்று நினைக்கிறார்கள்.

ஆனால் நாங்கள் முள்ளிவாய்க்கால் போர் நடக்கும்போது,கூட இருந்தவர்கள் அடிபட்டு உதைபட்ட எங்களுக்குத் தான் தெரியும் அதன் வலி.எங்கட கண்முன்னே சகோதரிகள் பலியாகினர். அதைப்பார்த்து கண்ணீர்தான் வடிக்க முடிந்தது.

விசாரணை என்ற பெயரில் பிடித்துச்செல்லப்பட்ட தமிழ் இளைஞர்களை விடுவிப்பது போல போட்டோ,வீடியோ எடுத்துக்கொண்டு மீண்டும் சிறைப்படுத்திவிட்டனர். அங்கிருந்து குரல் உயர்த்தி அழக்கூட முடியாது. அப்புறம் எப்படி எங்கட சுதந்திரத்திற்காக அங்கிருந்து குரல் கொடுக்க முடியும். அதனாலதான் இந்தியா வந்தோம். இங்கிருந்து குரல் கொடுத்து உலக மக்களை ஈழ மக்கள் பக்கம் திரும்பிப்பார்க்க வைக்கலாம் என்று நினைத்து வந்தோம். ஆனாலும் இங்கேயே அங்குபோலத்தான் உள்ளது. எங்களுக்கு மட்டுமில்லை இந்நாட்டு குடிமகன்கள் கூட இந்தியாவில் ஈழம் என்று பேசவே தடை உள்ளது என்று தெரிந்துகொண்டோம்.

நமக்கென்று தனித்தமிழ் ஈழ நாடு இருந்தால் இப்படி நாடோடிகள் போல ஒவ்வொரு நாடாகச் செல்லத்தேவையில்லை. நம்பிள்ளைகளும் படிக்கும் சுதந்திரமாக சொந்த நாட்டில் வாழ முடியும். அதற்கு இந்தியாவில் இருந்து குரல் கொடுக்க முடியாது. சட்டமும் அனுமதிக்காது.

முள்ளிவாய்க்கால் கொடுமை நடந்த போது உலக மக்கள் போராட்டங்கள் செய்தனர். ஆனால் இந்திய முகாம்களில் உள்ளவர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூட முடியவில்லையே.

இப்போது நாடு கடந்த தமிழீழம் உருவாக்கப்பட்டு விட்டது. அவர்களின் கரத்தை வலுப்படுத்த வேண்டும். அதற்கு இந்தியாவில் இருந்து செய்ய முடியாது. அதனால் ஈழத் தமிழர்களை அரவணைத்து பணக்கொடையும் வேலையும், குடியுரிமையும் கொடுத்து முழு சுதந்திரத்துடன் ஈழ சுதந்திரத்திற்கு குரல் உயர்த்தி போராட அனுமதிக்கும் இங்கிலாந்து,அவுஸ்திரேலியா, கனடா,ஜெர்மனி,பிரான்ஸ், பெல்ஜியம், நோர்வே போன்ற 13 நாடுகளுக்கும் சென்று வேலையும் செய்துகொண்டு சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று தான் இந்தியாவில் இருந்து தப்பிக்க நினைக்கிறோம்.

சுதந்திர தாகம் கொண்ட எங்கள் பயணம் எப்படிப்பட்டது தெரியுமா?இந்தியா வந்த நாங்கள் எளிமையாக விமானத்தில் அந்த நாடுகளுக்கு போக முடியாது. அதனால் தான் ஆபத்தான கடல் வழியை தேர்ந்தெடுக்கிறோம். அவுஸ்திரேலியா போக 3 இலட்சம் வீதம் சொந்தப்பணத்தை ஒருசில புரோக்கர்களிடம் கொடுத்துவிட்டு அவர்கள் சொல்லும் இடத்திற்கு போகிறோம். அங்கே ஒரு சிறிய மீன்பிடி படகில் தான் 20,30பேர் 15,20 நாட்கள் நடுக் கடலில் கடும்பயணம் செய்ய வேண்டும்.

சில நேரங்களில் புரோக்கர்களும் ஏமாற்றி விடுவார்கள்,சில நேரங்களில் கடலில் இறங்கும் முன்போ பிடிபடுவோம், சில நேரங்களில் நடுக்கடலில் ஏதேனும் நாட்டில்பிடிபடுவோம். இந்த கடும் பயணத்தில் முழுவெற்றி யுடன் சென்றவர்களும் உண்டு. இப்படித்தான் போன மாதம் இங்கிருந்து ஒரு படகு இந்தோனேசியாவில்

**நக்கீரன்**

மாட்டிக்கிட்டு நிற்கிறாங்க அண்ணா. எங்கட பிள்ளைகளாவது ஈழத்தில் சுதந்திரமாக வாழ வேண்டும் அண்ணா. இந்தியாவில் இருந்து கொண்டு ஈழ சுதந்திரத்திற்கு குரல் கொடுக்க அனுமதித்தால் மட்டுமே எங்கட வெளிநாட்டுப் பயணம் குறையும்” என்று நீண்ட விளக்கம் கொடுத்தனர் அந்த ஈழத்தமிழர்கள்.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது இரண்டாவது பதவிக்காலத்தைநேற்று முன் தினம் ஏற்றுக்கொண்டபோது இலங்கைக்கு வருகை தந்த இந் திய வெளியுற வுத்துறை இணை யமைச்சர் காபூர் நேரில் வாழ்த்துத் தெரிவித்தபோது...

## இலங்கை புகலிடக் கோரிக்கையாளர்கள் குறித்து இந்தியா-கனடா பேச்சு

இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கனடா வும் இந்தியாவும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன. இலங்கை புக லிடக் கோரிக்கையாளர்கள் கனடா நோக்கி சட்டவிரோதமான முறை யில் பிரவேசிப்பது குறித்து இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கனேடிய புலனாய்வுப் பிரிவின் றொபர்ட் பி. பெடனும் இந்திய புலனாய்வுப் பிரிவின் ராஜீவ் மாதூர் ஆகியோருக்குமிடையில் இச் சந்திப்பு நடைபெற்றுள்ளது. புலனாய்வுத் தகவல்களை பரிமாறிக் கொள்ளல், இலங்கை தமிழ் அகதிகள் தொடர்பான தகவல்களைப் பரிமாறிக் கொள்ளல் ஆகியன தொடர்பில் விரிவாக கலந்துரையாடப் பட்டுள்ளது. இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள கனேடிய புலனாய் வுப் பிரிவு அதிகாரி உள்துறைச் செயலாளர் ஜீ. கே. பிள்ளை மற்றும் ஆய்வுப் பிரிவு பொறுப்பாளர் ஏ.கே. வர்மா ஆகியோருடன் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். (2-5)

# 'சிண்டுமுடியும்' பணியில் ஜெயலலிதா சீறிவிழுகிறார் முதல்வர் கருணாநிதி



ஜெயலலிதா, காங்கிரஸ் மீது கருணாநிதிக்கு நம்பிக்கை இல்லையா என்று வழக்கம்போல "சிண்டுமுடியும்" பணியிலே ஈடுபட்டுள்ளார். பலமுறை இத்தகைய முயற்சியிலே ஈடுபட்டு தோல்வியைத் தழுவிய நிலையிலும் மீண்டும் மீண்டும் அந்த முயற்சியிலே ஈடுபடுகிறார். காங்கிரசுக்கும் எங்கள் மீது முழு நம்பிக்கை இருக்கிறது , எங்களுக்கும் காங்கிரஸ் மீது முழு நம்பிக்கை இருக்கிறது என்று தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முதல் அமைச்சர் கருணாநிதி வெளியிட்டுள்ள கேள்வி பதில் வடிவிலான அறிக்கையில்,

**கேள்வி:-** காங்கிரஸ் கட்சியின் மீது கருணாநிதிக்கு நம்பிக்கை இல்லை என்பது தெளிவாகிறது என்று ஜெயலிதா தனது அறிக்யையில் சொல்லியிருக்கிறாரே?

**பதில்:-** பொதுவாக தணிக்கைத் துறை சார்பில் தாக்கல் செய்யப்படும் அறிக்கைகள் மத்திய அரசு குறித்தோ,மாநில அரசு கள் குறித்தோ இருக்குமாயின் இதுவரை முறையே அந்தந்த அவையின் பொது கணக்குக் குழுவிடம்தான் மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது.முறையாக கடைப்பிடிக்கப்பட்ட அந்த முறையைத்தான் பின்பற்ற வேண்டுமென்று மத்திய அரசும், அதன்தோழமைக் கட்சிகள் என்ற முறையில் நாங்களும் முதலில் கருதினோம்.

அது மாத்திரமல்ல, மத்திய அரசில் தற்போது பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக இருப்பவர் முரளி மனோகர் ஜோஷி. பா.ஜ.கவைச் சேர்ந்தவர். எனவே அவர் தலைமையிலே உள்ள பொதுக்கணக்குக் குழு ஸ்பெக்ட்ரம் பற்றி விசாரிக்கலாம். ஆளுங்கட்சியின் சார்பிலே உள்ளவர் தலைமையிலே பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட்டுக்குழு முறைப்படி அமைக்கப்பட்டால், பின்னர் அதைப்பற்றியும் எதிர்க்கட்சிகள் குறை கூறலாம் என்ற எண்ணத்தோடு தான் எதிர்க்கட்சியினருக்கு பா.ஜ.க.வைச் சேர்ந்தவரும், பொதுகணக்குக் குழுவின் தலைவருமான முரளி மனோகர் ஜோஷி மீது நம்பிக்கை இல்லையா என்று நான் கேட்டிருந்தேன்.

இதையொட்டித்தான் ஜெயலலிதா காங்கிரஸ் மீது கருணாநிதிக்கு நம்பிக்கை இல்லையா என்று வழக்கம்போல 'சிண்டுமுடியும்' பணியிலே ஈடுபட்டுள்ளார். பலமுறை இத்தகைய முயற்சியிலே ஈடுபட்டு தோல்வியைத் தழுவிய நிலையிலும் மீண்டும் மீண்டும் அந்த முயற்சியிலே ஈடுபடுகிறார். காங்கிரசுக்கும் எங்கள் மீது முழு நம்பிக்கை இருக்கிறது. எங்களுக்கும் காங்கிரஸ் மீது முழு நம்பிக்கை இருக்கிறது.

நாடாளுமன்றக் கூட்டுக்குழு வேண்டுமன்ற பா.ஜ.கவின் கோரிக்கையை முழு அளவில் ஆதரித்துக்கொண்டே, காங்கிரஸ் கட்சிக்கும் ஜெயா விரிக்கும் மாய வலையைப் புரிந்துகொள்ள முடியாத நிலையில் யாரும் இல்லை.உங்களின் நிலையை தெரிந்து கொண்டுதானே மார்க்சிஸ்ட் கம்யூனிஸட் கட்சி சார்பில் தீர்மானம் நிறைவேற்றி பத்திரிகையிலே கொடுத்திருந்தார்கள். நான்கு நாட்களாக அதற்குப் பதில் சொல்ல வக்கில்லை. இதில் எங்களைப் பற்றிப் பேச மட்டும் ஜெயாவுக்கு வெட்கமாக இல்லைபோலும்!

**கேள்வி:-**"தி.மு.கவை மீண்டும் ஆட்சிக்கு வரவிடமாட்டேன்" என்று ஒரு கட்சியின் தலைவர் சவால் விட்டிருக்கிறாரே?

**பதில்:-** எந்தத் திரைப்படத்தில்?

**கேள்வி:** ஜெயலலிதாவின் அறிக்கையால்தான் ஆ.ராஜாதன் பதவியை இராஜினாமா செய்தார் என்று வெளியிடப்பட்ட செய்தியை கருணாநிதியால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என்று ஜெயலலிதா அறிக்கை வெளியிட்டுள்ளாரே?

**பதில்:** "பூனைக்கண்ணை மூடிக் கொண்டு, உலகமே தன்னால் தான் இருண்டு விட்டது" என்று சொல்லிக் கொள்ளுமாம்! கடந்த நான்கு நாட்களாக தமிழ் நாட்டில் மழை பெய்து, அணைகள்,ஏரிகள்,குளங்கள் எல்லாம் வேகமாக நிரம்பி வருவது கூட அவரால் தான் என்று அடுத்த அறிக்யையிலே சேர்த்துகொள்ளச் சொல்லலாம்! ஜெயா ஏதோ அஸ்திரம் விட்டு அதற்காக நான் பதறுகிறேன்.வழக்கு, கைது என்றெல்லாம் அறிக்கையிலே பம்மாத்து செய்து பயமுறுத்தியிருக்கிறார்? நான்தந்தை பெரியாரின் பெருந் தொண்டன்! பேரறிஞர் அண்ணாவின் தம்பி! கோடி கோடியாக குவித்த காரணத்தால் போடப்பட்ட வழக்கில் சாட்சிகள் விசாரணையும் பெங்களூரில் சிறப்பு நீதிமன்றத்தில் தொடங்கிய நிலையில் கோட நாட்டில் குப்புறபடுத்துக் கொண்டு அறிக்கை வேறு ஒரு கேடா? (5)

## சீதையாக நடிக்கலாமா நயன்? இந்து மக்கள் கட்சி ஆர்ப்பாட்டம்

நயன்தாரா சீதை வேடத்தில் நடிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தப்படும் என இந்து மக்கள் கட்சி அறிவித்துள்ளது.

தெலுங்கில் ஸ்ரீராம் ராஜ்ஜியம் என்ற பெயரில் புதுப்படம் தயாராகிறது. இராமாயணம் கதையை இதில் படமாக்குகின்றனர். இதில் பாலகிருஷ்ணா இராமர் வேடத்தில் நடிக்கிறார். சீதை வேடத்தில் நடிக்க நயன்தாராவை ஒப்பந்தம் செய்துள்ளனர். இந்நிலையில் நயன்தாரா சீதை வேடத்தில் நடிக்க எதிர்ப்பு எழுந்துள்ளது.

இந்து மக்கள் கட்சி மாநில அமைப்பு செயலாளர் கண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, இராம னையும், சீதையையும் இந்துக்கள் கடவுளாக வணங்குகிறார்கள். சீதை பெண் இனத்துக்கு முன் மாதிரியாக போற்றப்படுகிறார். இராமாயணம் பெண் ஆசை கூடாது.ஏகபத்தினி விரதம் என்றெல்லாம் போதித்த காவியம்.

ஆனால் நயன்தாராவோ இன்னொரு பெண்ணின் கணவரை அபகரிக்க முயற்சிக்கிறார்.

அவர் சீதை நடிப்பது வேடத்தில் இந்துக்கள் மனதை புண்படுத்துவதாக அமையும். சீதையாக நயன்தாரா நடிக்கக் கூடாது. அவர் இந்த வேடத்தில் நடிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபடுவோம். முதல் கட்டமாக கோவை, திருப்பூரில் நாளை ஆர்ப்பாட்டம் நடைபெறும். படிப்படியாக அனைத்து மாவட்டங்களில் நயன்தாராவுக்கு எதிரான போராட்டம் தீவிரப்படுத்தப்படும். இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## பாரதச் செய்திகள்

# இந்தியா-ஈரான் இராஜதந்திர முறுகல்

## மதத்தலைவரின் கருத்தால் ஏற்பட்டது

இந்திய நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீர் தொடர்பாக ஈரானின் கருத்துக்கு இந்திய அரசு கண்டனம் தெரிவித்துள்ளது.

ஈரானின் அதி உயர் மதத் தலைவர் அயதுல்லா அலி கமேனி, காஷ்மீர் தொடர்பாக தெரிவித்த கருத்தை அடுத்து இந்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

சமீபத்தில் டெஹ்ரானில் ஹஜ் யாத்ரீகர்கள் மத்தியில் பேசிய கமேனி, பாலஸ்தீனம், ஆப்கான், பாகிஸ்தான், ஈராக் பிரச்சினைகளைப் பற்றிக் குறிப்பிட்டு அங்கு அமெரிக்க ஆதிக்க சக்திக்கு எதிராக அங்குள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இஸ்லாமிய சமுதாயத்துக்குள்ளது என்று தெரிவித்தார். அப்போது காஷ்மீரில் ஆதிக்க சக்திகளை எதிர்த்துப் போரிடுவதற்கும் ஆதரவளிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

அதையடுத்து டில்லியில் உள்ள ஈரான் தூதரை வெள்ளிக்கிழமையன்று அழைத்த இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் கமேனியின் கருத்து கடும் ஏமாற்றமளிப்பதாகவும் இது இந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையில் தலையிடும் செயல் என்றும் தெரிவித்தார்கள்.

அத்துடன் ஈரானின் நிலைப்பாட்டுக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஐ.நா மன்றத்தில் ஈரானின் மனித உரிமை மீறல்கள் என்று கூறப்படும் நடவடிக்கைகளுக்கு எதிரான தீர்மானத்தில் முதல் முறையாக இந்தியா வாக்களிக்கவில்லை. நேற்று முன்தினம் இரவு நடந்த அந்த வாக்கெடுப்பில் இந்தியா உட்பட 57 நாடுகள் கலந்துகொள்ளாமல் நடு நிலை வகித்தன. இது விரிவாக ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவுதான் என இந்திய வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கு முன்பு ஈரானுக்கு எதிராக ஐ.நா. மன்றத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களில் இந்தியா - ஈரானுக்கு ஆதரவாகவே வாக்களித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு ஜுலை மாதம் முதல் மூன்று சந்தர்ப்பங்களில் காஷ்மீர் போராட்டத்துக்கு ஆதரவாக ஈரான் கருத்துத் தெரிவித்திருப்பதாகவும் காஷ்மீர் நிலைமையை காஸா மற்றும் ஆப்கானிஸ்தான் நிலவரங்களுக்கு இணையாகக் குறிப்பிட்டிருப்ப தாகவும் இந்திய வெளியுறவு அமைச்சக அதிகாரிகள் கூறுகிறார்கள். (5)



அருணாசல பிரதேசத்தில் இராணுவ ஹெலிகொப்டர் ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் 11 இராணுவ வீரர்கள் பலியாகினர். ஹவாங் பகுதியில் நடந்த இந்த விபத்தில் இறந்தவர்கள் உடலை மீட்கும்பணி நடந்து வருகிறது.

# கடுமையான சவால்களை சமாளித்து இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது

## பிரதமர் மன்மோகன் சிங் விபரிப்பு



கடுமையான சவால்களை சமாளித்து இந்தியா வேகமாக முன்னேறி வருவதாகவும் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அடுத்த ஆண்டு 10 சதவீதமாக உயரும் என்றும் அந்நாட்டுப் பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

இந்தியத் தலைநகர் டில்லியில் வர்த்தகக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய பிரதமர் மன்மோகன் சிங்,

இந்தியா பல்வேறு சவால்களையும் இடையூறுகளையும் எதிர்கொண்ட போதும் அவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளித்து வேகமாக முன்னேறி வருகிறது.

எதிர்பார்ப்புகள் அதிகரித்து வரும் காலகட்டத்தில் இந்தியா உள்ளது.இக்கட்டான இந்தச் சூழ்நிலையில் இளைஞர் சமுதாயத்தின் பங்களிப்பு நம்பிக்கை அளிக்கிறது. ஏழ்மையை விரட்டினால் தான் நாடு முழுமையான வளர்ச்சியைக் காணும்.நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டு 7.4 சதவீதமாக இருந்தது. நடப்பாண்டில் 8.5 சதவீதமாக உயரும் என்ற நம்பிக்கை இருக்கிறது. அடுத்த ஆண்டு 10 சதவீதம் என்ற நிலையான வளர்ச்சியை நாடு காணும் என்று திடமாக நம்புகிறேன்.

இலஞ்சம்,திறமையற்ற ஆட்சி என்ற சூழ்நிலையில் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச்சூழலை மாற்றவேண்டும். ஊழல் அச்சுறுத்தலை திறம்பட சமாளிக்க வேண்டும்.நாட்டில் இலஞ்ச ஊழல் சம்பவங்களால் பாதிக்கப்படுவது சிறு விவசாயிகளும் குறுந்தொழில் முயற்சியாளர்களும் தான்.

அடுத்தடுத்து ஏற்பட்டு வரும் அரசியல் சிக்கல்களை எதிர்கொண்டுவருவதால் தொடர் பரீட்சைகளை சந்திக்கும் பாடசாலை மாணவனைப் போல் உணர்கிறேன்.ஒவ்வொரு முறை சிக்கல்களும் பிரச்சினைகளும் எழும் போதும் தடைகளைத் தகர்த்து அவற்றை ஒரு நல்ல வாய்ப்பாக மத்திய அரசு மாற்றிக் கொள்கிறது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்தார். (5)

# மும்பை போன்று தாக்குதல் நடத்துவதற்கு ஜேர்மனிக்குள் தீவிரவாதிகள் ஊடுருவல்

## உள்துறை அமைச்சர் எச்சரிக்கை; பாதுகாப்பும் அதிகரிப்பு

(பெர்லின்)

மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியது போல் ஜேர்மனியிலும் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக அந்த நாட்டுஉள்துறை அமைச்சர் தோமஸ் டி மெய்ஜிரெ தெரிவித்துள்ளார்.

மும்பையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் புகையிரத நிலையம், தாஜ் விடுதி உள்ளிட்ட பகுதிகளில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் அதிரடியாக புகுந்து சரமாரியாக சுட்டதில் சுமார் 200 பேர் பலியாகினர். இந்த நிலையில் மும்பையைப் போலவே ஜேர்மனியிலும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் சதித் திட்டம் தீட்டியுள்ளனர்.

இது குறித்து ஜேர்மனி உள்துறை அமைச்சர் தோமஸ் டிமெய்ஜிரெ தெரிவிக்கையில்,

இம் மாத இறுதியில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளது குறித்து மிகவும் உறுதியான உளவுத் தகவல்கள் எங்களுக்கு கிடைத்துள்ளன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் போலவே இந்த தாக்குதலையும் நடத்த திட்டமிட்டுள்ளனர். சிறிய குழுக்கள் அல்லது தனி நபர்களால் இந்தத் தாக்குதல் நடைபெறக்கூடும் .

பாதுகாப்பு படையினரும் உளவுத் துறையினரும் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். மக்களும் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

### ஆறு பேர் ஊடுருவல்

தீவிரவாதிகள் தாக்குதல் குறித்த தகவல் கிடைத்துள்ளதால் ஜேர்மன் இராணுவம் மற்றும் கடலோர எல்லைப்புற பாதுகாப்பு படையினர் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். விமான நிலையங்கள், புகையிரத நிலையங்கள், மக்கள் அதிகமாக கூடும் இடங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஜேர்மனிக்குள் நுழையும் சகல பகுதிகளிலும் இராணுவம் முழு உஷார் நிலையில் உள்ளது.

இதற்கிடையே பாகிஸ்தானை பூர்வீகமாக கொண்ட 4 தீவிரவாதிகள் உட்பட 6 பேர் ஐரோப்பாவுக்குள் ஊடுருவி இருப்பதாகவும் அவர்களிடம் செங்கன் விசா இருப்பதாகவும் பத்திரிகைகளில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

செங்கன் விசா வைத்திருந்தால் ஜேர்மன் உட்பட ஐரோப்பிய யூனியனில் உள்ள 15 நாடுகளுக்குள் தாராளமாக செல்லலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 4 பேர் கொண்ட குழுக்களாக பிரிந்து ஜேர்மனி மற்றும் இங்கிலாந்தில் தாக்குதல் நடத்த அல் –குவைதா தீவிரவாதிகள் முடிவு செய்திருப்பதாக அமெரிக்க உளவுத்துறை தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜேர்மனியில் நாளை தாக்குதல் நடத்தக் கூடும் என்று பேர்லின் நகரில் வெளியாகும் நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது.

மேலும் இந்தத் தாக்குதல்களுக்கு மூளையாக பாகிஸ்தானைச் சேர்ந்த முகமது இலியாஸ் காஷ்மீரி என்ற தீவிரவாதி இனங் காணப்பட்டுள்ளான் என்றும் ஜேர்மனியில் தாக்குதல் நடத்துவதற்காக 2முதல் 4 பேர் கொண்ட குழுக்களை அமைத்துள்ளான் என்றும் அதற்காக ஆப்கானிஸ்தான்-பாகிஸ்தான் எல்லைப் பகுதியை சேர்ந்த தீவிரவாதிகளை தெரிவு செய்து இந்தியா, அரேபியா வழியாக ஜேர் மனிக்குள் அனுப்பி வைத்துள் ளான் என்றும் அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எனவே பேர்லின் நகருக்குள் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனரா? என்பது குறித்து ஜேர்மனி பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர். தீவிரவாதி இலியாஸ் காஷ்மீரி கடந்த பெப்ரவரி மாதம் இந்தியாவில் புனே நகரில் ஜேர்மனி பேக்கரியில் நடத்த குண்டுவெடிப்பில் தேடப்பட்டு வருபவன் என்பது குறிப்பிடத்தக்கது. (5-2)

## இந்தோனேசியாவில் நில நடுக்கம்

வடக்கு சுமத்ரா தீவில் மையம் கொண்ட நில நடுக்கத்தினால் இந்தோனேசியாவில் லேசான நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இது ரிக்டர் அளவில் 5.6 ஆக பதிவாகியுள்ளது. இதன் சேத விபரங்கள் எதுவும் உடனடியாகக் வெளியாகவில்லை. (5-2)

## ஈரானிலிருந்து கடத்திய 130 கிலோஹெரோயின் நைஜீரியாவில் மீட்பு

ஈரானிலிருந்து கடத்தப்பட்ட 130 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் நைஜீரியாவில் மீட்கப்பட்டுள்ளது.


ஈரானிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட என்ஜின் உதிரிப்பாக பொதிக்குள் இந்த 130 கிலோ கிராம் எடையுடைய போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது. மீட்கப்பட்ட போதைப் பொருளின் மொத்தப் பெறுமதி 10 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அபாபாத் துறைமுகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட சரக்குக்கப்பலில் இருந்து இந்தப் போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (5)

## ஆப்கானிலிருந்து நேட்டோ படைகள் நான்கு ஆண்டுகளில் திருப்பி அழைப்பு!

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் உள்ள *நேட்டோ* படையினரை படிப்படியாக திருப்பி அழைப்பது குறித்த *நேட்டோ* நாடுகளின் மாநாடு, போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இந்நிலையில் 2014 இல் ஆப்கானில் பாதுகாப்புப் படை முழுவதும் வாபஸ் என்பது இலக்கு தானே அன்றி, இறுதியான அல்ல என்று அமெரிக்க இராணுவ மையமான *பென்டகன்* தெரிவித்துள்ளது.

ஆப்கானில் உள்ள *நேட்டோ* படைகளை 2014 க்குள் படிப்படியாக வாபஸ் பெறப்பட வேண்டும் என்று அந்நாட்டு ஜனாதிபதி ஹமீது கர்சாய்




கூறியிருந்தார். முதலில் அதைப் பரிசீலிப்பதாக தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பின் ஏற்றுக்கொண்டார்.

எதிர்வரும் 2014 க்குள் ஆப்கானின் பெரும்பகுதியில் இருக்கும் நேட்டோ படைகள், நாட்டின் பாதுகாப்பை ஆப்கான் படைகளின் வசம் ஒப்படைப்பது குறித்து கலந்தாலோசிப்பதற்காக போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் நேற்று முன்தினம் *நேட்டோ* நாடுகளின் மாநாடு ஆரம்பமாகிறது.

இந்நிலையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த *பென்டகன்* செய்தித் தொடர்பாளர் ஜியோப் மொரல்,

2014 என்பது இலக்கு தானே அன்றி இறுதி அல்ல என்று தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது, ஆப்கானின் முதன்மையான பாதுகாப்பு அந்நாட்டுப் படையினரிடம் 2014 இல் ஒப்படைக்கப்படும். இதில் இரண்டு விடயங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஒன்று 2014 என்பது 2015 வரை நீளக் கூடும். இரண்டாவது அந்நாட்டின் முழுபாதுகாப்பையும் அந்நாட்டுப் படையினரே ஏற்றுக்கொள்ளும் நிலை உருவாக்கப்படும்.

எனினும் ஆப்கான் படையினருக்கு உரிய விடயங்களில் ஆலோசனை கூறுவதற்காக அமெரிக்கா அல்லது கூட்டுப் படையினரின் சிறிய எண்ணிக்கை அங்கு தங்கியிருக்கும். இவ்வாறு மொரல் தெரிவித்தார். (5)




போர்த்துக்கல்லில் நடைபெற்ற நேட்டோ நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உள்ளிட்ட 27 நாட்டு தலைவர்களை படத்தில் காணலாம்

## மீண்டும் கைது செய்யப்படலாம்; அச்சத்துடன்ஆங்சாங் சூகி

(வோஷிங்டன்)

மீண்டும் எந்த நேரத்திலும் கைது செய்யப்படலாம் என்ற எண்ணத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என மியன்மார் நாட்டின் ஜனநாயக தலைவர் ஆங் சாங் சூகி தெரிவித்துள்ளார்.

மியன்மார் நாட்டின் தேசிய ஜனநாயக லீக் கட்சித் தலைவர் ஆங் சாங் சூகி 15 ஆண்டு காலம் வீட்டுச் சிறையில் இருந்தார். கடந்த வாரம் விடுதலை செய்யப்பட்ட அவர் தனது ஆதரவாளர்களை சந்தித்து வருகிறார்.

அமெரிக்க செய்தி அலை வரிசைக்கு வழங்கிய பேட்டியில் இது குறித்து ஆங் சாங் சூகி கூறுகை யில்,

என்னை போன்ற அரசியல் கைதிகள் ஏராளமானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பது தான் என்னுடைய தற்போதைய கோரிக்கை. இராணுவ அரசுடன் இது குறித்து பேசுவேன். இராணுவ ஆட்சியாளர்கள் என்பதால் அவர்களுக்கு உத்தரவிட்டு தான் பழக்கம். எனவே அவர்கள் என்னுடன் பேச்சுவார்த்தைக்கு ஒத்துவருவார்களா? என்பது சந்தேகமாக உள்ளது.

நாங்கள் தேர்தலில் போட்டியிட்டிருந்தாலும் ஆட்சி முறையில் மாற்றம் ஏதும் ஏற்படாது என்பதால் தான் தேர்தலை புறக்கணித்தோம்.

நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் அதிகாரம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். தற்போது நாட்டில் வறுமை தாண்டவமாடுகிறது. ஏழ்மையான நாடுகளின் பட்டியலில் மியன்மார் உள்ளது. அது மட்டுமல்லாது மற்ற நாடுகளிடமிருந்து மியன்மார் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் இராணுவ ஆட்சியாளர்கள் வருத்தப்பட்டதாக தெரியவில்லை. சீனாவைப் போல பொருளாதார முன்னேற்றம் தேவைதான். ஆனால் அந்த நாட்டை விட மியன்மாரில் மனித உரிமை மதிக்கப்பட வேண்டும்என விரும்புகிறேன்.

தற்போது சிலருக்கு பேச்சுவார்த்தை என்ன? என்பது தெரியவில்லை. எங்களுக்கு என்ன தேவை என்பதை சொல்வோம். அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை தெரிவிக்க வேண்டும். இப்படி தான் பேச்சுவார்த்தை இருக்க வேண்டும்.

ஆனால் இதெல்லாம் இராணுவ ஆட்சியாளர்கள் செய்வார்களா? என்பது தான் தற்போதைய பிரச்சினையாகும்.

மீண்டும் என்னை எப்போது



வேண்டுமானாலும் ஆட்சியாளர்கள் கைது செய்யலாம் என்ற எண்ணத்துடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.

ஏனென்றால் முன்னர் பல முறை நான் திடீரென கைது செய் யப்பட்டிருக்கிறேன். இந்தியாவின் டில்லி ஸ்ரீராம் கல்லூரியில் படித்த போது கற்ற தியான பயிற்சியை சிறையில் இருந்த போது மேற் கொண்டேன். இவ்வாறு மியன்மார் ஜனநாயகத்தலைவர் ஆங் சாங் சூகி தெரிவித்தார். (5-2)

## அதிகளவு மனித உரிமைகள் மீறல்; ஈரானிற்கெதிராக ஐ.நா.வில் தீர்மானம்

(நியூயோர்க்)

ஈரானில் மனித உரிமைகள் அதிகளவில் மீறப்படுவதாக ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அமெரிக்கா, கனடா, ஐரோப்பிய யூனியன் மற்றும் மேற்குலக நாடுகள் இணைந்து இத் தீர்மானத்தை கொண்டு வந்து வாக்கெடுப்பின் மூலம் நிறைவேற்றியுள்ளன.

இத் தீர்மானத்துக்கு ஆதரவாக 80 நாடுகளும் எதிராக 44 நாடுகளும் வாக்களித்தன. கடந்த ஆண்டு இதேபோன்று தீர்மானம் கொண்டு வரப்பட்ட போது கிடைத்த ஆதரவை விட தற்போது 6 வாக்குகள் அதிகமாக கிடைத்துள்ளன. இவ்வாக்களிப்பின் போது 57 நாடுகள் நடுநிலை வகித்தன என்பது குறிப்பிடத்தக்கது. (5-2)



உயர் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றத்தின் அனுசரணையுடன் மனித உரிமைகள் தொடர்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்குமான கருத்தரங்கு நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பருத்தித்துறை மாவட்ட நீதிபதி சிறிநிதி நந்தசேகரம், மனித உரிமைகள் தொடர்பான சட்டத்தரணி எம்.ரெமெடியஸ், சட்ட உதவி மன்ற சட்டத்தரணி கே.கேசவன் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

## விநாயகர் விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்-வண்ணை கிழக்கு கலட்டி அருள் மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான விநாயகர் விரத விஞ்ஞாபனமும் பஞ்ச முகார்ச்சனை விழாவும் நாளை திங்கட் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 19 நாட்கள் நடைபெறவுள்ளன.

இறுதி நாளான டிசம்பர் 11ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு உருத்திரா அபிஷேகம் ஆரம்பித்து பி.ப.3.40 மணிக்கு மூலவர் பூசையும் வசந்த மண்டப பூசையும் தொடர்ந்து பஞ்சமுக அர்ச்சனையும் பிள்ளையார் கதை படிப்பும் நடைபெறும்.(எ)

## சென்ஜோன்ஸ் ஆசிரியர் அணி உதைபந்தாட்டத்தில் வெற்றி

(கொழும்புத்துறை)

சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணிக் கும் மத்திய கல்லூரி ஆசிரியர் அணிக்கு மிடையில் வருடந்தோறும் நடைபெறும் உதைபந்தாட்டப்போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சென்ஜோன்ஸ் விளை யாட்டு மைதானத்தில் சென்ஜோன்ஸ் கல் லூரி அதிபர் வண.ஞானப்பொன்ராஜா தலை மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் இடைவேளைக்கு முன் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணியி னர் 3 கோல்களைப் போட்டனர்.

இடைவேளைக்குப்பின்னர் அதே அணியி னர் இரண்டு கோல்களைப் போட்டனர். இதன் மூலம் சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர் அணியினர் 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர்.

(ச-51)

# அரசு மீதான போர்க்குற்ற விசாரணையை தமிழர்கள் ஐ.நா.விடம் கோர முடியும்

## பேராசிரியர் பொய்ல்ட் ஆலோசனை

கொங்கோ குடியரசில் மேற்கொள்ளப்பட்ட மிக மோசமான மனித உரிமை மீறல்கள் குறத்து ஐக்கியநாடுகள் சபை 550 பக்கங் கள் கொண்ட அறிக்கை ஒன்றைத் தயாரித் துள்ளது .

இந்த அறிக்கையில் படுகொலைகள், பாலியல் வன்முறைகள், அழிவுகள் உட்பட பல வன்முறைகள் இடம் பெற்றுள்ளதாகவும் ஆனால் அவை தற்போதும் தொடர்வதாக வும் அமெரிக்காவும் அமெரிக்காவை தள மாக கொண்ட அனைத்துலக விதிகளுக்கான அமெரிக்க சபை தெரிவித்துள்ளது.

ஆனால் இதனை ஒத்த ஒரு போர்க்குற்ற விசாரணையை இலங்கை அரசு மீது கொண்டு வருமாறு உலகெங்கும் பரந்துவாழும் தமிழ் மக்கள் கோரிக்கைகளை முன்வைக்க முடி யும் என அமெரிக்காவின் இலினோய்ஸ பல் கலைக்கழகத்தின் அனைத்துலக விதிகளுக் கான பேராசிரியர் பொய்ல்ட் கூறியுள்ளார்.

கொங்கோ குடியரசு மேற்கொண்ட போர்க் குற்றங்கள் மீதான விசாரணைகள் 2008ஆம் ஆண்டு கனடாவைச் சேர்ந்த சட்டவியல் நிபு ணர் லூக் கோட் தலைமையில் ஆரம்பமாகி யிருந்தது.

இந்த விசாரணைகளின் போது ஆயி ரத்து 280 சாட்சிகள் விசாரணை செய்யப்பட் டனர். ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ஆவ ணங்களும் சேகரிக்கப்பட்டன.

இந்த அறிக்கை கடந்த 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் ஐ.நாவின் மனித உரிமை ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கப்பட் டது. எனினும் அதன் இறுதி அறிக்கை கடந்த ஓகஸ்ட் மாதம் பூர்த்தியாக்கப்பட்டது. இந்த அறிக்கையை ஊடகங்கள் விரைவாக வெளியிட்டதை தொடர்ந்து கடந்த மாதம் அது வெளியிடப்பட்டது.

இதனிடையே இலங்கையில் கடந்த வரு டம் நடைபெற்ற போரில் 40ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இலங்கை அரசு மிக மோசமான மனித உரிமை மீறல்களையும் மேற்கொண் டுள்ளது.

இந்த நிகழ்வுகள் கொங்கோவில் நடை பெற்றதற்கு இணையானது அல்லது அதனை விட அதிகமானது.

எனவே இலங்கை அரசாங்கம் மீது போர்க்குற்ற விசாரணைகளை கோருவதற்கு அதிக சாத்தியங்கள் உள்ளன என அமெ ரிக்காவை தளமாக கொண்ட இனப் படு கொலைக்கு எதிரான தமிழர் அமைப்பின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ச-2)

# பிரேஸில் ஜனாதிபதிக்கு இந்திரா காந்தி விருது

(புதுடில்லி)

பிரேஸில் ஜனாதிபதி லூயிஸ் இனசியோ லூலா சில்வாவுக்கு இந்திராகாந்தி அமைதி விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளை ஆண்டு தோறும் இந்திரா காந்தி அமைதி விருதி வழங்கி வருகிறது. இந்த ஆண்டுகளுக்கான விருதுக்கு பிரேஸில் ஜனாதிபதி லூயிட்ஸ் இனசியோ லூலுசில்வா தேர்வு செய்யப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இவரது பெயரை பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான சர்வதேச நடுவர் குழு தேர்வு செய்தது.

பிரேஸிலில் பசி,பட்டினியைப் போக்கி நாட்டன் வளர்ச்சிக்கு பாடுபட்டதற்காகவும் வளரும் நாடுகளிடம் குறிப்பாக இந்தியா வுடன் நல்லுறவு ஏற்படுத்தியதற்காகவும் இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக இந்திரா காந்தி நினைவு அறக்கட்டளை தெரிவித் துள்ளது.

(ச)

# பருத்தித்துறை சந்தையில் சுகாதார சீர்கேடு !

(கரவெட்டி)

பருத்தித்துறை மரக்கறிச்சந்தையில் சுகாதார சீர்கேடு காணப்படுவதாக அப்பகுதி மரக்கறி வியாபாரிகளும் பொதுமக்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை நகர சபைக்கு உட்பட்ட இம் மரக்கறிச்சந்தையில் தினமும் ஆயிரக்கணக் கான பொதுமக்கள் தமதுதேவை நிமித்தம் வந்து செல்கின்றனர்.

சில தினங்களுக்கு முன் பெய்த மழையி னால் மரக்கறிச்சந்தையின் கிழக்குப் பக்க மாக வெள்ள நீர் தேங்கி நிற்பதுடன் கழிவுப் பொருட்களும் அகற்றப்படாத நிலையில் காணப்படுகிறது.

இதனால் பல தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளது.

யாழ்.மாவட்டத்தில் டெங்கு ஒழிப்பு நட வடிக்கைகள் துரிதமாக இடம்பெற்று வரும் நிலையில் இச் சந்தையில் சுகாதார சீர்கேடான அவல நிலைகளை மாற்றியமைக்குமாறு பருத்தித்துறை நகர சபைக்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

ஆனால் எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. கிழக்குப் பக்க வாசல் மூடப்பட்டமையாலே, வெள்ள நீர் தேங்கி நின்று கழிவுப் பொருட்களுடன் துர்நாற்றம் வீசுகின்றது.

இது தொடர்பாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி, வடமாகாண உள்ளூ ராட்சி ஆணையாளர், யாழ்ப்பாண உதவி உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் பருத் தித்துறை நகர சபைச் செயலாளர் ஆகியோ ரின் கவனத்திற்கு கொண்டுவந்து 50க்கும் மேற்பட்ட வியாபாரிகளின் ஒப்பமிட்ட கடிதப் பிரதிகளை அனுப்பி வைத்துள்ளனர்.

ஆனாலும் எந்தவித நடவடிக்கையும் இல்லை. எனவே இது தொடர்பாக உரிய தரப் பினர் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-24)

# வெள்ளை வானில் கடத்தப்பட்ட இலங்கை வர்த்தகர் படுகொலை

## லண்டனில் பயங்கரம்

கோடீஸ்வர வர்த்தகரான இலங்கை முஸ் லிம் ஒருவர் பிரித்தானியாவின் தலை நகர் லண்டனில் வெள்ளை வான் ஒன்றில் குழு ஒன்றால் கடத்தப்பட்டு சித்திரவதை செய்யப் பட்ட பின் கொல்லப்பட்டுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான சலீம் அமர் வயது 33 என்பவரே படுகொலை செய்யப்பட்டவர் ஆவார்.

இவர் ஆன்குஸ் மலை சன்னிங்டல் பகுதி யில் குடும்பத்துடன் வசித்து வந்தவர். மிகவும் ஆடம்பரமாகவும் உல்லாசமாகவும் வாழ்ந் தவர். இவர் கடந்த புதன்கிழமை காயப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டார்

ஆயினும் இவரை காப்பாற்ற முடிய வில்லை. இவரை சுட்டியல் போன்ற ஆயுதம் ஒன்றால் தலையில் அடித்துப் படுகொலை செய்திருக்கின்றனர். வர்த்தக் கொடுக்கல்- வாங்கல்கள் மற்றும் சொத்துப் பிரச்சினை களே இக்கொலைக்கு காரணம் என்று பொலி ஸார் நம்புகின்றனர். இவரை கொன்றனர் என்ற குற்றச்சாட்டில் கேம்பிரிஜ் நகரத்தைச் சேர்ந்த நால்வர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கடந்த புதன்கிழமை சம்பவ இடத்தில் இருந்து பொலி ஸாருக்கு டிமிக்கி காட்டி விட்டு தப்பி சென் றிருந்தவர்களாவார்.

றோபேட்ஜோன்ஸ்(வயது-56), ரென் ரொம்ஜோன்ஸ்ரென் (வயது-24), பென் ஜோன்ஸ்ரென்(வயது-26), சாமுன் மத்தி யூஸ் (வயது-54) ஆகியோரே இச்சந்தேக நபர்கள் ஆவர். பெயர் குறிப்பிடப்பட்டிருக் கும் முதல் மூன்று பேரும் ஒரே குடும்பத் தைச் சேர்ந்தவர்கள்.

முதலாமவர் தகப்பன். ஏனைய இரு வரும் பிள்ளைகள்.நான்கு சந்தேக நபர்க ளும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டனர். அமர் கொல்லப்படுகின்றமைக்கு 48 மணித்தியாலங்களுக்கு முன் வட லண்ட னில் ஒருவர் வெள்ளை வானில் கடத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

இப்படுகொலை தொடர்பாக 21 மற்றும் 23 வயது இளைஞர்கள் இருவர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

ஆயினும் இரு கொலைகளுக்கும் சம் பந்தமில்லை என்று பொலிஸார் தெரிவிக் கின்றனர். (ச-2-5)

ஒரு செயல், அது செய்யத் தகுதியுள்ளதாக இருப்பின் ,அதை நன்றாகச் செய்து முடியுங்கள். ~ ஆங்கிலப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அமைச்சர் டக்ளஸும் இணைய வேண்டும்

ஈழத் தமிழருக்கு இப்போது காலம் மிகவும் கொடூரமானது. வியாழன் ஜென்மத்தில் ,சனீஸ்வரன் அட்டமத்தில், இராகு கேதுக்கள் வீட்டு வாசலில்.

ஒரு புறம் வேடன். மறுபுறம் நாகம். இரண்டுக்கும் நடுவே அழகிய கலைமான் என்பது போல ஈழத்தமிழினம் மானின் நிலையில் நின்று விழிக்கிறது.

எங்கள் இளம் சமூகமோ கலாசாரப் பிறழ்வில் ஊறித் திளைக்கிறது.

பக்குவமும் அனுபவமும் தமிழினத்தின் பற்றும் கொண்ட சிலர் மட்டுமே அழுகின்றனர். என்ன செய்யலாம்? எல்லாம் இழந்தாயிற்று. இனி எங்கள் இறைமை, மொழி, கலாசாரம், பண்பாடு இவைதாம் பாடையேற இருக்கின்றன.

நிலைமை இதுவாக இருக்கும் போது இறுதிக் கட்டத்திலேனும் இவற்றைத் தடுக்க முடியாதா என்ற ஏக்கமே இப்போது மனத்தைப் பிய்க்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பார்த்துக் கொள்ளும் என்ற நினைப்பில் ஒரு சாரார் காத்திருக்கின்றனர். கூடவே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அரசுடன் இணைந்து ஏதேனும் பெற்றுத் தருவார் என்ற நினைப்பில் இன்னொரு சாரார் பார்த்திருக்கின்றனர். எதுவும் நடப்பதாக இல்லை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் தங்களால் முடிந்த அளவில் குரல் கொடுக்கின்றனர். அறிக்கை விடுகின்றனர். அவர்களுக்கும் கட்சி ஊக்கம் கொடுப்பதாக இல்லை. ஏனையவர்கள் எம்.பி.பதவியில் இருந்து கொண்டு பதவியுயர்வு பெறுவது எப்படி என்று திட்டம் போடுகின்றனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் திட்டங்களும் முயற்சிகளும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் எடுபடுவதாக இல்லை.

அரசைப் பொறுத்தவரை தமது நோக்கத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இப்போது இடைஞ்சலாக இருக்கின்றார் என்ற நினைப்பே உள்ளது.

இதனால் அவர் வெளியில் எதனைக் கதைத்தாலும் அதனை செயலுருப்படுத்துவது கடினம் என்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

நிலைமை இதுவாக இருக்கையில் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன? ஒரே ஒரு நடவடிக்கை மட்டுமே உண்டு. அது தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைந்து கொள்வதுதான். இருதரப்பும் இணைந்து கொண்டு ஜனாதிபதியைச் சந்திக்க வேண்டும்.

ஐயா எங்கள் பிரச்சினைக்கு தீர்வு என்ன என்று கேட்கவேண்டும். அதேநேரம் இருதரப்பும் இந்தியாவுக்குச் செல்லவேண்டும்.

கலைஞரே; கருணாமூர்த்தியே! குருவே; மன்மோகன் சிங் பிரபுவே! தாயே, சோனியா அம்மையே! காத்தருள்க எங்களை பார்த்தருள்க என்று சம்பந்தப் பெருமானாரும் அமைச்சர் டக்ளஸும் பாட அதை மற்றெல்லோரும் சேர்ந்து பாட திருக்கதவு திறபடும். நடக்குமா?

# ஹிஸ்புல்லா போராளிகளுடன் ஜே.வி.பிக்கு தொடர்புள்ளது

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு



ஜே.வி.பி. மற்றும் அதனுடன் இணைந்த கூட்டமைப்புகள் அனைத்தும் லெபனானிய ஹிஸ்புல்லா போராளிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

அதன் காரணமாகவே ஜே.வி.பி. ஏற்பாடு செய்திருந்த அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் லெபனான் வாசியான மொஹமட் ஹாதிம் ஹ-தைத் தன் மனைவி சகிதம் பங்கு கொண்டதாக அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

எனவே ஜே.வி.பி.மற்றும் ஹிஸ்புல்லா போராளி அமைப்புகளுக்கிடையிலான நெருக்கமான தொடர்புகள் குறித்து குற்றப் புலனாய்வுத் துறைப் பொலிஸார் தற்போது பரந்துபட்ட விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

தற்போதைய நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒருநாள் கூட ஆகாத நிலையில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு மற்றும் ஜே.வி.பி.என்பன ஹிஸ்புல்லாஹ் போராளிகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பதற்கான ஆதாரங்கள் கிட்டியுள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.

அந்த வகையில் அரசுக்குத் தொடர்ச்சியான தலையிடியாக அமைந்திருக்கும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு மற்றும் ஜே.வி.பி.கட்சி என்பவற்றை அடக்கியொடுக்க ஹிஸ்புல்லாஹ் தொடர்பு என்றொரு ஆயுதம் அரசாங்கத்திடம் சிக்கியுள்ளது.

சர்வதேச சகோதரத்துவத்தின் பெயரால் தமிழ் மக்கள் மீதான அரசின் அடக்குமுறைகள் குறித்து குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் எதிர்க் கேள்வி கேட்ட ஒரே காரணத்திற்காக ஹாதிம் ஹ-தைத் ஹிஸ்புல்லா போராளியாக்கப்பட்டுள்ளார்.

இவ்வளவுக்கும் அவர் ஜனநாயக செயற்பாடுகள் மற்றும் இளைஞர் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் சார்ந்த சர்வதேச அமைப்புகளில் அங்கம் வகிப்பதுடன், அவை தொடர்பில் சர்வதேச மட்டத்தில் வலுவான தொடர்புகளைக் கொண்டிருக்கும் ஒருவருமாவார்.

அரசாங்கம் அவருக்கே தீவிரவாதி என்று பட்டம் கட்டத் துணியுமானால் இலங்கையில் சமத்துவம் கோரும் தமிழ், முஸ்லிம்களின் நிலை பற்றி என்னவென்று ஆறுதல் படமுடியும் என்று சர்வதேச இளைஞர் பேரவையின் லெபனான் கிளை விடுத்துள்ள அறிக்கையில் கேள்வியெழுப்பப்பட்டுள்ளது. (ச-5)

## இளம் குடும்பஸ்தரை காணவில்லை

யாழ்ப்பாணம் முற்றவெளியில் கடந்த தீபாவளி தினத்தன்று நடைபெற்ற கலை நிகழ்வினைப் பார்வையிடவந்த இளம் குடும்பஸ்தரைக் காணவில்லை என நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு அருகில் வசிக்கும் சந்திரகுமாரன் சிவகரன் (வயது 29) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே காணாமல்போயுள்ளார்.

உணவகம் ஒன்றில் பணியாற்றும் பிரஸ்தாப நபர் அன்று மாலை வீட்டிலிருந்து புறப்பட்டதாகவும் அதன்பின் அவர் வீடு திரும்பவில்லை எனவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

# தமிழ் கட்சிகளின் அரங்கத்தின் கூட்டம் செவ்வாய்க்கிழமை

## சிவாஜிலிங்கம் அறிவிப்பு


(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை கொழும்பிலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தின்போது தமிழ்க் கட்சிகளின் அரங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்கும்போது கையளிக்கவுள்ள மகஜர், தமிழ் அரசியல் மற்றும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதான கைதிகளின் விடுதலை ,இடம்பெயர்ந்து அகதிகளாக்கப்பட்டுள்ள மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்புடனான பேச்சுவார்த்தை என்பன தொடர்பில் ஆராயவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஈ.பி.டி.பி.,புளொட்,தமிழர் விடுதலைக் கூட்டணி ,தமிழ்த் தேசிய விடுதலை முன்னணி ,தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி,ஈரோஸ் ,ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் ஸ்ரீரெலோ ஆகியன தமிழ் கட்சிகளின் அரங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளாகும். (ச-5)

# கிறிஸ்து அரசர் பெருவிழா



மழைத்துளி இல்லாதிருத்தல் உலகத்திற்கு எத்தன்மையதோ, அத்தன்மையது நாட்டில் வாழும் குடிமக்களுக்கு அரசனுடைய அருள் இல்லாத ஆட்சி.

ஆம், அரசர்களும், அரசுகளும் வாழ்ந்து மடிந்த, தோன்றி மறைந்த உலகம் இது. இன்று எங்கும் ஜனநாயகம், யாரும் யாருக்கும் அடிமையல்ல என்ற கொள்கையில் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனாலும், ஆங்காங்கே அடிமைத்தனங்கள் தலைவிரித்தாடுகின்ற அவலமும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

இந்த நிலையில் இன்று நாம் கொண்டாடுகின்ற கிறிஸ்து அரசர் பெருவிழா, நமக்கு எதைப் பாடமாகச் சொல்கின்றது? அரசுகளின் போர்களும், அரசர்களின் ஆணவம், கொடுங்கோண்மை, அடிமைத்தனங்கள் அதனால் ஏற்பட்ட வரலாற்று காயங்கள் மறைந்து வரும் இக்காலத்தில் ஏன் இத்தகைய ஒரு விழா?

ஆம், இந்த கிறிஸ்து அரசரின் விழா நமக்கு ஒரு புதிய சிந்தனையை, ஒரு புதிய பார்வையைத் தருகின்றது.

◆ **அன்பின் அரசர்**

அன்றைய அரசர்கள் ஆணவத்தின் அடையாளங்கள். இந்த அரசர் அன்பின் அடையாளம். "நான் உங்களை அன்பு செய்தது போல் நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்" என்றார்.

அன்றைய அரசர்கள் ஆணவத்தினால் எழுந்த போர்களினால் உலகை வெல்ல நினைத்தனர். ஆனால், கிறிஸ்து அரசர் அன்பினால் மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ள நினைத்து அன்பினால் அனைவரையும் ஆட்கொண்டார்.

◆ **மன்னிப்பின் அரசர்**

அன்றைய அரசர்கள் பகைமை உள்ளம் கொண்டு அடுத்தவரோடு போரிட்டு பழியைத் தீர்த்துக் கொண்டனர். இந்த அரசரோ, "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தையும் காட்டு" என்று சொன்ன மன்னிப்பின் அரசர்.

◆ **பணிவிடையின் அரசர்**

அன்றைய அரசர்கள் மக்களும், மந்திரிகளும் தங்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும் என்று அதிகாரத்தோடு

## பரமபிதா காட்டிய பாதை

செயல்பட்டனர். ஆனால் இந்த அரசரோ, "மனு மகன் பணிவிடைப் பெற அன்று பணிவிடைப் புரியவே வந்தேன் என்று சொல்லி மக்களுக்குத் தொண்டு செய்தவர்.

◆ **கழுமரம் ஏறிய அரசர்**


அன்றைய அரசர்கள் பகைவர்களையும், மக்களையும் கழுவேற்றிக் கொன்றார்கள். இந்த அரசரோ மக்களின் மீட்புக்காக கழுவேறினார் அல்லது கழுவேற்றப்பட்டார்.

◆ **இதய அரசர்**

அன்றைய அரசர்கள் இதயத்தைத் தொலைத்த இரும்பு மன்னர்களாக வாழ்ந்தனர். இந்த அரசரோ "சுமை சுமந்து சோர்ந் திருப்போரே, எல்லோரும் என்னி டம் வாருங்கள். நான் உங்களை இளைப்பாற்றுவேன். ஏனெனில் என்நுகம் இனிது, என் சுமை எளிது" என்று சொல்லி மக்கள் இதயங்களில் வாழுகின்ற இதய அரசர்.

இன்று கிறிஸ்து அரசரின் விழாவைக் கொண்டாடுகின்றோமே. அந்த இதய அரசர் நம் இதயத்தில் வாழ்ந்து கொண்டிருக் கின்றாரா? இதயத்தில் வாழாத அரசர் இருந்து என்ன பயன்? சிந்திப்போம், செயற்படுவோம்.

*ஜோன் ரொபேர்ட்*



முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா கற்கைநெறி ஆரம்ப நிகழ்வு நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் மங்கல விளக்கேற்றுவதையும் ஆறுதல் நிறுவன செயற்திட்டப் பொறுப்பதிகாரி சுந்தரம் டிவகலாலா ஆரம்ப உரை நிகழ்த்துவதையும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறுவர் செயலக பிரதிப் பணிப்பாளர் ஜெயந்தி பீரிஸ் மற்றும் உயர் அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் மற்றும் கலந்துகொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# அமெரிக்காவில் கைதான தமிழர்கள் நாடு கடத்தப்படுவர்

(கொழும்பு)

சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள மூன்று இலங்கைத் தமிழர்களும் அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மெக்ஸிக்கோவிலிருந்து சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்த குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டு அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் நேற்றுமுன்தினம் முன்னிறுத்தப்பட்டபோது இம் மூவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

அதையடுத்து அவர்கள் மீது குடிவரவு தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்நோக்குவதுடன் நாடு கடத்தப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரபான் சிவகிரிநாதன், ரிச்சர்ட் பதிநாதர், ரமீஸ் மகேஸ்வரன் ஆகிய மூவரும் கடந்த செவ்வாய்க்கிழமை அமெிக்க கரையோர பொலிஸாரினால் புறொன்ஸ்வில்லே நகரில் லெவிவீந்திக் கருவில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அவர்கள் அமெரிக்க நீதவான் பீலிக்ஸ் றெஸியோ முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டனர். இவர்கள் மீதான குற்றச்சாட்டு தொடர்பாகவும் நீதிமன்ற நடைமுறைகள் குறித்தும் விளக்குவதற்காக மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் பயன்படுத்தப்பட்டார். இதன்போது, அம்மூவரும் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டதுடன், நதியைக் கடப்பதற்கு வழிகாட்டியொருவர் தமக்கு உதவியளித்த தாகவும் தெரிவித்தனர்.

ஏன் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு வந்தீர்கள் என நீதிபதி வினாவியபோது அச்சம் காரணமாகவே தாம் இலங்கையிலிருந்து வெளியேறியதாக மேற்படி நபர்கள் மூவரும் தெரிவித்தனர்.

செல்வந்த, சக்திவாய்ந்த குடும்பமொன்று தன்னிடம் 10 இலட்சம் ரூபா பணம் கோரி நிர்ப்பந்தித்ததாகவும் பணத்தைக் கொடுத்த பின்னரும் தான் உயிர் குறித்து அச்சமடைந்ததால் வெளியேறியதாகவும் கைதான மூவரில் ஒருவர் கூறினார். ஏனைய இருவரும் அச்சம் காரணமாக வெளியேறியதாகத் தெரிவித்தனர்.

அவர்களை அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமுலாக்கல் பிரிவின் பாதுகாப்பில் வைக்க உத்தரவிடப்பட்டது. இவர்கள் சொந்த நாட்டிற்கு நாடு கடத்தப்படும் வரை மூன்றிலிருந்து ஆறு வாரங்கள் வரை குடிவரவு முகாமொன்றில் வைக்கப்படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5,2)

# திருக்கார்த்திகை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தின் திருக்கார்த்திகை உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு ஸ்பைனாபிஷேகத்துடன் ஆரம்பமாகி பிற்பகல் 1.30 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும்.

இதேவேளை ஆலய தரிசனம், ஆராதனை மற்றும் நேர்த்திக் கடன்களை நிறைவு செய்ய விரும்புவோர் கார், வான், துவிச்சக்கரவண்டி மற்றும் லான்மாஸ்டர் வாகனங்களில் ஆலயத்திற்கு வருகை தர முடியும் என மாவை ஆதீன கர்த்தா பிரதம குரு மகாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் தெரிவித்தார். (ஏ)

# விபத்துச் சம்பவத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் -மினிவான் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவன் படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று காலை 11 மணியளவில் நுணாவில் சந்திக்கு அருகாமையில் நடைபெற்றது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நுணாவிலைச் சேர்ந்த த.பிரதீபன் (வயது-25) என்ற இளைஞனே படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-6)

# பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினராக நேற்று பதவியேற்பு

வணக்கத்துக்குரிய பேராயர் மல்கம் ரஞ்சித் நேற்று வத்திக்கான் நேரப்படி காலை 9.30 மணியளவில் கர்தினராகப் பதவி உயர்வு பெறவுள்ளார்.

இது தொடர்பாக தெமட்டகொட புனித அந்தோனியார் ஆலயத்தின் பங்குத்தந்தை றெயினால் லூசன் தகவல் தந்தார். பேராயர் மல்கம் ரஞ்சித் கர்தினராக நேற்று நியமிக்கப்பட்டார். இவர் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ரோமபுரியில் உள்ள வத்திக்கான் பேராலயத்தின் தற்போதைய திருத்தந்தையாக செயற்படும் 16ஆவது ஆசீர்வாதப்பர் திருத்தந்தை அவர்களால் கர்தினராக நியமிக்கப்பட்டார். இவரோடு சேர்ந்து மொத்தமாக 24 புதிய கர்தினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள்.

பாப்பரசரிற்கு ஆலோசனை கூறுவது அத்தோடு பாப்பரசருடைய பணிகளுக்கு பல உதவிகளைப் புரிவது அதுமாத்திரம் அன்றி தற்போதைய திருத்தந்தை மரிக்கும் பொழுது புதிய திருத்தந்தை தெரிவு செய்வதற்கும் இவர்கள் ஒன்றுகூடி ஆலோசிப்பார்கள். (ச)


# தேசிய மட்ட சாதனை



தேசியமட்ட ஆங்கில தினப் போட்டியில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைமாணவி செல்வி. புவித்தா துரியமூர்த்தி ஆங்கில சொல்வதெழுதுதல் போட்டியில்(தரம்6பிரிவு) இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.



தேசிய மட்ட தமிழ் போட்டி 2010, பிரிவு 1 ஆக்கத்திறன் போட்டியில் யா/கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய மாணவன் சிறீஸ்கந்தன் நிறோஜன் 3ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.



தேசிய மட்டத்தமிழ் தினப் போட்டிகளில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் விமலாம்பிகைபாகன் திவாகரன் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். பிரிவு 4இற்கான சிறுகதைப் போட்டியிலேயே அவர் இச் சாதனையைப் புரிந்துள்ளார்.

# உங்களின் வாழ்வாதாரத்தை மட்டுமே எங்களால் வளப்படுத்த முடியும் !

## உயிர்களை மீட்டுத் தரமுடியாது என்கிறார் பஷில்

(கொழும்பு)

போரின்போது இழந்த உங்களின் உறவுகளின் உயிர்களை எம்மால் மீட்டுத் தர முடியாது. ஆனால் உங்கள் வாழ்வாதாரத்தை எம்மால் வளப்படுத்த முடியும். இவ்வாறு வன்னியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சரான பசில் ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான், நெடுங்கேணிச் சந்தியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பிரதம விருந்திரனராகக் கலந்து கொண்ட போதே அவர் இந்தக் கருத்துக்களை கூறியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடக்கு- தெற்கு மக்கள் ஒன்றுபடும் நோக்கமாகவே வீதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இழந்த உயிர்களை எம்மால் மீட்டுத்தர முடியாது. ஆனால் ஏனைய தேவைகளை நாம் நிறைவேற்றி வைப்போம்.

இப்போது மின்சாரம் உங்கள் பகுதிக்கு ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளது. மேலும் விவசாயம், மீன்பிடி, வீதி திருத்தங்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளை நாம் நிவர்த்தி செய்து தருவோம்.

இப்பகுதியிலே நிரந்தரமாக வசிக்கும் இளமைத்துடிப்புள்ள ஒருவரை நாடாளுமன்றம் அனுப்புங்கள். அவர் உங்களின் தேவைகளை உடனுக்குடன் அறிந்து நிவர்த்தி செய்து தருவார்.

இப்போது நாங்கள் ஒன்று கூடியிருக்கும் இடத்திற்கு அருகிலுள்ள ஒட்டுசுட்டான் தான் தோன்றீஸ்வரர் ஆலயக்கேணி மிகவும் பழைமையானது.

அது சேதமடைந்த நிலையில் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனை நாங்கள் புனரமைக்கவிருக்கின்றோம்.

நீங்கள் விட்ட கண்ணீரைத் துடைத்து உங்களுக்குத் தேவையானவற்றை நேரிலே கண்டறிவதற்காகவே நாங்கள் நேரில் வந்துள்ளோம்.



நாமெல்லோரும் ஒரே மக்கள் என்ற உணர்வுடன் வாழ வேண்டும்.

வடக்கு- தெற்கு மக்கள் ஒன்றிணைய வேண்டும். நீங்கள் செய்கை பண்ணிய பொருட்களை இலகுவாகத் தென்பகுதிக்கு எடுத்துச் செல்வதற்காகவே இந்த வீதிகளைச் செப்பனிட முன்வந்துள்ளோம்.

நீங்கள் உரியவர்களிடம் உங்கள் தேவைகளைச் சொல்லி நிறைவேற்றி வைப்பதற்கு முன்வரவேண்டும் என்று அமைச்சர் பஷில் ராஜபக்ஷ கூறினார். (ச-5)

# முன்னணி வீரர் ஏமாற்றினர் நியூசிலாந்து அணி சரிந்தது

(நாக்பூர்)

முன்னணி துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் நியூசிலாந்து அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் முதலாவது இன்னிங்ஸில் 07 விக்கெட்டுக்களையிழந்து 148 ஓட்டங்களை எடுத்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகள் வெற்றிதோல்வியின்றி முடிவடைய தொடர் சமநிலையிலுள்ள தீர்க்கமான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் நேற்று நாக்பூரில் ஆரம்பமானது.

இப்போட்டி மழை காரணமாக நேற்றைய முதல்நாள் ஆட்ட தேநீர் இடைவேளைக்குப் பின்பு ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பம்முதலே அதிர்ச்சி கொடுத்தனர் இந்திய பந்துவீச்சாளர்கள்.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான குப்தில் 06 ஓட்டங்களுடனும், மக்கின் தோஸ் 04 ஓட்டங்களுடனும் சிறிசாந்தின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 16 ஓட்டங்களை எடுத்து இரண்டு விக்கெட்டுக்களை யிழந்தது.

அடுத்துக் களமிறங்கிய றெய்லர்–ரைடர் ஜோடி நிதானமான ஆட்டத்தை வழங்கினர். எனினும் ரோஸ்றெய்லர் 20 ஓட்டங்களை எடுத்தபோது இசாந்த் சர்மாவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.


இந்திய அணியினர்

தொடர்ந்து களமிறங்கிய வில்லியம்ஸன் பூச்சியத்துடன் ஓஜாவின் பந்துவீச்சிலும் அணித்தலைவர் டானியல் விக்டோரி 03 ஓட்டங்களுடன் இசாந்த் சர்மாவின் பந்துவீச்சிலும் ஆட்டமிழக்க நியூசிலாந்து அணி 51 ஓட்டங்களை எடுத்து 05 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்துத் தடுமாறியது.

அடுத்துவந்த ஹோப்கிங்ஸும் 07 ஓட்டங்களுடன் ஓஜாவின் பந்து வீச்சில்வெளியேறிஏமாற்றமளித்தார்.

இந்நிலையில் ஏழாவது விக்கெட்டுக்காக ரைடருடன் இணைந்த மக்குலம் நிதானமான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளித்தார்.

இதில் ஜெசி ரைடர் 81 ஆவது பந்தில் அரைச்சதம் கடக்க நியூசிலாந்து அணி 100 ஓட்டங்களை எட்டியது.

எனினும் ஜெசி ரைடர் 113 பந்துகளில் (5பவுண்டரிகள் உட்பட) 59 ஓட்டங்களை எடுத்து ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் றெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய சௌத்தி நிதானமாகத் துடுப்பெடுத்தாட நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் நியூசிலாந்து அணி 07 விக்கெட்டுக்களையிழந்து 148 ஓட்டங்களை எடுத்தது.

இதில் பிரண்டன் மக்குலம் 34 ஓட்டங்களுடனும், சௌத்தி 07 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் சிறிசாந், இசாந்த் சர்மா, ஓஜா ஆகியோர் தலா 02 விக்கெட்டுக்களையும் ஹர்பஜன் சிங் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# மெக்ராத் இரண்டாவது திருமணம்

(சிட்னி)

அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிளேன் மெக்ராத் இரண்டாவது திருமணம் செய்து கொண்டார்.


சாரா லியோனார்டி மெக்ராத்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின்நட்சத்திரப் பந்து வீச்சாளராக திகழ்ந்தவர் கிளேன் மெக்ராத். இவர் கடந்த 2007 ஆம் ஆண்டுசர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்றார். இவரது முதல் மனைவி ஜேன் மெக் ராத், மார்பகப் புற்றுநோய் காரணமாக கடந்த 2008 ஆம் ஆண்டுமரணமானார். இதனையடுத்து இவரது பெயரில் அறக்கட்டளை ஒன்றை ஆரம்பித்து புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியளித்து வந்தார் மெக்ராத்.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு தென்னாபிரிக்கா சென்ற இவர் அமெரிக்காவைச் சேர்ந்த சாரா லியோனாடியை சந்தித்தார். இவருடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக நெருக்கமாகப் பழகிவந்தார்.

**திருமணம்**

இதுகுறித்து இரகசியம் காத்துவந்த மெக்ராத் கடந்த வியாழக்கிழமை 28 வயதான சாராவை திருமணம் செய்துகொண்டார். எளியமுறையில் நடந்த திருமண விழாவில் மெக்ராத்தின் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். திருமணம் குறித்து கிரிக்கெட் வீரர்கள் யாருக்கும் மெக்ராத் தகவல் தெரிவிக்கவில்லை. 42 வயதாகும் மெக்ராத்துக்கு ஜேம்ஸ், ஹேறாலி என்ற இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

# ஆசிய விளையாட்டு விழாவில் பாக். கிரிக்கெட் வீராங்கனைகளுக்கு தங்கப்பதக்கம்

ஆசிய விளையாட்டுப்போட்டிகளில் மகளிர் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் அணி தங்கப்பதக்கம் பெற்றுள்ளது. சீனாவின் குவாங்ஸோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் பங்களாதேஷ் அணியை பாகிஸ்தான் அணி 10 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

ஆசிய விளையாட்டு விழாவில் இம்முறைமுதன்முறையாககிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இருபது–20கிரிக்கெட்போட்டிகளே இத் தொடரில் நடைபெறுகின்றன. இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 92 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது. பாகிஸ்தான் அணியின் சுழல்பந்து வீச்சாளர் ரஷீட் 16 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பின்னர் பாகிஸ்தான் அணி ரஷீட் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய போது 43 பந்துவீச்சுக்களில் 51 ஓட்டங்களைப் பெற்றார். இதனால்பாகிஸ்தான்அணி15.4ஓவர்களில்வெற்றியிலக்கை அடைந்தது.

பாகிஸ்தான் அணி இம்முறை ஆசிய விளையாட்டு விழாவில் பெற்ற முதலாவது தங்கப்பதக்கம் இது என்பது குறிப்பிடத்தக்கது. மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சீன அணியை ஜப்பான் அணி 07 விக்கெட்டுக்களால் தோற்கடித்தது.

ஜப்பானில் கிரிக்கெட் ஒரு சிறிய விளையாட்டு இப்பதக்கம்எமக்குபெரிய அங்கீகாரமாகுமென ஜப்பானிய அணித்தலைவி எமா குரிபயாஸி தெரிவித்தார்

# இங்கிலாந்து அணித்தலைவி புதிய சாதனை படைத்தார்

இங்கிலாந்துப் பெண்கள் கிரிக்கெட் அணித்தலைவி சார்லட் எட்வர்ட்ஸ் அதிக ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உலக சாதனை படைத்துள்ளார்.

கடந்த 17 ஆம் திகதி கொழும்பில் பி.சரவணமுத்து விளையாட்டரங்கில் நடைபெற்ற இலங்கை அணியுடனான இரண்டாவது போட்டியின் போது சார்லட் எட்வர்ட்ஸ் இச் சாதனையைப் படைத்தார்.

இது சார்லட்டின் 142–வது ஒருநாள் சர்வதேசப் போட்டியாகும். இதற்குமுன் அவுஸ்திரேலிய வீராங்கனை கரென் ரோல்டன் 141 சர்வதேச ஒருநாள் போட்டிகளில பங்குபற்றியமை இதுவரை சாதனையாக இருந்தது.

1996 ஆம் ஆண்டு தனது 16–வது வயதில் இங்கிலாந்து அணியில் சார்லட் எட்வர்ட்ஸ் அறிமுகமானமை குறிப்பிடத்தக்கது.

2005 ஆம் ஆண்டுமுதல் அவர் 67 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் இங்கிலாந்து அணிக்க தலைமைதாங்கியுள்ளார். இங்கிலாந்து ஆண்கள் கிரிக்கெட்டிலும் பெண்கள் கிரிக்கெட்டிலும் இது புதிய முறியடிக்கப்படாத சாதனையாகும்.

இலங்கை– இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி சீரற்ற காலநிலை காரணமாக கைவிடப்பட்டது. எனினும் முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி 05 ஓட்டங்களால் இத் தொடரின் வெற்றியைத் தனதாக்கியது.

தற்போது இவ்விரு அணிகளுக்கிடையிலான இருபது–20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது இருபது–20 போட்டியில் இங்கிலாந்து 08 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. மூன்று போட்டிகள் கொண்ட இத் தொடரில் இரண்டாவது போட்டி இன்று என்.சி.சி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# தோனி ஓய்வு காம்பீர் அணித்தலைவர்


மகேந்திர சிங் தோனி

நியூசிலாந்து அணிக்கு எதிராக ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இந்திய அணித்தலைவர்தோனிக்கு ஓய்வு அளிக்கப் பட்டுள்ளது.

அவருக்குப் பதில் கௌதம் காம்பீர் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.


கௌதம் காம்பீர்

இதேபோல் சேவாக்குக்கும் ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் நியூசிலாந்து அணி இந்தியாவுக்கு எதிராக ஐந்து ஒருநாள் தொடரில் விளையாடுகிறது.

# சதமடித்தனர் கலிஸ், டிவில்லியர்ஸ் சரிவிலிருந்து மீண்டது தென்னாபிரிக்கா


ஜக் கலிஸ்

(அபுதாபி)

கலிஸ்– டிவில்லியர்ஸ் சதமடித்து சாதிக்க சரிவிலிருந்து மீண்ட தென்னாபிரிக்க அணி நேற்று முதல் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 05 விக்கெட்டுக்களையிழந்து 311 ஓட்டங்களை எடுத்தது.

பாகிஸ்தான்– தென்னாபிரிக்க அணிகள் மோதும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அபுதாபியில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலாவது டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தநிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஸ்பா உல்கக் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி அறிமுகவீரர் தான்வீர் அகமட்டின் பந்துவீச்சில் சரிவைக் கண்டது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பீற்றர்ஸன் 02 ஓட்டங்களுடனும் அம்லா 04, அணித்தலைவர் சிமித் 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தென்னபிரிக்க அணி 33 ஓட்டங்களை எடுத்து 03 விக்கெட்டுக்களையிழந்தது.

எனினும் அடுத்துக் களமிறங்கிய கலிஸ், டிவில்லியர்ஸ் சதமடித்து அசத்த தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் முதலாவது இன்னிங்ஸில் 05 விக்கெட்டுக்களையிழந்து 311 ஓட்டங்களை எடுத்தது.


எ.வி.டிவில்லியர்ஸ்

இதில் ஜக் கலிஸ் 147 பந்துகளில் (12 பவுண்டரிகள், 03 சிக்ஸர்கள் உட்பட) 105 ஓட்டங்களையும், எ.வி.டிவில்லியர்ஸ் ஆட்டமிழக்காமல் 231 பந்துகளில் (11 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 120 ஓட்டங்களையும், பிறின்ஸ் 32, பௌச்சர் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அறிமுகவீரர் தான்வீர் அகமட் 04 விக்கெட்டுக்களையும் முகமட் ஹபீஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இருவேறு விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பாரதி வீதியில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத் தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயம டைந்தார்.

இந்த விபத்து நேற்றுக் காலை 7.00 மணியளவில் நடைபெற றுள்ளது. இதில் இணுவில் பாரதி வீதியைச் சேர்ந்த க.சிவஞானம் (வயது 57) என்பவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இதேவேளை உரும்பிராய் ஒஸ்கா வீதியில் மோட்டார் சைக்கிள் விபத் தில் அதே இடத்தைச்சேர்ந்த மா.விஜி (வயது 33) என்பவரே படுகாய மடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ச-6)

## அதிர்வால்...

நிலையில் இந்த அதிர்வு பல இடங் களிலும் அவதானிக்கப்பட்டிருப்ப தாக தெரிவிக்கப்படுகிறது.

வர்த்தக நிலையங்களில் உள்ள சில பொருட்கள் தூக்கி எறியப்பட்ட தென அவர்கள் கூறினர்.

எனினும் படையினரால் அகற்றப் படுகின்ற கண்ணி வெடிகள் வெடிக்க வைக்கப்பட்டபோது ஏற்பட்ட அதிர்வு களாக இது இருக்கலாம் எனவும் சில தகவல்கள் கூறுகின்றன.

குறிப்பாக நாகர்கோவில் பகுதிகளி லும் இதை போன்று கண்ணிவெடி கள் அகற்றப்பட்டு வருகின்ற நிலை யில் அங்கு வெடிக்கவைக்கப்பட்ட கண்ணிவெடிகளின் அதிர்வே இது வாக இருக்குமோ என்ற சந்தேகமும் எழுப்பப்பட்டுள்ளது.

மழைகாலம் காரணமாக இவ்வா றான அதிர்வுகள் அல்லது சத்தங் கள் அதிகமானதாக இருக்கலாம் என வும் புவியியலாளர்கள் கூறுகின்றனர்.

எனினும் இது பூமி அதிர்ச்சியோ அல்லது குண்டு வெடிப்பா என்பது பற்றி நேற்று இரவுவரை எவ்வித தக வல்களும் வெளியாகவில்லை.(ச-5)

## அரசையோ புலி...

கிய போதும் அப்போதைய அகோர நிலைமைகள் மக்களின் அனுதா பங்களை வெளிப்படுத்தின.

இவ்வாறான நிலைமையில் மருந்துத் தட்டுப்பாடுகள் நிலவிய போதும் அரசாங்கத்தினால் செஞ் சிலுவைச் சங்க உதவியுடன் மருந் துகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இறுதிக் காலங்களில் எமது முழுச் சேவையும் மருத்துவத்துறையி லேயே ஈர்க்கப்பட்டது.மருந்துத் தேவை கள்,வைத்தியர் பற்றாக்குறை என பல்வேறு விடைகளற்ற கேள்விகளே எம்முன் தோன்றியது.

இத்தகைய சூழ்நிலையில் போர்க் குற்றங்களை மதிப்பீடு செய்ய முடி யாது. அவ்வாறு நாம் குற்றங்களை நோக்கியிருந்தால் அப்பாவி பொது மக்கள் எவ்வளவு பேர் உயிர்க்காவு கொள்ளப்பட்டிருப்பர்.

இறுதி யுத்த கால மருத்துவ அனு பவங்கள் தேவைகள் போன்று இது வரையும் சந்தித்ததில்லை.

இத்தகைய அளப்பெரிய சேவை களை நாம் செய்யும் இடத்து போர்க் குற்றங்கள் தொடர்பில் தமிழீழ விடுத லைப் புலிகளையோ அரசாங்கத் தையோ குற்றம் சுமத்தி விட முடி யாது என்று தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப் புலிக ளின் நிர்ப்பந்தத்தின் பேரில் இறுதி யுத்தத்தில் உயிரிழந்த மக்களின் எண்ணிக்கையை மிகைப்படுத்தி கூறியதாக வைத்தியர் வி.சண்முக ராசா கற்றுக்கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-7)

# வாகன விபத்தில் தம்பதியர் பலி



நல்லூரில் இருந்து முறிகண்டி பிள்ளையார் கோவிலுக்கு மோட் டார் சைக்கிளில் நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக சென்ற தம்பதி யினர் படையினரின் வாகனத்து டன் மோதி பலியாகியுள்ளனர்.

மாங்குளத்திலிருந்து வந்த படை யினரின் வாகனமும் இத் தப்பதி யினர் சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டது. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழ மை மாலை இடம்பெற்ற இவ் விபத் தில் குறித்த தம்பதிகள் ஸ்தலத்தி லேயே உயிரிழந்தனர்.

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த பவுண்ராஜா செல்வராஜா (வயது 52) மற்றும் அவருடைய மனைவி செல்வராஜா நகுலேஸ் வரி (வயது 48) ஆகியோரே பலி யானவர்களாவர்.



இதேவேளை இவ் விபத்தில் காய மடைந்த 8 படையினர் கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டனர். அத்துடன் குறித்த இராணுவ வாகன சாரதி பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசா ரணைகளை மாங்குளம் பிரதேச பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (எ-1)

## முன்னாள்...

மைப்பு பிரதி அமைச்சர் விஜிதமுனி சொய்சா முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இப் போராளிகளை விடுதலை செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு இதுவரை அனுமதி வழங்க வில்லை.

இந்நிலையில் பாதுகாப்பு அமைச் சின் அனுமதி கிடைத்த பின்னரே இப் போராளிகள் விடுதலை செய்யப்பட உள்ளதாக கூறப்படுகிறது. (ச-5)

## கொழும்...

களில் இருந்து தெரியவந்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய மர்ம நபர்கள் தப்பியோடியுள்ளனர். இச் சம்பவம் குறித்து பொரளை பொலி ஸார் விசாரணை களை முன்னெடுத் துள்ளனர்.

ஜனாதிபதியின் இரண்டாம் பதவி பிரமாணம் கொண் டாட்டங்களை முன்னிட்டு பத்த டிக்கு ஒரு இராணு வத்தினர் வீதம் ஆயுதங்களுடன் கொழும்பில் நிலை கொள்ள வைக்கப் பட்டுள்ள நிலை யில் நடந்தேறி யுள்ள துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பெரும் அதிர்ச்சி யளிப்பதாக செய் தியாளர் தெரிவிக் கின்றார். (ச-5)

## ஜனாதிபதி கை...

பி.பி.சி. தொலைக்காட்சி சேவை க்கு அளித்த நேர்காணல் ஒன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டனின் ஒக்ஸ்போர்ட் பல் கலைக்கழகத்தின் சிங்கள சங்கத் தின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி பிரிட்டனுக்கு விஜயம் செய்யவுள் ளார்.

ஜனாதிபதியின் பிரிட்டன் விஜ யத்தின் போது அவரை சிரமத்தில் ஆழ்த்தும் வகையில் சில தமிழ் புலம்பெயர் செயற்பாட்டாளர்களும் சில சிங்களவர்களும் முயற்சி மேற் கொண்டு வருவதாக பத்திரிகை சுட் டிக்காட்டியுள்ளது.

இன ஒடுக்குமுறை மேற்கொள் ளப்பட்டதாகத் தெரிவித்து புத்தகங் கள் அச்சிடப்பட்டுள்ளதாகவும் இதில் ஜனாதிபதி, பாதுகாப்புச் செயலாளர், பொருளாதார அபிவிருத்தி அமைச் சர் ஆகியோரின் படங்கள் உள்ள டக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக் கப் படுகிறது.

தற்போதைய இராணுவத் தள பதி ஜகத் ஜெயசூரியா, மேஜர் ஜென ரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட இரா ணுவத்தைச் சேர்ந்த 182 உயர் அதிகாரிகளின் படங்களும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளதாக குறிப் பிடப்படுகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கைது செய்யப் பட்டால் அவரை விடுவிக்க பிரிட்டன் அரசால் ஒன்றும் செய்ய முடியாது என அவர் கூறினார். (ச-5)

## சரத் பொன்சேகா...

கப்பட்டிருந்தார்.

வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த அவரின் உடல்நிலை யில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து அவர் மீண்டும் சிறைக் கூடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாகசிறைச் சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின் றன.

ஆயினும் சிறைச்சாலை மருத் துவமனையில் அனுமதிக்கப்பட் டுள்ள சரத் பொன்சேகாவின் செய லாளர் கப்டன் சேனக டி சில்வாவும் அவரும் பரஸ்பரம் உரையாடிக் கொள்வது தடுக்கப்படுவதற்காகவே அவர் மீண்டும் சிறைக்கூடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக அனோமா பொன்சேகா குற்றம் சாட்டியுள் ளார். (ச-5)

# மரண அறிவித்தல்



## விசுவலிங்கம் யோகநாதன்

(இளைப்பாறிய துறைமுக அதிகார சபை உத்தியோகத்தர்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் திருகோண மலையை வதிவிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் யோகநாதன் அவர்கள் 19.11.2010 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் நாகம்மா தம்பதியினரின் அன்பு மகனும்,காலஞ்சென்ற நாகநாதன் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற சோமேஸ்வரியின் (இளைப்பாறிய ஆசிரியை தி/ பெருந்தெரு விக் னேஸ்வரா ம.வி) அன்புக் கணவரும், பாமதி (ஜேர்மனி), அகிலன்(லண்டன்), சாருமதி(கனடா), சுபமதி(பிரதேச செயலகம் வவுனியா),சுடர்மதி (ஆசிரியை தி/ஸ்ரீ கோணலிங்க மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சத்தியேஸ்வரன் மற்றும் தயாநிதி(லண்டன்),சபேசன்(கனடா), பரந்தாமன்(அதிபர், வவுனியா), நவ னேசன் (துறைமுக அதிகார சபை, திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனும்,

பிரசாத், சாம்பவி, வினோத், ரதீபன், ரதீசன், ஓவியா, கவின், செழியன், ஹரிணி ஆகியோரின் அன்புத் தாத்தாவும்,

சபாநாதன் (ஓய்வுபெற்ற SLDO), DR.வேதநாதன், மகேஸ்வரநாதன் (மின் முகாரி, சீமெந்துக் கூட்டுத்தாபனம்,KKS) மீனாட்சி (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்), காலஞ்சென்ற புண்ணியநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

தவமணி (ஓய்வுபெற்ற அதிபர்), மாலினிதேவி(ஓய்வுபெற்ற அதிபர்), சொர் ணம்மா(ஓய்வுபெற்ற ஆசிரியை), அமரர்கள் நவநீதகிருஷ்ணன் (வருமான வரித் திணைக்களம்), பரமலிங்கம்(வர்த்தகர்), மங்கையற்கரசி(ஆசிரியை) மற்றும் இரத்தினேஸ்வரி(ஓய்வுபெற்றஆசிரியை),சண்முகானந்தன்(ஆசிரியர் -வலம்புரி, ஓய்வுபெற்ற படவரைஞர்),ஜெகதீஸ்வரி(ஓய்வுபெற்ற தேசிய சேமிப்பு வங்கி உத்தி யோகத்தர்)ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு.திருமதி கிருஷ்ணசாமி, திரு.திரு மதி சுந்தரலிங்கம், திரு.திருமதி கோபாலசுந்தரம், அமரர் DR.பரராசசிங்கம், திரு. திருமதி காளிக்குட்டி (திருமலை) ஆகியோரின் சம்பந்தியும்,

பங்கசாம்பாள்,பத்மநாதன் (ஓய்வுபெற்ற அதிபர்), வனஜா(ஓய்வுபெற்ற அதிபர்), அன்னலிங்கம் (குகன் மோட்டார் வவுனியா)ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை (22.11.2010) பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று திருகோணமலை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

11, கோணேசபுரம், உவர்மலை, திருகோணமலை. குடும்பத்தினர் (சி-1654)


**தேவை**

**1. Sales Rep**

தேயிலை நிறுவனம் ஒன்றிற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.சாரதி அனுமதிப் பத்தி ரம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

**2. சாரதி தேவை [ கனரக வாகனம்](A/D Licence)**

தங்கள் சுயவிபரக்கோவையை கீழ்க்காணும் முகவரிக்கு 26/ 11/ 10இற்கு முன் அனுப்பி வைக்கவும்

முகாமையாளர்
248 ,பிறவுண் றோட் ,யாழ்ப்பாணம். (2802)

**Mini Note Book விற்பனைக்கு**

புத்தம் புதிய Mini Note Book விற்பனைக்கு உண்டு.
Intel Atom 1.66Mhz
HDD250Gb
1GB DDR2
Web Cam
39,800/=
1 வருட உத்தரவாதத்துடன்
தொடர்பு: 077 1350476

**மணமகள் தேவை**

அவுஸ்திரேலியாவில் தொழில்புரியும் B.Com,மூல நட்சத்திரம், செவ்வாய் குற்ற மில்லாத 30 வயது மணமகனுக்கு,சிங்கை அரச குடும்ப பெற்றோர் ,யாழ்ப்பாண இந்து வேளாளர் தொழில் தகைமையுள்ள மண மகளை தேடுகின்றனர்.அவுஸ்திரேலியா விரும்பத்தக்கது.
தொடர்பு: 0757390195 (3102)

Network Software Engineering
New Batches
Government Schol.
USA,UK பல்கலைக்கழகங்களில் Master Degree
BIT, CIMA-UK, WEB Master-Canada
Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL
MCS Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
Closing Date 22.11.2010
324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org


இப்பத்திரிகை வலம்புரி அன். கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.